கிராம நலம்

மே '62 13 ந.பை

நீலகிரியிலே மண்வளப் பாதுகாப்பு

நீலகிரி மாவட்டத்தில் மண் அரிப்பைத் தடுக்கும் புதிய அபிவிருத்தித் திட்டங்கள், விவசாயத் துறையினரால், சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் இத்துறையில் விசேஷ அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன.

நவீன நாகரிகத்தின் ஆயுள்

"பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வழங்கி வந்தது தற்கால நாகரிகம் என்று கூறுவது தவறு. இந்த நாகரிகம் பிறந்த தேதியை நாம் நிர்ணயித்துச் சொல்ல முடியும். நவீன நாகரிகம் என்ற பெயரால் வழங்கி வருவதில் பல அம்சங்களை, எனக்குச் சக்தி யிருந்தால், அழித்து விடுவேன், அல்லது அடியோடு மாற்றி விடுவேன் என்பது நிச்சயம். அவ்வாறு செய்ய முயற்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது. அது வெற்றி பெறுமா, இல்லையா என்பது ஆண்டவனைப் பொறுத்தது."

—மகாத்மாவின் மணிமொழி

கிராம நலம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 7 | மே 1962 | படி 8

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை நிறைவேற்றுவதிலே, அரசாங்கம் பின்பற்றி வரும் புதிய கொள்கை—ஜனநாயக அடிப்படையில் அமைந்த சிரிய கொள்கை—பொது மக்கள் அறிந்ததே. அதையொட்டியே, புதிய பஞ்சாயத்து நிர்வாகத்தில், பொதுஜனத் தலைவர்களிடம், மக்கள் நலனுக்கான பொறுப்புகளைப் படிப்படியாகப் பகிர்ந்தளிக்கும் திட்டம், வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. "அனுபவ ரீதியாக ஏற்படும் சிக்கல்களையும், கஷ்டங்களையும் ஆர அமர ஆலோசித்து, அவ்வப்போது வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க, அரசாங்கம் தயங்காது" என்ற கருத்தை, முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், அடிக்கடி வற்புறுத்திவருவதோடு, செயலிலும் காட்டி வருகிறார்.

சட்டத்தை நிறைவேற்றுவதில், அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளையும், எதிர்பாராத சூழ்நிலைகளையும், பொதுஜனத் தலைவர்களும், அதிகாரிகளும், கலந்தாலோசித்து, தேவையான நடவடிக்கைகளை, உடனடியாக மேற்கொள்வதற்கு, புதிய ஏற்பாடு ஒன்று சமீபத்தில் செய்யப் பட்டுள்ளது. அதாவது, தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில், "பஞ்சாயத்து அபிவிருத்திக்கான ஆலோசனைக் குழுக்கள்" (Consultative Committees on Panchayat Development] மூன்று, இப்போது அமைக்கப்பட்டுள்ளன. (இவற்றைப் பற்றிய அரசாங்க உத்தரவின் முழு விவரத்தை, பகுதி II, பஞ்சாயத்து அரசிதழ் v-viii ம் பக்கம் பார்க்கலாம்.)

இந்த மூன்று குழுக்களில், முதலாவது குழு, பஞ்சாயத்து நிர்வாகம், மராமத்து வேலை, ஆகியவற்றைக் கவனிக்கும். இரண்டாவது குழு, விவசாயம், தொழில் ஆகியவை பற்றிய திட்டங்களைக் கவனிக்கும். மூன்றாவது குழு, சமூக நலப் பணித் திட்டங்களைக் கவனிக்கும். இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை, இந்த ஆலோசனைக் குழுக்கள், முறைப்படி தொழில்பட, அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பு, பஞ்சாயத்து அபிவிருத்திக்கான கருத்தரங்குகள் (Panchayat Development Seminars), சென்னை மாநிலக் கல்லூரியில், நடைபெற்ற செய்தி, பலருக்கு நினைவிருக்கலாம். அதிகாரிகள், பொதுஜனப் பிரதிநிதிகள் ஆகிய இரு சாராரும், பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமான கருத்துக்களையும், அனுபவங்களையும், தமக்குள் தாராளமாகப் பரிமாறிக்கொள்வதற்கு, அந்தக் கருத்தரங்குகள் எவ்வளவு தூரம் பயன்பட்டன என்பதை, அனுபவ பூர்வமாக அறிய முடிந்தது. அந்த அனுபவத்தையொட்டி, அரசாங்க உத்தரவுகளும், நடைமுறை விதி வகைகளும் உருவான செய்தி, பஞ்சாயத்துத் துறையில் பணி புரியும் அனைவரும் உணர்ந்திருப்பார்கள்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக்களில், எல்லா அமைச்சர்களும், முக்கிய அதிகாரிகளும், மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளும் (அதாவது, நிலைக் குழுக்களின் தலைவர்கள்), ஆகியோர் உறுப்பினர்களாய் இருந்து பணியாற்று வார்கள். எனவே, பஞ்சாயத்து நிர்வாகத்தின் எல்லா விஷயங்களையும், பொதுவான முறையில் ஆராய்ந்து பார்த்து, தக்க ஆலோசனை கூறும் அரிய வாய்ப்பு, இந்தக் குழுக்களுக்கு ஏற்பட்டுள்ளது. மக்களின் பொறுப்பாட்சியில், முழு நம்பிக்கை கொண்ட எல்லோரும், பஞ்சாயத்து நிர்வாகத் துறையில் செய்யப்பட்டுள்ள இந்தப் புதிய ஏற்பாட்டை, மனமுவந்து வரவேற்பார்கள் என்று நம்பு கிறோம். இவ்வாண்டு மே மாதத்தில் கூடப்போகும் பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் முதற் கூட்டம், இத் துறையில் சிறந்த வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்.

கிராமப் பொருளாதார நிலையும் வேலை வாய்ப்புக்களும்

(திரு பி. ராமராஜ் எம்.ஏ., விரிவுரையாளர், கிராமியக் கல்லூரி, இராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம்.)

["கிராமப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவேண்டும்; கிராமங்களில் வளம் பெறுக வேண்டும். இதுவே புதிய பஞ்சாயத்து ஆட்சியின் குறிக்கோள். இதை எப்படி நிறைவேற்றுவது ? உபயோகமான யோசனைகள் இக்கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளன — ஆசிரியர்.]

"இந்தியா கிராமங்களிலேயே வாழ்கிறது" என்று காந்தியடிகள் கூறினர். நம்நாட்டு மக்களின் நூற்றுக்கு எண்பது பேர் கிராமங்களில் வசிக்கின்றனர். முன்பு இந்தியா வலுவுடைய நாடாக இருந்ததற்குக் காரணம், கிராமங்கள் வலுவாகவும், செழிப்பாகவும் இருந்ததே. ஆனல் இன்று நம் சமுதாயப் பொருளாதார வாழ்வு அவ்வளவு சீரானதாக இல்லை. இந்த நிலையை மாற்றி, ஆற்றல் மிக்க ஒரு சமுதாயத்தை நிர்மாணித்துத் தொழில் நுட்பத் திறமையும் நவீன விஞ்ஞானத்தையும் பயன்படுத்தி நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இத்தகைய பொருளாதார சுதந்தரம் அடையும்போதுதான் மக்களாட்சி முழுநிலை அடைகிறது. இந்த இலட்சியத்தை அடையத்தான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஆனல் இத்திட்டங்களால் பணம் படைத்தோரும் பட்டண வாசிகளுமே பலன் அடைகிருர்களே தவிர, இந்தியாவின் முதுகெலும்பான கிராமவாசிகள் தக்க பலன் பெறவில்லை.

பட்டணத்திலும் கிராமத்திலும் உள்ள வருமான வேறுபாடு மிக அதிகாக உள்ளது. 80 சத வீத மக்களான கிராமத்தாரின் வருவாய் நாட்டு வருமானத்தில் 48 சத வீதம்: அதேபோழ்து 20 சத வீத மக்களான பட்டண வாசிகளின் வருவாய் நாட்டு வருமானத்தில் 52 சத வீதமாகும். எனவே கிராம மக்களின் சராசரி வருமானம் பட்டண மக்களின் வருமானத்தை விட மிகக் குறைவு.

திட்டங்கள் காரணமாக கிராமத்தில் வேலையில்லாதோரின் எண்ணிக்கைக் குறைந்துகொண்டு வருவதாகச் சிலர் எண்ணலாம். ஆனல் இரண்டாவது விவசாயத் தொழிலாளர் விசாரணைக் குழுவினரின் அறிக்கையைப் பார்த்தால் இந்தக் கருத்துத் தவறுனது என்பது புலனுகும். மக்கள் தொகை அதிகரிப்பாலும் வேறு சில காரணங்களாலும் இவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதோடு மட்டுமன்றி அவர்கள் நிலையும் மோசமாகியுள்ளது. இரண்டாவது திட்ட ஆரம்ப காலத்தில் விவசாயிகள் ஆண்டில் 90 நாட்கள் வேலையின்றி இருந்ததாகக் கூறப்பட்டது. 1956-இல் இரண்டாவது விவசாயத் தொழிலாளர் விசாரணைக் குழுவினரின் கணக்குப்படி விவசாயிகள் ஆண்டில் 128 நாட்கள் வேலையின்றி இருந்தனர் எனத் தெரிய வருகிறது. திட்டங்களின் உண்மையான பயன் கிராம மக்களுக்கு எட்டாததன் காரணமாகவே வேலையில்லாத காலம் 90 நாட்களாக இருந்தது, 128 நாட்களாகி அதிகமாக இருக்கின்றது. இங்ஙனம் அதிக நாட்கள் வேலையின்றி இருப்பதால், தனி நபர் வருமானமும் குறைந்து கொண்டேதான் செல்கின்றது. 1950-51-இல் அகில இந்திய தனி நபர் வருமானம் 225 ரூபாயாகவும், விவசாயக் கூலியின் வருமானம் 104 ரூபாயாகவும் இருந்தது. 1956-57-இல் அகில இந்தியத் தனி நபர் வருமானம் 291 ரூபாயாகக் கூடியுள்ளது. ஆனல் விவசாயக் கூலியின் வருமானம் 99.4 ரூபாயாகக் குறைந்து உள்ளது. இந்தப் புள்ளி விவரங்களின் துணையால், நாடு செல்வமடைந்து வந்த போதிலும் கிராம மக்கள் திட்டங்களின் பலனைப் பெருமல் வறுமையிலேயே வாடுவதைக் காணலாம்.

கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த....

இந்த நிலை ஏற்படக் காரணமாக இருந்தவற்றை ஆராய்ந்து, பொருளாதாரத் துறையில் பின்தங்கி நிற்பவர்கள் முன்னேறுவதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்று ஆலோசனை கூறும்படி திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. திரு. அண்ணுசாகிப் சகஸ்ரபுத்தே, திருமதி சுசேதா கிருபளானி, சமுதாயப் பணித் துறைப் பிரமுகர்களான மற்றும் ஐவர் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள். அரசாங்கத்திடம் அண்மையில் சமர்ப்பித்த தங்கள் சிபார்சுகளில் கிராமப் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்த பல வழி முறைகளைஇக் குழுவினர் கூறியிருக்கின்றனர்.

கிராமக் குடும்பங்களின் நிலைபற்றிக் கூறுகையில், ஆண்டிற்கு 1,000 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் வரும் குடும்பங்களே ஏழைக் குடும்பங்கள் எனக் கூறுகின்றனர். கிராம மக்களில் இவர்கள் 80 சத வீதம் இருக்கின்றனர். ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் உள்ளவர்கள் 50 சத வீதமாக உள்ளனர். காந்தியடிகளின் "அந்த்யோதயா" (Antyodhya) கருத்துப்படி, இவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்.

ஏழைகளின் பொருளாதாரப் பிற்போக்குக்குரிய காரணங்களைக் குழு பரிசீலிக்கையில் சாதிமுறை, நிலப்பிரபுத்தவ முறை இவற்றில் ஏற்பட்ட சமுதாய அமைப்பும் மக்கள் தொகைக்கும் வசதிகளுக்குமிடையே ஏற்றத் தாழ்வு நீடிப்பதும் தான் இதற்குக் காரணம் எனக் கூறுகிறது. ஆகவே ஏழைகளுக்காக விவசாய அபிவிருத்தி, பொது மராமத்து வேலைகளில் வேலைக்கு உத்திரவாதம் அளித்தல், கிராம மின்சாரத் திட்டம், கூட்டுறவு... படி, சமுதாய நல அபிவிருத்தி நிதிகளை பூர்ண... வுக்கு உபயோகித்தல், கல்வி வசதிகளை விரிவாக்குதல் ஆகிய நடவடிக்கைகள் பற்றி குழு பல முக்கிய சிபார்சுகளைச் செய்துள்ளது.

பொது மராமத்து வேலைகளுக்கு இக்குழு மிக முக்கியத் துவம் கொடுத்துள்ளது. இவைகளின் மூலமாகத்தான் ஏழைகளுக்குத் துரிதமாகவும், பரவலாகவும் நிவாரண மளிக்க முடியும். நிலமீட்சி, மண்வளப் பாதுகாப்பு நீர்ப்பாசனத் திட்டங்கள், வெள்ளத் தடுப்பு, ரஸ்தா அமைப்பு போன்ற திட்டங்கள் இதில் உட்படுத்தியுள்ள னர். இத்தகைய வேலைகளை விவசாய வேலையில்லாத சமயத்தில் நடத்தினால் மிக உதவியாக இருக்கும். அப்படியில்லாமல் வேறு சமயங்களில் நடத்தினால் இதன் முழுப்பலனும் இல்லாமற் போய்விடும். இத்தகைய வேலைகளினால் பலருக்கு வேலை வாய்ப்பும் அதனால் வரு மானமும் கிடைப்பதோடன்றி, எதிர் கால நன்மைக்கும் இவை மிக உதவியாக இருக்கும். நிவாரண முறையில் இத்திட்டத்தை மேற்கொள்வது நல்லது. கூடுமானவரை யும் இத்திட்டங்களை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் மூலம் ஒப்பந்த முறையில் அமுல் நடத்தினால், சமூகத்தின் பணம் தனிப்பட்ட சிலரிடம் குவிவதும் ஓரளவுக்குத் தடுக் கப்படும்.

கிராமங்கள் தொழில் மயமாக வேண்டும்

கிராமத்திலுள்ள "கடையனையும் கடைத்தேற்ற," கிராமங்களைத் தொழில் மயமாக்குவதும் மிக இன்றி யமையாததாகும். கிராமங்களில் பக்குவம் (Processing) செய்யும் தொழில்களும், குடிசைத் தொழில்களும் இருந்து ஓரளவுக்கு நிலைமை சமாளிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய தொழில்களுக்குக் குறைவான மூலதனமே தேவைப்படுவதாலும், இவைகளால் நிறைய வேலை வாய்ப்புக்களை அளிக்க முடிவதாலும் நமது திட்டங்களில் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டத்தில் "கார்வே குழு"-வின் சிபார்சை அடிப்படையாகக் கொண்டு, கிராமத் தொழில் களுக்கும் சிறு தொழில்களுக்குமாக 200 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இது போலவே முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் 31 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இது போலவே மூன்றாவது திட்டத்திலும் 250 கோடி ரூபாய் செலவிடுவதாக உள்ளது. திட்டக் குழுவின் நிதியைத் தவிர, கதர், கைத்தறி மற்றும் கைநுட்பத் தொழில்கள் ஆகியவற்றின் அகில இந்திய போர்டுகளும், கிராமத்தின் பொருளாதார வாழ்வைச் சீர்படுத்த அயராது பாடுபடு கின்றன.

"வளர்ந்து வரும் கிராமப் பொருளாதாரமாகிய விரிவான அடித்தளத்தின்மேல் ஒரு தொழில் கோபு ரத்தை அமைக்க வேண்டும்" என்று "கார்வே குழு" கூறியதற்கிணங்க, கிராமத்தைத் தொழில் மயமாக்கும் திட்டம் ஈடேற, குவிதல் முறையின்றி தொழில்கள் யாவும் நாடெங்கும் பரவல் முறை ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கிணங்க சிறு அளவில் நவீன தொழிற்சாலைகள் கிராமப் புறங்களிலும் ஏற்படுத்தலாம். இங்ஙனம் கிரா மங்களிலேயே புதுத் தொழில்கள் ஏற்படுவதினால் வேலை வாய்ப்புக் கிடைப்பதோடு மட்டுமின்றி வேறு பல நன்மை களும் கிடைக்கும்.

கிராம மக்களில் பெரும்பாலோர் நிலத்தையே நம்பி யுள்ளனர். முழுநேர வேலையில்லாமற் இருந்தால்கூட பலர் ஊரை விட்டு வெளியே சென்று வேலை பார்க்க விரும்புவதில்லை. தவிர, வேலையின்றி இருப்போரும், பிறந்த மண்ணின்மேல் உள்ள பாசத்தால் வேலை தேடி வேறிடம் செல்வதில்லை. தவிர, நகர்ப்புறங்களிலேயே தொழில்கள் துவங்குவதால், புதிய சேரிகள், ஜன நெருக்கம் போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக் கிறது. இத்தகைய நிலைகளையெல்லாம் எண்ணித்தான் கிராமங்களிலேயே தொழிற்சாலைகளை அமைப்பது நலம் என எண்ணுகின்றனர். அண்மையில் மதுரை அலங்கா நல்லூரில் நடந்த கிராமதான மாநாட்டிலும் இந்த உண்மையே வற்புறுத்தப்பட்டது.

புதுத்தொழில்களை நிறுவும்போது கிராமத்தின் தேவை, வசதி இவற்றிற்கேற்ற தொழில்களை நிறுவவேண்டும். தற்போது, கிராமங்களுக்கு மின்சார வசதி, நல்ல போக்கு வரத்து வசதி ஆகிய யாவும் இருப்பதால் கிராமப்புறங் களில் தொழில்கள் அமைப்பதில் சிக்கல் இராது.

சிறு தொழில்களை வளர்க்க அரசு பல முறைகளைக் கையாண்டுவருகின்றது. அரசாங்கத்திற்கு வேண்டிய சில வகைப் பண்டங்களை கிராமத் தொழில்களிலும், சிறு தொழில்களிலும் இருந்தே பெறவேண்டுமென்றும், பெருந்தொழில்பண்டங்கட்கும் அவற்றிற்குமிடையே உள்ள விலைவித்தியாசத்தை அனுமதிக்க வேண்டும் என்றும் அரசாங்கம் முடிவு எடுத்துள்ளது. ஆனால் இத்தகைய அரசாங்கச் சலுகைகளையே எப்போதும் எதிர்ப் பார்த்திருப்பது என்பது தவறாகும்.

புதிதாகக் கிராமங்களில் துவங்கும் தொழில்கள் பழைய முறையிலேயே இல்லாமல் புதிய கருவிகளையும், புதிய முறைகளையும் கையாளும் தொழில்களாக இருப்பது மிக வும் நல்லது. அப்படி இருந்தால்தான் மற்ற தொழில் களுடன் போட்டியிட்டுச் சமாளிக்க முடியும். தவிர இங்கு தயாராகும் பொருள்கள் மாறிவரும் மக்கள் விருப்பத் திற்கேற்ப இருந்தால்தான் நல்லது. இந்தத் துறைகளில் அரசு பல வகைகளில் உதவி வருகின்றது. இது தவிர பொருள் விற்பனை, நிதி உதவி ஆகிய துறைகளிலும் அரசு செய்து வரும் உதவி மிகச் சிறப்பாக உள்ளது. தேசிய சிறு தொழில் கார்ப்பரேஷன், பொருள் விற்பனைக்கு பல இடங்களில் மொத்த விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி யுள்ளது. பொருட்களுக்கு "ஜனசேவக்" என்ற வாணிகக் குறி (Trade Mark) ஒன்றைக் கையாண்டு விற் பனையைப் பெருக்க உதவுகிறது.

இந்தியா தொழில் மயமாகிக் கொண்டு வருகின்றது. அதற்குத் தக்கப்படி கிராமத் தொழில்களும் அமைய வேண்டும். மின்சாரம், நவீன கருவிகள் ஆகியவைகளை உபயோகித்து புதிய எந்திர சாதனங்களை உற்பத்தி செய்வது சாலச் சிறந்தது. இத்தகைய தொழிற்சாலைகளை "ஊட்டும் தொழில்கள்" (Feeder Industries) என்று

[5-ம் பக்கம் பார்க்க.]

கிராமச் சீரமைப்பில் ஆசிரியர் பங்கு

[திரு. கே. எஸ். சுப்பிரமணியம்]

[ஆரம்பக் கல்வி பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்று தமிழ் இலக்கியம் கூறுகிறது. அழியாச் செல்வமான கல்விச் செல்வத்தை வாரிவழங்கும் ஆசிரியப் பெருமக்கள், "கிராம மறுமலர்ச்சித் துறையில்" எப்படிப் பணியாற்றலாம் என்பது பற்றி விவரிக்கிறது இக்கட்டுரை—ஆசிரியர்.]

"பணி செய்து கிடப்பதே என் கடன்" என்பதையே தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார், அறம் காத்த அண்ணலான காந்தியடிகள். பரந்து கிடக்கும் இந்தியாவின் எழு லட்சம் கிராமங்களைத் தனது ஜீவநாடி எனக் கருதினர் அவர். கள்ளம் கபடற்று, சூதுவாதறியாது, வாழ்ந்துவரும் கிராம மக்களின் நலனுக் காகப் பாடுபடுவதைத் தனது கடமையெனக் கொண்டிருந் தார். கிராம மக்களோடு இயைந்து வாழ்ந்தாலே தனி இன்பங் கண்டார்.

அண்ணல் காட்டிய கிராமப் புனருத்தாரணத்தில், ஆசிரி ரியப் பெருமக்களின் பங்குதான் பொறுப்பு வாய்ந்ததாக இருக்கின்றது. பள்ளிக்கு வரும் சிறு குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதோடு மட்டும் அவர்கள் கடமை முடிந்து விடுவதில்லை. பள்ளி நோக்கி வரும் அச் சிறுவர் சிறுமியரின் உடல் சுத்தம், உள்ளத்தூய்மை, நடையுடை பாவனை, அச்சிறுவர் சிறுமியரின் இல்லத் தூய்மை, பெற்றோரின் நடவடிக்கைகள், கிராமச் சுற்றுப்புறத்தின் துப்புரவு, விவசாயம், குடிசைத் தொழில், ஆகிய இவை களிலெல்லாம் அவர்கள் நாட்டம் செலுத்துதல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும், ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஆசிரியர்கள் கிராமச் சீரமைப்பிற்காக ஒதுக்கிக்கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தினால், அவர்கள் இருவித நன்மைகளை அடைகிறார்கள். ஒன்று, தங்களது குடும்பக் கவலைகளை ஓரளவிற்கு மறக்க இயலுகிறது. இரண்டாவது, மற்றவருக்கு உதவுவது.

ஒவ்வொரு கிராமத்திலும், அங்கு பணிபுரியும் ஆசிரியர் களுக்கு நல்ல மதிப்பு உண்டு. கிராம மக்கள் ஆசிரியர் களைப் பெரிதும் நம்புகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஆசிரியர்கள், கிராம மக்களிடம் காணும் எந்தத் துர்ப்பழக்கத்தையும் அகற்றிவிடலாம். தான் நடக்கும் முறையைக் கொண்டு, மற்றவர்கள் தன்னைப் பின்பற்றும்படி செய்தல் வேண்டும். உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டைப் பள்ளியிலே பயிலும், பிஞ்சு உள்ளங்களில் எழாமலிருக்கும்படி ஆசிரியர்கள் கண்காணித்து வருதல் வேண்டும்.

"சுத்தம் சோறு போடும்"

கிராமத்தில் துப்புரவுதான் முதலில் கவனிக்க வேண் டிய விஷயம். வாரத்தில் ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து, ஆசிரியர்கள், பள்ளிச் சிறுவர் சிறுமியர், கிராம நலத்திற் காகப் பாடுபட விரும்பும் கட்சி சார்பற்றவர்களுமாகச் சேர்ந்து, கிராமத்தைச் சுத்தம் செய்வதில் முனையவேண் டும். சலிப்புத் தன்மையைக் காட்டாமல், ஆசிரியர்கள் இந்தக் காரியத்தில் முன்னிற்க வேண்டும். தன்னம்பிக் கையை கைவிடக்கூடாது. கிராமத்தினுள்ளும், வெளிப் புறத்திலும், பரவிக்கிடக்கும் குப்பைகளை அகற்றுதல் வேண்டும். தெருவின் ஓரங்களில் மல ஜலம் கழிக்கும் சிறுவர் சிறுமியர்களை அன்புடன் கண்டித்து, அப் பழக் கத்தைக் கைவிடுமாறு செய்தல் வேண்டும். கிராமச் சாக்கடைகள், எங்கும் அடைப்பின்றிச் செல்லுகிறதா என்பதைக் கவனித்து ஆவன செய்தல் வேண்டும். ஒரே போக்கிலே சென்று கொண்டிருக்கும் கிராம மக்களின் மனதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மாற்றமுடியும். எனவே, அவர்களை எந்தக் காரியத்திலும், அதிகம் கண்டிக்கவோ, வற்புறுத்தவோ கூடாது.

கால்நடை, விவசாயம், வைத்திய உதவி முதியோர் கல்வி, குடிசைத் தொழில், மற்றும், மக்களுக்கு வேண் டிய பற்பல இன்றியமையாத காரியங்களிலும் ஆசிரியர் கள் நாட்டம் செலுத்த வேண்டும். "நீரின்றி அமையாது உலகு" என்பதற்கேற்ப, குடி நீர் வசதிகளையும் கவனித்து பழைய கிணறுகளைப் புதுப்பித்தல், கால் நடைகளின் தாகம் தீர்க்கத் தொட்டிகள் கட்டுதல், முதலியவற்றிற்காக வும் முயற்சி செய்தல் அவசியம். கிணற்றடியில் தீண்டாமைப் பிரச்சினைகளுக்கு, இடமில்லாமல், "எல்லோரும்ஓர் குலம்" என்ற உண்மையை உணர்ந்து, கிராம மக்கள் நடந்துகொள்ளும்படி அறிவுரை வழங்குதல், ஆசிரியர்களின் பெருந்தன்மையை விளக்கும் நல்லதொரு செயலாகும்.

கிராமத்திலுள்ள கால் நடைகளைச் சுத்தமாக வைத் திருக்கும்படி, கிராம மக்களை கேட்டுக்கொள்ள வேண்டும். கால் நடைகளுக்கு, ஏதாவது நோய் ஏற்படின், உடனடி யாக, மிருக வைத்தியரை அழைத்து, ஆவன செய்தல் வேண்டும். மாட்டுச் சாணங்களையெல்லாம் ஒன்று சேர்த்து தொழு உரமாக்கும்படி, உழவரைக் கேட்டுக் கொள்ளுதல் நலம்.

கிராம மக்களிடையே தொடர்பு கொள்ளுதல்

அடிக்கடி உழவரிடையே அளவளாவி, அவர்களுக்குள்ள குறைபாடுகளைத் தெரிந்து, சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, நிவாரணம்

தருதல் வேண்டும். பயிர்களுக்குப் பூச்சிகளால் ஆபத்து நேர்ந்தாலும், வேளாண்மை விளக்குநருக்கு முதலில் தெரியப்படுத்துதல் வேண்டும். நவீன முறை இயந்திரங்களை வேளாண்மைக்குப் பயன் படுத்தும்படியும், சிறந்த பொறுக்கு விதைகளை உபயோகப்படுத்தும்படியும், விவசாயப் பெருமக்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். கிராமத்தின் ஒரு புறத்தில், சாதாரணமாக 15 × 8 × 3 அளவுள்ள குழி வெட்டி, கிராமத்தில் சேகரித்த மலஜலம், குப்பை, முதலியவைகளைக் கொண்டு நிரப்பி கம்போஸ்ட் உரம் தயாரிக்கச் செய்யவேண்டும். பொதுவாக ஒரு ஏக்கர் நிலத்திற்கு இது நல்ல உரமாகும். சுய தேவைப் பூர்த்திக்கு இது ஒரு நல்ல உதாரண மாகும். காற்றினாலும், மழையாலும் ஏற்படும் மண் அரிப்பைப் பற்றி உழவருக்கு விளக்கி, மண் அரிப்புத் தடுப்பு முறைகளை அனுசரித்துப் பயன் பெறும்படி அவர் களுக்கு அறிவுரை வழங்குதல் வேண்டும்.

கிராமத்தின் தெருக்களைச் சுத்தமாக வைப்பதோடுமட்டு மல்லாது, தெருவின் ஓரங்களில் நிழல் தரும் மரங்களை நடுதல் வேண்டும். கிராம மக்களைக் கூட்டி, அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில், நகரங்களிலிருந்து பலதரப்பட்ட நிபுணர்களையும் அழைத்து வந்து, கூட்டம் போட்டு, கிராம நலனுக்காகத் திட்டங்கள் வகுத்து செயல்படுத்துதல் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், பொது நூல் நிலையம், பூங்கா, மருத்துவ விடுதி, விளையாட்டு மைதானம் முதலியவற்றை உருவாக்க, சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்குத் தெரியப்படுத்தி, முயலுதல் வேண்டும். குடிசைத் தொழில் மூலம், கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு, நல்ல கிராக்கி ஏற்படுத்த, நகரங்களில் தொடர்பு கொண்டு முயற்சி செய்தால், அது கிராமத்தின் பொருளாதார உயர்வுக்கு, நல்ல அஸ்திவாரமாகும் !

அறியாமை இருள் போக....

முதியோர் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில், ஒவ் வொரு வீட்டிலுள்ள முதியவர்களையும், அழைத்துக் கல்வி புகட்டுதல் வேண்டும். "எல்லோரும் படிப்போம் ! நன் றுகப்படிப்போம் !" என்ற பொன் மொழிக்குச் சான்றாக பரிணமிப்பது முதியோர் கல்விதானே ! இந்த ஆத்மீக மான பணியை, எல்லா கிராம ஆசிரியர்களும் மேற் கொண்டு, சான்றோர் பலரின் ஆதரவைக் கொண்டு, வளரும் சமூகத்தினை உருவாக்கும் சிற்பிகளான அவர்கள், கிராமங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இயல்பை வளர்த்துக் கொள்வார்களாக !

பொது நலத்திற்காகப் பாடுபடும் போது, சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை என்பதை ஆசிரியர்கள் மறக்கக்கூடாது. ஊக்கம், ஆர்வம், தன்னம் பிக்கையையும் துணை கொண்டு, கிராம நலத்தில் தங்க ளுக்குள்ள பொறுப்பு சட்டத்தால் பிணிக்கப்படாது, ஆனால் அன்பினால் கட்டுண்டு பொறுப்பை உணர்ந்து, ஆசிரியப் பெருமக்கள் நடந்து கொள்வார்களாக !

[3-ம் பக்கத் தொடர்ச்சி.]

கூறுவார்கள். இந்தத் துறையில் பெரிய தொழில்களுக்கு போட்டியிராது. கிராமத் தொழிற்சாலைகள் பெரிய தொழிற்சாலைகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் ஒன்றுக்கொன்று உதவும் நிலையே ஏற்படும். உதா ரணம் ; சைக்கிள் பகுதிகள், இயந்திரப் பகுதிகள் செய்வது முதலியன. பஞ்சாப் மாநிலத்தில் ஒவ்வொரு வீடும் ஒரு சிறு தொழிற்கூடமாக விளங்குவதைக் காண லாம். ஜப்பான், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இத்தகைய சிறு தொழிற்கூடங்களே எங்கும் நிறைந்து விளங்கி பொருளாதார வாழ்வு சிறக்க வழி செய்கின்றன. கிராமத் தொழிலாளர்களை இத்தகைய "தொழில் மயமாக்கும் புதிய சகாப்தத்தில்" ஈடுபடத் தகுதியுடையவர் களாக ஆக்கவேண்டும். நாடெங்கும் பரவலாக அமைக்கப் பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களும், இனி அமைக்கப் படவிருக்கும் தொழிற்பேட்டைகளும் இதற்கு உறுதுணை யாக இருக்கும்.

கூட்டுறவு முறையே சாலச் சிறந்தது

இத்தகைய தொழிற்சாலைகளைக் கூட்டுறவு முறையிலேயே உருவாக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்டால்தான் தனியார் சுரண்டலிராது. இந்தச் சந்தர்ப்பத்தில் இயந்திரங்களின் மீதுள்ள காரணமற்ற அச்சத்தைப் போக்க காந்தியடிகள் "உழைப்பை மிச்சப்படுத்துவதும் மக்களின் சுமையைக் குறைப்பதுமான இயந்திரங்களை நான் வரவேற்கிறேன்." எனக் கூறிய கருத்தை நினைவு கொள்வோம்.

இந்த முறையில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவும் இயந்திர சாதனங்களின் சிறுசிறு பகுதிகளை உருவாக்கும் கிராமத் தொழில்களுக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது. இங்கு கூறப்பட்டுள்ள பல வகையான முறைகளில் கிராமத்தின் பொருளாதார வாழ்வைச் சீர்ப்படுத்தும் பொறுப்பு பஞ்சாயத்துத் தலைவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமுதாய நலத்துறை ஆகியவைகளின் கையில்தான் உள்ளது. ஆகவே, அண்மையில் நமது பிரதமர் நேரு அவர்கள் பஞ்சாயத்து மாநாட்டில் கூறியபடி "கிராமவலிமையே நாட்டின் வலிமை" என்பதை மனதில் கொண்டு பாடுபட்டால் நமக்கு வெற்றி கிடைப்பது திண்ணம்.

கேள்வியும் பதிலும்

கேள்வி.—கிராமத்தில் சிறிய சண்டை சச்சரவுகளை விசாரணை செய்து வந்த கிராமக் கோர்ட்டுகள் தற்போது இயங்கவில்லை. மீண்டும் அக்கோர்ட்டுகள் எப்பொழுது செயல்படும். யாருடைய அதிகாரத்தின்கீழ் எப்படி நடத்தப்படும் என்பதைக் " கிராமநலத்"தில் தெளிவாகக் கூறவேண்டுகின்றேன்.

(திரு எம். புண்ணியகோடி, எம். திருமணி, தேசூர், வட ஆர்க்காடு மாவட்டம்.)

பதில்.—பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் பற்றிய பரிசீலனை செய்வதற்காக இந்திய அரசாங்கம் ஒரு குழுவினை நியமித்துள்ளது. இக்குழுவினர் தமிழ் நாட்டிற்கு 1961 ஜுன் மாதத்தில் விஜயம் செய்திருந்தனர். இந்தப் பிரச்னை பற்றி அவர்கள் நேரடியாக ஆராய்ந்தார்கள். அக்குழுவினரின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அந்தப் பரிந்துரைகள் கிடைத்தபிறகுதான், கிராமப் பஞ்சாயத்துக்கோர்ட்டுகளின் எதிர்கால அமைப்பு முறைபற்றி யோசனை செய்யப்படும்.

கேள்வி 2.—பஞ்சாயத்து யூனியனின் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் விரிவான பணிகளும் கடமைகளும் என்ன ?

(தலைவர், பஞ்சாயத்து யூனியன் மன்றம், திருநாவலூர்.)

பதில்.—1962, பிப்ரவரி 26-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண். 455-ல், கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் கடமைகளும், பொறுப்புக்களையும் பற்றி விளக்கமாக அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்வாணையின் தமிழாக்கம் அடுத்த இதழில் பகுதி-2, பஞ்சாயத்து கெஜெட்டில் வெளியாகும்.

மெட்ரிக் முறையின் முக்கிய அம்சங்கள் கேள்வி—விடை

குறிப்பு.—1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ந் தேதி முதல் மெட்ரிக் எடைகள் மாநிலம் முழுவதும் கட்டாயமாக அமுலுக்கு வருவது எல்லோருக்கும் தெரிந்தது தான். மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் புதிய பழக்கங்களை ஏற்படுத்தும் இந்த மாற்றத்தை அமுலாக்கப் பொது மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் பெரிதும் தேவை. நாம் பல ஆண்டுகளாகக் கையாண்டு வந்த பவுண்டு, வீசை, சேர், பலம் இவைகளை விட்டு விட்டு கிராம், கிலோகிராம், முறையை அனுசரிக்க வேண்டுமென்றால் சிரமமாகத்தான் இருக்கும். இதை நன்கு அறிந்துதான் அரசினர் இந்த முறையை படிப்படியாக அமுலுக்குக் கொண்டு வருகின்றனர். பழைய எடை, அளவைகளையும், புதிய எடை, அளவைகளையும் சேர்த்துப் பழக, போதிய அவகாசத்தையும் கொடுத்தார்கள்.

முதன் முதலில் சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 1958-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி வரை இரண்டு ஆண்டுகள் அவகாசம் கொடுத்து, மக்கள் இரண்டு எடைகளையும் பழக்கப்படுத்திக்கொள்ள அரசினர் வாய்ப்பளித்திருந்தனர். பிறகு 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் மெட்ரிக் முறை கட்டாயமாக அமுலாக்கப்பட்டது. பின்னர் இதர மாவட்டங்களுக்கு, 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி வரை இரண்டு வருடங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டு, மக்களுக்கு இந்த எடைகளையும் பழக்கப்படுத்திக் கொள்ள வாய்ப்பு உண்டாக்கி 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியில் கட்டாய அமுலுக்கு வருகிறது. இதேபோல் நீட்டளவை 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதியில் மாநிலம் முழுதிலும் கட்டாய அமுலுக்கு வருகிறது. சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய நான்கு மாவட்டங்களில் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் முகத்தலளவை கட்டாய அமுலாக்கப்படுகிறது. சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் முகத்தலளவை கட்டாய அமுலாக்கப்படும். 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியில் ஏனைய எல்லா மாவட்டங்களிலும் இம்முறை கட்டாய அமுலுக்கு வரும். எடைகளையும் அளவைகளையும் கட்டாய அமுலுக்கு கொண்டு வருமுன்னர் இடைக்கால அளவுகள் கொடுத்திருக்கிறார்கள்.

புதிய எடை, அளவு என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையில் சம்பந்தப்படும் விஷயம். நம் நாட்டில்

பெரும்பாலான மக்கள் கிராமவாசிகள்; அதிகம் படித்தவர்கள் அல்ல. எனவே இந்த புதிய எடை, அளவை முறையைக் கட்டாயமாக அமுல் செய்யும்பொழுது வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும் அநேக சந்தேகங்கள் தோன்றலாம். மனக் குழப்பங்களுக்கும் இடம் ஏற்படலாம். இதை மனதில் கொண்டு சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக சில கேள்விகள் எழுப்பப்பட்டு அதற்கு விடைகளும் தரப்பட்டுள்ளன. மக்கள் இம்முறையினை அறிந்து கொள்ள இந்த விளக்கம் ஓரளவு உதவியாக இருக்கும்.

கேள்வி 1.—1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து மெட்ரிக் எடைகளைத்தான் உபயோகிக்க வேண்டுமென கட்டாயப்படுத்தப்படுகிறது. பழைய முறைகளைக் கைவிட்டு இந்தப் புது முறை புகுத்தியதில் மக்களுக்கு என்ன லாபம்?

பதில்.—உலகிலுள்ள நாடுகளில் இப்பொழுது ஆறில் ஐந்து பகுதி நாடுகள் மெட்ரிக் முறையைத்தான் அனுசரிக்கின்றன. விடுதலைக்குப்பின் நமது நாடு பல்வேறு துறைகளில் வேகமாக முன்னேறி வருகிறது. நாடுமுன்னேற வாணிபம் தழைக்க வேண்டும் எனவே உலக நாடுகளில் பெரும்பான்மையான நாடுகளில் அனுசரிக்கும் முறையினையே நாமும் உபயோகித்தால் வியாபாரம் செய்வது எளிதாகிவிடும். அது மட்டுமல்ல. நமது நாட்டிலேயே பல்வேறு பகுதிகளில் பலதிறப்பட்ட அளவுகள் கையாளப்படுவதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே பாரதம் பூராவும் ஒரேமாதிரியான எடைகளை உபயோகிப்பது வியாபாரத்தைச் சுலபமாக்கிவிடும். நமது மாநிலத்திலேயே ஓரிடத்திற்கும் மற்றோர் இடத்திற்கும் எடை முறையில் பேதம் இருக்கிறது. மெட்ரிக் எடைகளையும் அளவைகளையும் கணக்கிடும் முறை மற்ற முறைகளைவிட இலகுவானது. எல்லா அளவுக்கும் 10-ன் பெருக்கற் பலனாக அமைந்திருக்கிறது. எனவேதான் இம்முறை அமுலாக்கப்படுகிறது.

கேள்வி 2.—அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட மெட்ரிக் எடைகள் யாவை?

பதில்.—அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட எடைகள் பின்வருமாறு:—

1. கிலோகிராம் வரிசையில்—
   50, 20, 10, 5, 2, 1.
2. கிராம் வரிசையில்—
   500, 200, 100, 50, 20, 10, 5, 2, 1.
3. மில்லிகிராம் வரிசையில்—
   500, 200, 100, 50, 20, 10, 5, 2, 1 ஆகும்.

கேள்வி 3.—புதிய எடைகளை எப்படி அடிக்கடி பழுது பார்ப்பது?

பதில்.—நகைக்கடைகளில் உபயோகிக்கும் எடைக் கற்களை மாத்திரம் (Bullion weights) ஆண்டுக்கு ஒரு தடவை முத்திரையிட வேண்டும். மற்ற எடைகளை இரண்டாண்டுக்கு ஒரு தடவை முத்திரையிட வேண்டும்.

கேள்வி 4.—பழைய வீசை முதலிய எடைகளுக்கும் இப் புது முறைக்கும் உள்ள சம்பந்தம் தெளிவுபடுத்தப்படுமா?

பதில்.—பழைய எடைகளாகிய வீசை, பலம் முதலிய எடைகளை அகற்றிவிட்டு இப்புதிய எடைகளை அனுசரிப்பதால், இவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பு மக்களுக்குத் தெரிவதற்காக மாற்றுப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து பழைய எடைகளுக்குச் சரியான புதிய மெட்ரிக் எடைகளையும், புதிய மெட்ரிக் எடைகளுக்குச் சரியான பழைய எடைகளையும் அறிந்து கொள்ளலாம். ஆனால், இது தற்காலிகமான ஏற்பாடுதான். அரசினர் விரும்புவது பழைய எடைகளை மக்கள் முற்றிலும் மறந்து புதிய மனப்பான்மை கொண்டவர்களாக மாற வேண்டும் என்பதுதான். அதனால் 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் மெட்ரிக் எடைகளையும், பழைய எடைகளையும் இடைக்கால உபயோகத்திற்கு அரசாங்கம் அனுமதித்திருந்தார்கள். புதிய எடைகளையே புழக்கத்தில் கொண்டு வந்து விட்டால் மாற்றுப் பட்டியலுக்கே அவசியமிராது. குறித்த மெட்ரிக் அளவுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையைக் கொடுத்து மக்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி 5.—1 வீசைக்கு 1,400 கிராம் என்றால் ஏன் 1,400 கிராமுக்கே விலை நிர்ணயிக்கக்கூடாது?

பதில்.—பழைய எடைகளையே அகற்றிவிட நினைக்கும் போது அவ்வெடைக்குகளுக்குச் சமமான அளவைக் குறிப்பதால் புது எடைகளைப் புகுத்தியதின் பலன் ஏற்படாது. புதிய எடையில் சாமான்கள் வாங்கினாலும் பழைய எடை நினைவேதான் இருந்து வரும். அந்த மனப்பான்மை நீங்கி மக்களுக்கு மெட்ரிக் எடை மனப்பான்மை வரவேண்டும். அதற்காகத்தான் விலையை அவ்வாறு நிர்ணயிக்காமல் மெட்ரிக் முறை அளவில் விலை நிர்ணயிக்கப்படுகிறது. எனவே 100 கிலோகிராமுக்கு உரிய விலையை மொத்த வியாபாரிகளும், 1 கிலோகிராமுக்கு உரிய விலையை சில்லரை வியாபாரிகளும் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நிர்ணயித்துக் கொள்ளும்படி வியாபாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கேள்வி 6.—எடை நிறுக்கும் தராசுகளில் மாறுதல் உண்டா?

பதில்.—இப்பொழுது தராசுகள் கையில் பிடித்து நிறுக்க உபயோகமாகின்றன. இனிமேல் தராசுகளை, தெரு வியாபாரிகளைத் தவிர (Hawkers) மற்றவர்கள் கடையில் தொங்கவிட்டிருக்க வேண்டும். அது மட்டுமல்ல, தராசுகள் எல்லாம் அளவுக்கட்டுப்பாடு கண்காணிப்பாளரால் முத்திரையிடப்படவேண்டும்.

உருண்டைதாரககள் (Round Beans) மெட்ரிக் சட்டத்தின்கீழ் அனுமதித்ததல்ல.

கேள்வி 7.—முகத்தலளவைகளிலும் மாறுதல் ஏற்படுமா?

பதில்.—முகத்தலளவைகளில் மட்டும் மாறுதல் ஏற்படுவதில்லை; நீட்டலளவைகளிலும் மாறுதல் உண்டு. முகத்தலளவைகள் லிட்டரிலும் அதன் மேல், கீழ் இனங்களிலும் வரைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அளவுகள் உருளை வடிவத்திலும் (படி போன்றது) கம்பு வடிவத்திலும் உள்ளன. நீட்டலளவைகள் மீட்டராகவும் அதாவது சுமார் 39 அங்குல நீளத்திற்கு சமமாக அமைக்கப்படும். 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் மாநிலம் முழுதும் கெஜத்திற்கு பதிலாக மீட்டரில்தான் கட்டாயமாக நீளங்கள் அளக்கப்படும்.

கேள்வி 8.—எல்லா எடை, அளவுகளுமே முத்திரை பொறிக்கப்பட்டனவா?

பதில்.—ஆம். எல்லா அளவுகளும், எடை அளவுகள் கட்டுப்பாடு கண்காணிப்பாளரால் முத்திரை பொறிக்கப்பட்டனவாகும், முத்திரையில்லாத எந்த எடை அளவுகளையும் உபயோகிப்பது குற்றமானதும், தண்டனைக்குரியதுமாகும்.

கேள்வி 9.— எடை, அளவுகளில் மோசடி நடக்காதவாறு என்ன பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது?

பதில்.—ஒவ்வொரு மாநிலத்துக்கும் அரசினர் மாதிரி எடை, அளவுகளை வழங்கியுள்ளனர். இதற்கென ஒரு தனி அலுவலகமும் வேலை செய்கிறது. கண்காணிப்பாளர்களும், கட்டுப்பாடு அதிகாரிகளும் உள்ளனர். அவர்கள் அவ்வப்பொழுது பரிசீலனை செய்து குறைகளைப் போக்குவர். புனர் பரிசீலனை நடத்தப்பட்டு அளவுகள் முத்திரையிடப்படும். பொது மக்கள் ஒத்துழைப்பினால் மோசடி நடக்காதவாறு கண்காணித்துவிடலாம்.

கேள்வி 10.—இம்முறை வெற்றி பெற பொதுமக்கள் எவ்விதம் ஒத்துழைக்க முடியும்?

பதில்.—பொதுமக்கள் மெட்ரிக் முறை மனப்பான்மை பெற வேண்டும். அவர்கள் மெட்ரிக் முறைக்குச் சமமான பழைய எடைகளைக் கேளாது, நேரடியாக மெட்ரிக் முறையிலேயே வியாபாரம் செய்ய முற்பட்டுவிட்டால் சீக்கிரத்திலேயே மக்கள் இம்முறைக்கு மாறிவிடுவர். மாற்றுப் பட்டியல்கள் தற்காலிகமானதுதான். அவைகளைச் சீக்கிரத்தில் விட்டுவிட வேண்டியது மிக அவசியம்.

பஞ்சாயத்தார்களின் நேர்முகக் கவனத்திற்கு:

பகல் உணவுத் திட்டம்

"நிரந்தரமாக பூமிதானம் அளியுங்கள்"

தரும சிந்தனையாளர்களுக்கு நிதி அமைச்சரின் உருக்கமான வேண்டுகோள்

தமிழ் நாட்டில் செயலாக்கப்பட்டு வரும் மதிய உணவுத் திட்டம் உலகப் புகழ் பெற்றுவிட்டது. இந்தச் சீரிய திட்டத்தின் உயர்வினைப் பாராட்டாதார் இல்லை. நல்ல திட்டங்களைத் தீட்டி செயலாற்றிவைப்பதில் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்குகெல்லாம் முன்னோடியாக நிற்பது வெள்ளிடைமலை. மதிய உணவுத்திட்டம் தமிழ நாட்டின் உயர்வினையே உயர்த்தும் திட்டம்.

இந்தச் சீரிய திட்டத்தினை நிரந்தரமாக்குவதற்கு வழி வகைகள் காணவேண்டும் என்பது தமிழ் நாடு அரசாங்கத்தின் விருப்பம் "பள்ளிகளில் பகல் உணவுத்திட்டம் பிரபல மடைந்துவிட்டது; இதை நிரந்தரத் திட்டமாக்க வேண்டும்" என்று தமிழ் நாடு அரசாங்கக் கல்வி, நிதி அமைச்சர் திரு பக்தவத்ஸலம் சமீபத்தில் கருத்துத் தெரிவித்தார்.

சமீபத்தில் வாலாஜா தாலுகாவில் மாந்தாங்கல் கிராமத்தில் இராணிப்பேட்டை திரு எம். எஸ். சுந்தரமூர்த்தி முதலியார் தன் காலஞ்சென்ற மனைவி திருமதி கனகாம்புஜம்மாள் நினைவாக நன்கொடை அளித்து, பஞ்சாயத்து யூனியன் சார்பாக ரூ 8,000 செலவில் கட்டி முடிக்கப் பெற்ற பள்ளிக்கூடத்தை திறந்து வைத்து பேசும்பொழுது, நிதி அமைச்சர் திரு பக்தவத்ஸலம் மதிய உணவுத் திட்டத்தைச் சிலாகித்து அந்தத் திட்டத்தை நிரந்தரமாக்குவதற்கான வழிவகைகள் பற்றி அருமையான சில கருத்துக்களை வெளியிட்டார்.

"சென்ற எட்டு ஆண்டுக்காலத்தில் சென்னை மாநிலத்தில் கல்வித்துறையில் பிரமாதமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும், அரசாங்கம் அவ்வப்போது வகுக்கும் எல்லாத் திட்டங்களுக்கும், மக்கள் நல்ல ஒத்துழைப்பு அளித்ததே இதற்குக் காரணம் என்றும், பொது மக்கள் இம்மாதிரி தாராள மனம் காட்டினால், பகல் உணவுத் திட்டத்தை நிரந்தரமாக்குவதில் சிரமம் எதுவும் இருக்காது" என்றும் அமைச்சர் திரு பக்தவத்ஸலம் கூறினார். "ஒவ்வொரு கிராமத்திலும், தரும சிந்தனையாளர்கள் மதிய உணவுத் திட்டத்திற்கென கொஞ்சம் நிலம் ஒதுக்கவேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த பட்சம் 5 ஏக்கர் நிலமாவது சேரவேண்டும். கல்விக்காக அளிக்கும் இந்தப் பூதானம் மிக சிறந்த தர்மமாகும். அரசாங்கம் அளிக்கும் நன்கொடையுடன், ஒவ்வொரு கிராமத்திலும் 5 ஏக்கர் நிலமும் சேர்ந்தால், பகல் உணவுத் திட்டத்தைச் சுலபமாக நிரந்தரமாக்கிவிடலாம்" என்று அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

வளரும் பி. பள்ளிப்பட்டி

(திருமதி சாந்தா சுந்தரமூர்த்தி, பொ. துரிஞ்சிப்பட்டி)

[பி. பள்ளிப்பட்டி சேலம் மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துக்களில் ஒன்று. சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்களில் பி. பள்ளிப்பட்டியும் ஒன்றாகும். இந்தப் பஞ்சாயத்து புரிந்துள்ள பணிகளை இக்கட்டுரை சுருக்கமாக விளக்குகிறது—ஆசிரியர்].

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் சமீபத்தில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில், **பாப்பிரெட்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியனும் ஒன்று**. பாப்பிரெட்டிப்பட்டி யூனியன் 1961-ம் ஆண்டு எப்ரல் 13-ம் நாள் தமிழ் வருடப் பிறப்பன்று துவக்கப்பட்டு, செவ்வனே நடைபெற்று வருகிறது.

எங்களது யூனியனில் மொத்தம் 19 பஞ்சாயத்துக்கள் உள்ளன. இவைகளில், யூனியன் அமைப்புக்கும் எங்களது யூனியனுக்கும் பெருமை தேடித்தரும் வகையிலேயும் கவனிப்பாரற்றுக் கிடந்த கிராமங்களெல்லாம் வசதி பெறும்படியாகவும் மிகச் சிறந்த முறையிலே தீவிரமாக பணியாற்றி வருவது **பி. பள்ளிப்பட்டி பஞ்சாயத்தாகும்.**

பி. பள்ளிப்பட்டி கிராமமானது சேலத்திலிருந்து பொம்மிடி வழியாக தர்மபுரி செல்லும் நெடுஞ்சாலையின் அருகாமையில் அமைந்துள்ளது. இப்பஞ்சாயத்தின் மக்கள் தொகை 4,245. மொத்தம் 780 வீடுகளே உள்ளன. இப்பஞ்சாயத்தின் பரப்பு 3,622 எக்கர். முக்கிய தொழில் விவசாயம். இக்கிராமத்தின் அருகாமையில் திப்பு சுல்தான் காலத்தில் கட்டிய சிறிய கோட்டை ஒன்றும், கிறிஸ்த்துவ மதத்தினர் கண்டு வணங்கி மகிழும் வண்ணம் அமைந்துள்ள மலைக் கோவிலும் பார்க்கத் தகுந்ததாகும்.

பாதைகூட இன்றி திண்டாடின மக்கள் . . . .

இந்தப் பஞ்சாயத்துக்கு அச்சம்பட்டி, வைரனூர் ஜங்காலஹல்லி, மும்பாரஹல்லி, வாசிக்கவண்டனூர் என்ற கிளைக் கிராமங்கள் ஒவ்வொன்றும் சுமார் 1½ கல் தொலைவிலே உள்ளது. இந்தக் கிராமங்களுக்கெல்லாம் இத்துணை காலமாக நடப்பதற்குக் கூட சரியான பாதையின்றி மக்கள் திண்டாடிக்கொண்டிருந்தனர். இந்த ஆண்டில் ஒவ்வொரு கிராமத்தையும், ஒவ்வொரு கிராமத்துடனும் இணைத்து சுமார் 40 ஆயிரம் ரூபாய் செலவிலே 36 அடி அகலமுள்ள ரோடுகள் அமைக்கப்பட்டு ஜல்லிகள் போடப்பட்டு வருகிறது. எல்லாக் கிராமங்களிலிருந்தும் தேசிய நெடுஞ்சாலைக்கு இணைப்பும் கொடுக்கப்பட்டு உள்ளது. புதிதாக அமைக்கப்படும் ரோடுகளின் நீளம் சுமார் 5½ மைல் இருக்கும்.

அறியாமை இருளைப் போக்க . . .

இந்தப் பஞ்சாயத்தில் ஒரு உயர்நிலை ஆரம்பப் பள்ளியும் இரண்டு ஆரம்பப்பள்ளிகள் மட்டும் இருந்தன. யூனியன் அமைப்புக்குப்பின்னர், மலைவாசி மக்கள் வாழ்கின்ற அச்சம்பட்டி கிராமத்திற்கு புதிதாக ஆரம்பப்பள்ளி துவக்கப்பட்டு நடைபெறுகிறது. மொத்தம் 125 மாணவர்களுக்கு மதிய உணவு போடப்படுகிறது. பள்ளி வயதுடைய எல்லா குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என பஞ்சாயத்தில் தீர்மானிக்கப்பட்டு, தீவிரமாக அமுலாக்கப்படுகிறது. கட்டிட வசதி போதாத மூன்று பள்ளிகளுக்கு 27,000 ரூபாய் செலவிலே மூன்று கட்டிடங்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு சுகாதாரமான முறையில் குடிநீர் கிடைக்கும் பொருட்டு மேலும் மூன்று கிணறுகள் 9 ஆயிரம் ரூபாய் செலவிலே வெட்டப்படுகின்றன. இரண்டு பழைய கிணறுகளும் ஆழப்படுத்தி சீர்திருத்தப்படுகின்றன.

மக்கள் அன்றாட செய்திகளை அறியும் பொருட்டு சமூகக் கல்வி நிலையம் ஒன்றும் இரண்டு வானொலிப்பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

விவசாயத் துறையில் செய்துள்ள வேலைகள் . . .

விவசாயிகளுக்காக கிராம உணவு உற்பத்தித் திட்டம் வகுக்கப்பட்டு அதன்படி கிராம விவசாயிகளுக்குத் தேவையான பொறுக்கு விதைகளும், பசுந்தாள் உரவிதைகளும் பூச்சி, பூஞ்சாள மருந்துகளும், தேவையான அளவு தேவையான சமயத்தில் கொடுக்கப்பட்டு வரு

[11-ம் பக்கம் பார்க்க.]

முதியோர் ஓய்வு உதவித் தொகை வழங்கும் திட்டம்

[தமிழ்நாடு அரசாங்கம் சமீபத்தில் முதியோர் ஓய்வு உதவித் தொகை வழங்குதல் பற்றி உத்தரவிட்டுள்ளனர். இத் திட்டத்தைப் பற்றிய விளக்கங்கள், எப்படி மனுச்செய்து, இத்தொகையைப் பெறுவது என்பது பற்றிய விளக்கங்களைக் கீழே காணலாம் —ஆசிரியர்.]

வாழ வசதியற்ற முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றை இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவர சென்னை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இத் திட்டத்தின்படி, 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டுள்ள வயதுள்ள வறியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப் படும். மேலும், குருடு, தொழுநோய், பைத்தியம், பக்க வாத நோய் அல்லது அங்க ஊனம் காரணமாகப் பிழைப்புக்கு வழிதேட இயலாத 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள வறியவர்களுக்கு இத் திட்டத்தின்படி உதவித் தொகை பெறலாம். ஒவ் வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் விதிகளின்படி "வறியவர்" என்பது எந்த விதமான வருமானமோ அல்லது வருமானம் கிடைக்கும் வழியோ இல்லாமல், 20 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயது உள்ள மகன், மகனின் மகன் (பிள்ளை வயிற்றுப் பேரன்), கணவன்/ மனைவி ஆகிய உறவினர் யாரும் இல்லாத ஒருவர் எனப் பொருள்படும்.

எப்படி மனுச் செய்யவேண்டும் ?

முதியோர் ஓய்வு உதவித் தொகைக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்களை அந்த வறியவர் சாதாரண மாக வசிக்கிற தாலுக்கா தாசில்தாருக்கு அனுப்பி வைக்கவேண்டும். இந்த மனுவிற்கு நீதி மன்றக் கட்டண முத்திரை எதுவும் ஒட்ட வேண்டியதில்லை. தாலுக்கா அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் அலுவல கங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள், கிராம அதிகாரிகள், நகராட்சி அலுவலகம், சென்னை நகராட்சி மன்ற அலுவ லகம் ஆகிய இடங்களில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். **அச்சடித்த விண்ணப்பங்கள் கிடைக்கா விட்டால் சாதாரணக் காகிதத்தில் எழுதி விண்ணப்பிக்க லாம்.** ஒரு மாதிரிப் பாரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள் உத வித்தொகை அளிக்கத் தகுதியுடையவர்களாவார்கள். நீலகிரி மாவட்டத்தில் கஜானா அதிகாரியும், சென்னை மாவட்டத்தில் கலெக்டரின் தனி உதவியாளரும் உதவித் தொகை அளிக்கும் அதிகாரிகளாவார்கள். அனுமதி யளிக்கும் அதிகாரி செய்யும் ஆணைக்கெதிராக மாவட்டக் கலெக்டருக்கு ஒரு முறை முறையீடு செய்யலாம். மாவட் டக் கலெக்டரின் தீர்ப்பு முடிவானதாகும்.

உதவித் தொகை பெறுபவருக்கு அத்தொகையை அவரது முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பப்படும். அத்தொகையிலிருந்து மணியார்டர் கமிஷன் கழித்துக் கொள்ளப்பட மாட்டாது. உதவித் தொகை பெறுபவர் தமது முகவரியில் மாற்றமிருந்தால் அதைத் தாசில் தாருக்குத் தெரிவிக்கவேண்டும். அவருடைய புதிய முக வரி இன்னொரு தாலுக்காவில் இருப்பின் அத்தாலுக்கா வின் தாசில்தாரர் மூலம் உதவித் தொகையைப் பட்டு வாடா செய்ய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

எழுதப்படிக்கத் தெரியாதவர்களும், மற்ற காரணங் களால் முதியோர் உதவித் தொகைக்காகச் செய்ய வேண்டிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுபவர்களும், சம்பந்தப்பட்ட பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் சென்று, அவர் உதவியுடன் விண்ணப் பங்களைப் பூர்த்தி செய்து அனுப்பலாம். பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் இவ்விஷயத்தில் உதவி செய்யவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

முதியோர் உதவித் தொகைக்கான மாதிரி மனு

மாவட்டம் : தாலுகா.

கிராமம்

நகரம்

1. விண்ணப்பதாரரின் பெயர்.
2. ஆண்/பெண்.
3. தந்தை/கணவர் பெயர்.
4. முழு முகவரி.
5. (அ) விண்ணப்பதாரர் குருடு, தொழுநோய், பைத் தியம், பக்கவாத நோய் அல்லது அங்க ஊனம் காரண மாக முழுதும் செயலிழந்து வாழ வழியற்றிருக்கிறாரா / ஆம் எனில், விவரம் கொடுக்கவும்.
   (ஆ) வயது (விண்ணப்பத் தேதியன்று வயது).
6. அங்க, மச்ச அடையாளங்கள்—
   (1)
   (2)
7. மனுதாரரின் உறவினர்கள் பற்றிய விவரங்களும், அவர்களது வயதும் :—
   (அ) மகன்/மகன்கள். வயது.
   (ஆ) மகனின் மகன்/மகன்கள். வயது.
   (இ) மனைவி/கணவர். வயது.

குறிப்பு.—பொருத்தமான இனங்களுக்கு மட்டுமே அவர்களது வயதினை எழுதிப் பூர்த்தி செய்யவேண்டும். பொருத்தமற்ற இனங்களை அடித்து விட வேண்டும். உறவினர்களின் பெயர்களைக் குறிப்பிட வேண்டியதில்லை. அவர்களது வயதை மட்டுமே கொடுக்கவேண்டும். உதா ரணமாக மகன் இல்லாவிட்டால் (அ) இனத்தை அடித்து விட வேண்டும் ; உறவினர்கள் யாருமில்லாவிட்டால் (அ) முதல் (இ) வரையிலுள்ள இனங்களை அடித்து விட வேண்டும்.

8. உறவினருக்கு/உறவினர்களுக்கு வருமானம் அல்லது வருமான ஆதாரம் ஏதேனும் உள்ளதா ?

9. மேற்சொன்ன உறவினர்களில் யாராவது தொடர்ந்து காணுமற்போய் விட்டாரா ? அப்படியானுல், அதன் விவரங்கள். (அவரது பெயர், வயது, எந்தத் தேதி முதல் காணப்படவில்லை முதலியன.)

10. நான் பின்வருமாறு உறுதி கூறுகிறேன் :—

(அ) வாழ்க்கை நடத்த எனக்கு எந்த வருமானமும் இல்லை அல்லது; எந்த வருமானமும் கிடைப்பதற்குரிய ஆதாரமும் இல்லை.

(ஆ) முதியோர் உதவித் தொகை கேட்டு இதற்கு முன்பு நான் மனுச் செய்துள்ளேன்/செய்யவில்லை.

(இ) நான் பிறந்த இடம் தமிழ் நாடு/கடந்த ....ஆண்டுகளாக நான் தமிழ்நாட்டில் வசித்து வருகிறேன்.

(ஈ) நான் மேலே கொடுத்துள்ள எல்லாத் தகவல்களும் எனக்கு நன்ருகத் தெரிந்த வரையில் சரியானவை

*விண்ணப்பதாரரின் கைபெழுத்து
அல்லது இடது கைப்பெருவிரல்
அடையாளம்.

இடம்.

தேதி.

11. **சான்றிதழ்.**—மக்கள் சபை உறுப்பினர், ராஜ்ய சபை உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், நகராட்சி மன்ற உறுப்பினர், மாநகராட்சி மன்ற உறுப்பினர் அல்லது பஞ்சாயத்துத் தலைவர் அல்லது ஏழை இல்லம் ஒன்றின் அல்லது அதைப் போன்ற தருமசாலையின் நிர்வாகி அல்லது மாநில அல்லது மத்திய அரசாங்க கெஜெட் பதிவுள்ள அதிகாரி இச்சான்றிதழ் கொடுத்தல் வேண்டும்.

ஸ்ரீ/ஸ்ரீமதி அவர்களை (அவர்களின் மகன்/மனைவி) ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவரது அங்க மச்ச அடையாளங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1.

2.

அவர் சித்த சுவாதீனம் உள்ளவர்/பைத்தியம் பிடித்தவர்.

தேதி : சான்றிதழ் அனுப்பியவரின்
கையெழுத்து, முழு முகவரி, பதவிப்
பெயர்.

....

* வறியவர் பைத்தியமாயிருந்து, கையெழுத்துப்போட புள்ளி கோடு போடவும். அல்லது கைப்பெருவிரல் அடையாளத்தைப் பதிய இயலாவிட்டால், அவருக்களிக்கும் உதவித் தொகையைக் கொண்டு அவரைப் பாதுகாப்பதாக வாக்களிக்கும் காப்பாளர் இந்த விண்ணப்பத்தில் கையெழுத்திடலாம்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி.]

கிறது. மற்றும் பகுதி விலையிலே இரும்புக்கலப்பைகள், மருந்தடிக்கும் கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு நாணயச் சங்கத்தில் குறுகிய காலக் கடனும் மருந்தடிக்கும் கருவிகள் மண் வாரும் கருவிகள் வாடகைக்கும் கொடுக்கப்படுகின்றன. சுமார் 300 ரூபாய் பெறுமானமுள்ள பழச்செடிகள் பகுதி விலையில் கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயகளுக்கு ஒய்வு நேரத்தில் வருவாய் கிடைக்கும் வகையில் 26 தேன் பெட்டிகள் பகுதி விலையில் கொடுக்கப்பட்டுள்ளது. உரத்தேவையை பூர்த்தி செய்ய 125 கம்போஸ்ட் குழிகள் வெட்டி உரம் தயாரித்த விவசாயிகளுக்கு ஒரு குழிக்கு 6 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டுள்ளது.

கால் நடைகளின் தரத்தை உயர்த்த ஒரு அலிகார் பொலிகாளையும் இரண்டு உயர்ந்த ரக செம்மறி ஆட்டுக்கிடாய்களும் வாங்குவதற்காக விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு பணமும் செலுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ வசதிக்காக ஒரு முதல் உதவி நிலையம் இவ்வூரில் கட்டவும் யூனியனில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பஞ்சாயத்தில் மின்சார வசதியும் ஒராண்டு காலத்திற்குள் கிடைக்கப்பெற்றது. மூன்று விவசாயிகளுக்கு பம்ப் செட் வைக்க கடன் உதவியும், புதிய கிணறுகள் வெட்ட 6 விவசாயிகளுக்கு கடன் உதவியும், உழவு கால் நடைகள் வாங்க 18 விவசாயிகளுக்கு கடன் உதவியும் யூனியனில் செய்து தரப்பட்டுள்ளது.

இவ்வளவு சிறந்த முறையிலே இந்தப் பஞ்சாயத்து இயங்குவதற்கு காரணம் மிகவும் இளமையும் ஆர்வமும் ஊக்கமும் உள்ள பஞ்சாயத்துத்தலைவரும், அதிகாரிகள் கிராமத்திலே ஒன்றி தேவைகளை தெரிவித்து கிராம மக்களுக்கு திட்டமிட உதவி செய்வதுமே ஆகும்.

"கிராமத்து மக்களின் சுதந்தரமே நாட்டின் உண்மையான சுதந்தரம்" என்றும் "கிராம முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றம்" என்றும் "கிராம ராஜ்யம்தான் பூரணசுயராஜ்யம்" என்றும் கூறிய அண்ணலின் அடிச்சுவற்றை பின்பற்றி, இந்த பஞ்சாயத்து போன்று எல்லாப் பஞ்சாயத்துக்களும் பணியாற்றினுல், அண்ணலின் கனவு நனவாகி உண்மையான கிராம ராஜ்யம் மலருவதில் சற்றேனும் ஐயம் உண்டோ?

கிராமப் பொருளாதார வளர்ச்சியும் பஞ்சாயத்தும்

(திரு. மா. பா. குருசாமி, எம்.ஏ., காந்திநிகேதன், தே. கல்லுப்பட்டி)

[உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க இருப்பிடம்—இவை மனிதனின் அடிப்படைத் தேவைகள். கிராமங்கள் நாட்டின் ஊற்றுக்கண்கள். மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமேயானுல், கிராமங்களிலே வளம் கொழிக்க வேண்டும். இல்லை என்ற சொல் இல்லை என்ற நிலை உருவாக வேண்டும்.
—ஆசிரியர்.]

"வாழ்க நீ! எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!"

என்று கவி மன்னர் பாரதியார் அன்று பாடினுர். இன்று அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டிலே சென்று விடுதலை பெற்று அதன் இன்கனிகளை உண்டு களிக்கின்ருேம். 'வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி யிருந்த" நிலையைப் போக்க திட்டங்கள் தீட்டி வளத்தைப் பெருக்குகின்ருேம். புதியதொரு சமுதாயம் அமைக்க, காந்தியடிகளின் கருத்துப்படி கிராமங்களை ஆற்றல் மிக்கவைகளாக்க நாம் எடுத்துக்கொண்ட முயற்சிதான் கிராமப் பஞ்சாயத்து. ஆக்க வேலைகளை எல்லாம் பஞ்சாயத்தின் மூலமாகவே செய்ய முனைந்திருக்கின்ருேம். ஆதலால் பஞ்சாயத்தின் கடமைகளும் பொறுப்புகளும் மிகுந்து வருகின்றன.

இன்றைய நிலை:—கிராமங்கள் பெரும்பாலானவை பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளன. கிராம மக்கள் தங்கள் நலனைவிட பணத்திற்கே முதலிடம் கொடுக்கின்றனர். பணத்தைத் தேடும் போராட்டத்தில் தோல்வியைக் கண்டு சோர்ந்து நிற்கின்றனர். தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைக்கூட உற்பத்தி செய்யாமல் அதிக வருவாயுள்ள மிளகாய், கரும்பு, பருத்தி, புகையிலை போன்றவற்றை உற்பத்தி செய்கின்றனர். ஆனுல் அவர்களது பின்தங்கிய பொருளாதார நிலை, வியாபாரிகளுக்கும், தரகர்களுக்கும், கடன் கொடுத்தவர்களுக்கும், அவர்களது உழைப்பின் பலன் சென்றடைய வழிவகுத்து விடுகின்றது. விலைகொடுத்து உணவுப் பொருள் வாங்கும் நிலைக்கு உழவர்கள் மாறிவருவது வேதனைக்குரிய உண்மையாகும்.

அந்நியர் ஆட்சியில் அழிந்துவிட்ட கிராமக் கைத்தொழில்கள் மறுபடியும் சீரோடும், சிறப்போடும் வளர்ச்சியடைய வில்லை. ஆதலால் பருத்தியை உற்பத்திச் செய்யும் உழவன் அதனை விற்றுவிட்டு, கட்டத் துணியாகவும், மாட்டிற்கு பருத்திக் கொட்டையாகவும் விலைக்கு வாங்குகின்ருன். தான் விளைத்த கடலையையும், எள்ளையும், ஆமணக்கு முத்தையும் விற்றுவிட்டு எண்ணெயாக வாங்குகின்ருன். இப்படி தனது விளை பொருளை வெளியில் விற்று தேவையான பொருட்களை (தான் விற்ற பொருட்களிலிருந்து செய்யப்பட்டவைகளை) வாங்குவதால், எவ்வளவு செல்வம் கிராமத்தை விட்டுச் செல்கின்றதென்பது அவனுக்குத் தெரிவதில்லை.

இன்று கிராம மக்களின் வருமானத்தில் கால் பங்குக்கு மேல் சில தேவையற்ற வழிகளில் செலவிடப்படுகின்றது. வெற்றிலை, பாக்கு, புகையிலை, பொடி, பீடி, சிகரெட் போன்றவற்றிற்கும் சிறுகச்சிறுக அவர்கள் செலவிடும் பணம் வருடத்திற்கு நூற்றுக்கணக்கில் மாறுவதை அவர்கள் உணர்வதில்லை. மேலும் பேசும் படம் பார்க்கின்ற நிலை என்று ஏற்பட்டு விடவே, அதனுலும் பணம் விரயமாகத்தான் செய்கிறது.

உழவுத் தொழிலில் கால் நடையைப் போற்ருததாலும், மற்றைய காரணங்களாலும் குறைந்த வருமானமே கிடைப்பதால் பலருக்கு, நகருக்குச் செல்ல வேண்டுமென்ற ஆவல் பிறக்கின்றது. மணிக்கணக்குப்படி உழைத்து வாழவே விரும்புகின்றனர்.

கருத்து வளர்ச்சி:—காந்தியடிகள் இவற்றையெல்லாம் கண்டு, கிராமங்கள் வளர்ச்சிபெற நிர்மாணத் திட்டத்தை வழங்கினுர். அவர் தந்த நிர்மாணத் திட்டத்தின் அடிப்படையில் இன்று சமுதாய வளர்ச்சித் திட்டம் பணியாற்றுகின்றது. மக்களாட்சி மலர்ந்த பிறகு கருத்துப் புரட்சி விளைந்தது. அதன் பயனுக, ஒவ்வொரு கிராமத்திலும் மூன்று அடிப்படை ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டிருக்கின்ருேம். அவை தான்—கிராமப் பள்ளி, கிராமக் கூட்டுறவு, கிராமப் பஞ்சாயத்து. கிராமப் பள்ளியின் மூலம் சமுதாயத்தை உருவாக்கி, கடமைகளை அறிந்து பணியாற்றும் மக்களை ஊரெல்லாம் காண விழைகின்ருேம். கிராமக் கூட்டுறவுச் சங்கம் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணை நிற்க வேண்டுமென்று எதிர் பார்க்கின்ருேம். கிராமப் பஞ்சாயத்தால் ஊர் நிர்வாகமும், ஆக்கப் பணிகளும் செவ்வனே நடக்க வேண்டுமென்று எண்ணுகின்ருேம். மூன்று அமைப்புகளும் உயிர்நாடியாக விளங்குவது கிராமப் பஞ்சாயத்து. கிராமப் பஞ்சாயத்து திறம்பட வேலை செய்தால், ஊர் முன்னேற்றம் நாட்டு முன்னேற்றமாக மாறுவதைக் காணலாம்.

பஞ்சாயத்துப் பணிகள்:—கிராமப் பஞ்சாயத்து திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் கிராமத்தை சுயதேவை பூர்த்தியடையச் செய்து விடலாம். செல்வ வளர்ச்சியில் கவனம் கொண்டவர்கள் வெளியேறும் செல்வத்தை முதலில் தடுக்க வேண்டும். கிராமத்து மக்களுக்கெல்

[14-ம் பக்கம் பார்க்க.]

"வனவிலங்குகளைப் போற்றிப் பாதுகாப்போம்"

["மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்" என்று தமிழ்க் கவிகள் பாடியுள்ளார்கள். 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடுகிறார் பாரதி. அன்பு நெறியிலே அசைக்கமுடியாத நம்பிக்கை நமக்குண்டு. 'அன்பு நெறி நின்று, கொலை வெறி ஒழிந்து, வன விலங்குகளைப் போற்றிப் பாதுகாப்போம்' என்று வேண்டுகோள் விடுகிறார் தமிழக நிதி அமைச்சர். அவருடைய வானொலிச் சொற்பொழிவின் சாரத்தைக் கீழே தந்துள்ளோம். —ஆசிரிய .]

தமிழ் நாட்டில் வன விலங்குகளுக்கும் வண்ணப் பறவைகளுக்கும், குறைவே இல்லை விதம் விதமான விலங்குகளும், பறவைகளும் இங்கே உள்ளன. ஒரு குறி பிட்ட பிரதேசத்தில் இத்தனை வகையான விலங் கினங்கள் வேறு எங்குமே இல்லை எனலாம். தமிழ் நாட்டில் இயற்கை அமைப்பும் சீதோஷ்ண நிலையும் பலதரப்பட்டதாக இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். தமிழ் நாட்டில் தாவர வகைகளும் கணக்கிலடங்காது. வறண்ட சமவெளிகளின் முட்புதர்களிலிருந்து 8,000 அடி உயர மலைகளில் ஓங்கி வளர்ந்த சோலைகள் வரை அநேக விதமான தாவரங்கள் இங்கு வளர்கின்றன. தாவர வகைகள் மாறுபட்டு இருப்பதற்கேற்ப அவற்றில் மறைந்து வாழும் வனவிலங்கு வகைகளும் பலவகை இருக்கின்றன.

உலக வனத்துறை காங்கிரசின் முடிவுகள்

இயற்கைச் செல்வங்களில் வனவிலங்குகளுக்கு உயிர் பாதுகாப்பு மிக அதிகம். ஆனால் அதே சமயத்தில் பாதுகாப்பற்று விடப்பட்டுள்ள இயற்கைச் செல்வம் இது போல் வேறு கிடையாது. மரங்களடர்ந்த வனங்கள்தான வன விலங்குகளுக்கு இன்று கடைசி புகலிடமாய் உள்ளன. ஆனால் அங்கும் கூட வன விலங்குகளுக்கு நிம்மதியான வாழ்க்கை இல்லை, ஏனெனில் வனப் பாது காப்புத் துறையினர், வேட்டைக்காரர்கள், வனப்பொருள் தொழில் செய்வோர், மனமகிழ்ச்சிக்காக காடுகளுக்குச் செல்வோர் குடியானவர்கள் பொது மக்கள் ஆகிய பல்வேறு பிரிவினரும் காடுகளை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்பதுபற்றி ஆளுக்கொரு யோசனை கொண்டு வருவர். வனத் துறையினர் பாதுகாப்புக் கொள்கை ஒன்றை மட்டும் நினைவில்கொண்டு அதிக பட்சம் எவ்வளவு வெட்டு மரங்களை உற்பத்தி செய்யலாம் என்பதிலேயே கருத்தாய் இருக்கின்றனர். சென்ற ஆண்டில் அமெரிக்காவில் உலக வனத்துறை காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட முடிவும், இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். காடுகளின் உபயோகம், வெட்டுமர உற்பத்தி மட்டுமல்ல என்று அங்கு எடுத்துக் காட்டப்பட்டது. வனவிலங்குகளுக்கு உறைவிடமாகவும் வனங்கள் கருதப் படவேண்டும். வனங்களுக்கு பலவித உபயோகங்கள் உண்டு என்பதை உணர வேண்டும் என்றும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

வன விலங்குகளுக்கு முக்கியமாக எதிரியாக இருப் வன் மனிதனே. இன்று மண்ணில் வாழும் உயிரினங் களில் மிகச் சக்தி வாய்ந்தவனாக இருப்பவன் மனிதன். இரண்டு வகைகளில் மனிதன் வனவிலங்குகளை அழிக்கி றான். முதலாவது காடுகளை அழித்து அதன் மூலம் வனவிலங்குகளை அவற்றின் இயற்கை உறைவிடத்தி லிருந்து துரத்துகிறான். இரண்டாவதாக உணவுக்காக, பிழைப்புக்காக அல்லது வேட்டைக்காக மிருகங்களைப் பிடித்தும், கொன்றும், சுட்டும் அழிக்கிறான். மற்ற உயிர் களைக் கொன்று தான் வாழ மனிதன் உயிரினங்களி லேயே, தன்னை மிக உயர்ந்த பிறப்பாக எண்ணி அவன் பெருமை அடைந்து கொள்ளலாம். ஆனால் உல கத்திலிருந்து மற்ற உயிர்களை அழிக்காமல் இவன் இருக்க வேண்டும். அழிக்கத் தொடங்கினால் மனித வாழ்க்கை பொலிவிழந்துபோகும் என்பது நிச்சயம்.

மனிதனும், பிற உயிரினங்களும் உடன்பாடாக வாழ் வதற்கு ஒரு வழி கண்டாக வேண்டும். இப்பிரச்சினையில் தீர்வுகாண்பதைப் பொறுத்தே மக்கள் குலத்தின் நலம் உள்ளது. நமது மாநிலத்திற்கும் இதே நிலைமை பொரு பொருந்தும். வனவிலங்குகளுக்கு கேடு விளைவிக்காமல் மனிதன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழி கண்டாக வேண்டும். வனவிலங்கு பாதுகாப்பு முறையாகத் திட்டமிட்டு பணியாற்றுவதே இதற்குரிய வழி.

வன விலங்குகள் விஷயமாக இத்தனைக் காலமும் நாம் நடந்து கொண்டிருந்த முறை நமக்குப் பெருமை தருவதாக இல்லை, "நாமும் வாழ்வோம், அவைகளும் வாழட்டும்" என்று நாம் எண்ணவில்லை.

வனவிலங்குகள் எங்கு காணப்பட்டாலும் சரி, அவை நாட்டின் பொதுச் சொத்து என்று எண்ணும் உணர்ச்சியை நாம் வளர்க்க வேண்டும். நகரங்களிலும், கிராமங் களிலும் கோயில் சாமி மாடுகள் எப்படி சுவாதீனமாகத் திரிகின்றனவோ, அத்தகைய பாதுகாப்பு அளிக்கவேண்டும். அதே சமயத்தில் மாநிலத்தில் வனவிலங்குகள் வாழும் காட்டுப் பகுதிகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் நிரந்தரமான வனவிலங்கும் புகலிடங்களாக அவைகளை வைத்திருக்க வேண்டும். இப்படிப் பாதுகாக்கப்பட்ட காடுகள் அபயாரண்யங்களாக விளங்கும். விலங்குகளும் பறவைகளும் அங்கு நிம்மதியாக வாழ்ந்து, வம்சம் பெருகி வாழ வகை செய்ய வேண்டும்.

இளைஞர்கள் அக்கறை கொள்ளவேண்டும்

தமிழ் நாட்டில் நீலகிரியில் வனவிலங்குப் புகலிடமும், சென்னை அருகே வேடந்தாங்கல் பறவைகள் புகலிடமும் உள்ளன. இவைகளைத் தவிர மாநிலத்தில் வேறு இடங்களிலும் வனவிலங்குகள் பாதுகாப்புக்கான திட்டங்கள் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சில குறிப்பிட்ட பகுதிகளை வனவிலங்குப் புகலிடம் என்று அரசினர் அறிவிப்பது மட்டும் போதாது. இந்த இயற்கைச் செல்வத்தைப் பாதுகாப்பதில் பொது மக்கள் ஒவ்வொருவரும் அக்கறை ஏற்படவேண்டும். பெரியவர்கள், சிறியவர்கள் அனைவரும் இதில் ஆர்வம் காட்டவேண்டும். இறைவன் நமக்கு அருகாமையில் பலவிதமான ஜீவராசிகளைப் படைத்துவிட்டிருக்கிறார். இதுவே ஒரு பாக்கியமாகும். இந்த வனவிலங்குகளின் அழகு, இயல்புகள், வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்வதே ஒரு பெரிய பேறாகும். குறிப்பாக, இளைஞர்கள், வனவிலங்குகள் பாதுகாப்பில் அக்கறை காட்டவேண்டும்.

சென்னை நகரில் வசிக்கும் பெற்றோர்களும், குழந்தை நிறுவனங்களும், குழந்தைகளை, கிண்டி வனத்தில் சிறுவர் சோலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். அங்கு குழந்தைகள் விளையாடுமிடங்கள், குதிரை சவாரி விசிறிகள், பறவைகள் வசிக்கான விலங்குகள் எல்லாம் உள்ளன. சிறியவர்களும், பெரியவர்களும் வந்து அவற்றைப் பார்த்து மகிழ்கிறார்கள். நாளைய குடி மக்களான குழந்தைகள் இதன் மூலம் வன விலங்குகள் பால் அன்பும், அக்கறையும் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இயற்கை செல்வங்களைப் பாதுகாப்பது பற்றி பள்ளிகளில் இளவயதிலிருந்தே சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களுக்கும் இது சம்பந்தமான கொள்கைகளைப் போதிக்க வேண்டும். வனவிலங்குகள் இயற்கைச் செல்வங்கள் பற்றி அறிந்து ஆராய்வதை நமது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் முக்கிய கடமையாகக் கருதுவார்கள் என்றும் நம்புகிறேன்.

குடியானவர்கள், வனத்துறையினர், வேட்டைக்காரர்கள் ஆகிய பல்வேறு தரப்பினரும் வன விலங்குச் செல்வத்தைப் பாதுகாப்பதை முக்கியக் கடமையாகக் கொள்ள வேண்டும். மிருகங்கள் பெருகி வேட்டையாடும் அளவுக்கு உபரியாக இருந்தால் மட்டுமே, வேட்டையாடுவது பற்றி எண்ணவேண்டும்.

சுற்றுப் பயணங்கள் செல்ல விரும்புவோருக்கு எனது வேண்டுகோள் ஒன்று உண்டு. வனவிலங்குப் புகலிடங்களுக்குச் சென்று பாருங்கள். வனவிலங்குகள் பற்றி சரியாக அறிந்து கொண்டு, உயிர்க் குலத்தின் ஒரு பகுதியாக அவைகளைக் கருதுங்கள், வனவிலங்குகளைப் பற்றி நன்கு அறிந்து பயன் பெறுங்கள் என்று அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[நிதி அமைச்சர் திரு. பக்தவத்ஸலம் அவர்கள் சென்னை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றின் சாரம்.]

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் நல்ல வகையில் கிடைக்க வழிவகுக்க வேண்டும். இதனை திறம்படச் செய்ய முதலில் ஊரில் இன்றைய நிலையை விளக்கும் புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும். இவற்றை மக்களுக்கெல்லாம் விளக்கிக் காட்டி அவர்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் தேவையாகும்.

கிராமப் பஞ்சாயத்து கிராமக் கைத் தொழில்கள் வளர துணை நிற்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஊரில் செல்வாக்கு பெற்றவர்களே. அவர்கள் நினைத்தால் "பல் நோக்கு கூட்டுறவு சங்கங்களின்" மூலமாகவோ "சேவைக் கூட்டுறவு சங்கங்களின்" மூலமாகவோ கைத் தொழில்களைத் தொடங்கி பலருக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கலாம்.

கிராமப் பஞ்சாயத்து சிந்தித்து வேலை செய்யும்பொழுது கடமையைச் செய்வதுடன் வருவாயையும் பெருக்கிக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, ஊரின் சுத்தம், சுகாதாரத்தைப் பார்ப்போம். பல கிராமங்களில் தனிப்பட்ட மனிதர்களிடம் காணப்படுகின்ற சுத்தம் தெருக்களிலும் பொது இடங்களிலும் காணப்படுவதில்லை. ஒருவர் இருவரை வேலைக்கு வைத்து தெருக்களையும் பொது இடங்களையும் சுத்தம் செய்து, குப்பை கூளத்தை நல்ல முறையில் உரக் குழியில் போட்டு உரமாக மாற்றினால், பின்னர் அது விளைச்சலைக் கூட்டும் செல்வமாக மாறுவதைக் காணலாம். குப்பையாக்கி விற்பதன் மூலம், பஞ்சாயத்துக்கு வருவாயும் கூடுகின்றது.

ஊர்ப்பொது இடங்களில் மரங்களை வைத்து உண்டாக்கலாம். பழ மரங்களையோ, பசுந்தாள் உரம் நல்கும் மரங்களையோ வைத்து வளர்ப்பதன் மூலம் ஊர் அழகோடு விளங்குவதோடு, காலப்போக்கில் நல்ல வருவாய் ஊருக்குக் கிடைக்கவும் வழி ஏற்படுகின்றது.

கிராமப் பஞ்சாயத்தின் வெற்றி, வருங்காலப் பொருளாதார சமுதாய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அடித்தளத்தை அமைப்பதில் இருக்கின்றது. அடித்தளம் நன்கு அமைந்து விட்டால் தடையற்ற வளர்ச்சியை எதிர்காலத்தில் காணலாம்.

பாலைவனம் சோலைவனமாக......

பாலை வனத்தையும் சோலை வனமாக்க மனிதனால் முடியும். இதற்கு வேண்டுவன—உழைப்பு, கூட்டுறவு, நல்லெண்ணம். பஞ்சாயத்தால் இவற்றை வளர்க்க முடியும். இன்று நாம் உரிமைகளை அறிந்த அளவிற்கு கடமைகளை உணரவில்லை. கடமைகளைச் சரிவரச் செய்யாத போது இருக்கின்ற உரிமை, உண்மையான உரிமையாக இருக்க முடியாது. இதனை மனதில் கொண்டு பஞ்சாயத்துக்கள் பணியாற்றினால் பாருக்குள்ளே நல்ல நாடாகப் பாரதம் விளங்குமெனறு உறுதியாகக் கூறலாம்.

அறிவியல் கட்டுரை : 9

புயல் வருகிறது

[திரு கே. எஸ். மகாதேவன், எம். ஏ., பி. எஸ்ஸி.]

[பிப்ரவரி இதழில் திரு கே. எஸ். மகாதேவன் அவர்களின் "வான் நீலே" என்ற கட்டுரை வெளி வந்தது. காற்றுத் தேவனின் விளையாட்டுகளை அவர் இக்கட்டுரையில் விவரிக்கிறார். உரையாடல் முறையில், எளிய நடையில், விஞ்ஞான உண்மைகளைத் தெளிவாக்கும் முறை போற்றற்குரியது—

ஆசிரியர்]

கந்தையா :—தம்பி, பழனி! கேட்டாயா செய்தியை? புயல் வருகிறதாமே? ஊரெல்லாம் இதே பேச்சாக இருக்கிறதே!

பழனி :—ஆம், தாத்தா! நான் கூட வானொலியில் கேட்டேன். இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரத்தில் வருகிறதாம்! என்ன செய்வது? எதற்கும் முன் எச்சரிக்கையாக இருப்போம். ஆடு மாடுகளை மரத்தடியில் கட்டி வைக்க வேண்டாம்; பெண்டு பிள்ளைகளெல்லாம் 'குடிசைகளிலே இருக்கவேண்டாம்; அவர்களைக் கோவில் மண்டபத்தில் போய்த் தங்கும் படி செய்வோம்.

கந்தையா :—என்னமோ, தம்பி! காலம் கெட்டு விட்டது, உலகத்திலே நல்லது கெட்டது என்பது இல்லாமல் போய்விட்டது, மனிதனைத் தண்டிக்க வேண்டுமே? அதற்குத்தான் இப்படிப் புயல் வெள்ளம் எல்லாம் வருகின்றன!

பழனி :—என்ன, தாத்தா! நல்லது செய்கிறவர்கள் நல்லவர்கள்; கெட்டது செய்கிறவர்கள் கெட்டவர்கள். இது எல்லோருக்கும் தெரிந்த செய்தி தானே! நாட்டிலே இயற்கையாக வந்து போகும் புயல் வெள்ளத்திற்கெல்லாம் மக்களைக் குறை சொன்னால் ஆகுமா?

கந்தையா :—என்னவோ தம்பி! நாங்கள் எல்லாம் கிராமத்தில் இருப்பவர்கள் தானே! எங்களுக்குத் தெரிந்த பாடத்தை நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்! உன்னைப் போல் பட்டணத்திலே போய்ப் படித்திருந்தால் புதிய புதிய செய்திகளையெல்லாம் தெரிந்து கொண்டிருக்கலாம்!

பழனி :—அப்படிச் சொல்லாதீர்கள் தாத்தா! கிராமத்தில் இருக்கும் உங்களுக்குத்தான் அனுபவம் அதிகம். நீங்கள் எல்லாவற்றையும் நேரிலேயே பார்த்துத் தெரிந்துகொள்ளுகிறீர்கள். நாங்களோ வெறும் புத்தகத்தையே திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டு இருக்கின்றோம்!

கந்தையா :—பழனி! நீ நல்ல தம்பி! நாலும் தெரிந்து கொண்டு இருக்கிறாய்; நீ சொல்வதும் உண்மை தான். காற்றும் மழையும் மனிதர்களைக் கேட்டுக் கொண்டா வருகின்றன? அது போகட்டும். இந்தப் புயல் காற்று ஏன் வருகிறது? எப்படி உண்டாகிறது?

பழனி :—அப்படிக் கேளுங்கள் தாத்தா! நீங்கள் புயல் காற்று வீசும்போது பார்த்திருக்கிறீர்களா?

புயல் காற்று வீசுகிறது.

கந்தையா :—ஆகா! என் வயதிலேயே நான்கு புயலைப் பார்த்திருக்கிறேன். இருபது வருசத்திற்கு முன்னால் ஒரு புயல் வந்தது. நீ அப்பொழுது வேட்டி கூடக் கட்டத் தெரியாத சிறு பிள்ளையாகத் திரிந்துகொண்டிருப்பாய்! அந்தக் காற்றிலே இந்த ஊர் என்ன பாடு பட்டது தெரியுமா?

பழனி :—என்ன நடந்தது?

கந்தையா :—என்ன நடந்ததா? அதை நினைத்தால் இப்பொழுதுகூட என் உடம்பு நடுங்குகிறது! ஊரிலே ஒரு வீடு மிச்சமில்லை; கூரை எல்லாம் பிய்த்துக் கொண்டு போய்விட்டது! நமது குளத்துப்படித் துறையிலே ஒரு புளியமரம் இருந்தது. அந்தப் பெரிய மரத்தைத் தும்பைச் செடியைப் பறிப்பது போலத் திருகி எறிந்து விட்டது!

பழனி :—அடடா! அப்புறம்?

கந்தையா :—மூன்றும் வருசம் காய்ச்சலிலே இறந்து போனானே முத்து மாணிக்கம்? அவனை உனக்கு நினைவிருக்கிறதா?

பழனி :—ஓ ? நன்ருய் நினைவிருக்கிறதே ! வாயைக்கூட கொஞ்சம் கோணலாக வைத்துக்கொண்டே பேசு வானே ?

கந்தையா :—ஆம், ஆம், அவனேதான் ! வயலிலே பரம் படித்துக்கொண்டிருந்த அவன் அந்தப் புயலில் தான் சிக்கிக் கொண்டான். அவன் உடுத்திருந்த ஆடைகள் கிழிந்து சல்லி சல்லியாகப் பறந்துவிட் டன. காற்றில் பறக்கும் சருகுபோல ஆகிவிட்டது அவன் பாடு !

பழனி :—ஐயோ, பாவம் !

கந்தையா :- இன்னும் கேள் தம்பி ! வேதனை தாங்க முடியாமல் கத்துவதற்கு வாயைத் திறந்தான், திறந்த வாயைக் காற்று அப்படியே திருப்பி முறுக்கி விட்டது ! அவன் உயிர் பிழைத்தது கடவுள் புண்ணியம் ; ஆனல் வாய்மட்டும் கடைசிவரையில் கோணலாகவே போய்விட்டது !

பழனி :—ஆம், தாத்தா ! இந்தப் புயலின் கொடுமை கடற்கரை ஓரத்தில் தான் இன்னும் அதிகமாக இருக்கும். துறைமுகங்களில் நிற்கும் கப்பல்கள் கூட ஒன்ருேடு ஒன்று மோதி உடைந்து மூழ்கிவிடும் ! சப்பான் நாட்டிலே வீசிய ஒரு புயல், கரையோரத்தி லிருந்த சிறு கப்பல்களையெல்லாம் தெருக்களிலே தூக்கி எறிந்துவிட்டது.

கந்தையா :—அடே அப்பா ! அவ்வளவு பலம் இருக்கி றதா அந்தப் புயலுக்கு ?

பழனி :—ஆம், தாத்தா ! ஒரு புயல் காற்றுக்கு இருக்கிற ஆற்றலை வைத்துக் கொண்டால், உலகத்தில் இருக் கிற எந்திரங்களையெல்லாம் மூன்று ஆண்டுகளுக்கு நிற்காமல் ஓட்ட முடியும் !

கந்தையா :—என்ன இருந்தாலும் இந்தக் காற்றுக்கு இவ்வளவு பலம் எப்படித்தான் வருகிறதோ தெரிய வில்லை !

பழனி :—நன்ருகச் சொன்னீர்கள் தாத்தா ! கனமில் லாத பொருள்களை யெல்லாம் காற்றுப்போல இருக் கிறது என்று நாம் சொல்லிவிடுகிருேம், ஆனல், நாம் நினைப்பது போலக் காற்று கனம் இல்லாத பொருள் இல்லை ; காற்றுக்கும் கனம் உண்டு.

கந்தையா :—அப்படியா ?

பழனி :—நம் ஒவ்வொருவர் தலையிலும் இரண்டு நெல் மூட்டை கனத்திற்குக் காற்று எப்பொழுதும் அழுத் திக்கொண்டே இருக்கிறது ; ஆனல் நாம் பழகிப் போய்விட்டதால் அதை உணர்வதே இல்லை !

கந்தையா :—அதனல் தான் காற்று அப்படி விசையோடு வந்து நம்மீது மோதுகிறதோ ? சற்று ஏமாந்து போனல் கையிலே இருக்கிற குடையைக்கூட அல் லவா பிடுங்கிக்கொண்டு போய்விடுகிறது !

பழனி :—ஆம் தாத்தா ! காற்று வேகமாக வீச வீச அதற்கு ஆற்றலும் அதிகமாக வளரும்.

கந்தையா :—ஏன் தம்பி ! காற்றின் வேகத்தை எப்படித் தெரிந்து கொள்வது ?



காற்றின் வேகம் அளக்கும் கருவி·

பழனி :—காற்றின் வேகததை அளப்பதற்கு நல்ல கருவி கள் இருக்கின்றன. இருந்தாலும் நாம் கருவிகள் இல்லாமலேயே தெரிந்து கொள்ளலாம். கொடி மரத்தில் உள்ள கொடிகள் அசையவில்லை ; புகைப் போக்கியிலிருந்து புகை நேரே மேலே எழுந்து செல் கிறது என்ருல், காற்றின் வேகம் மணிக்கு ஒரு மைலுக்குக் குறைவாக உள்ளது என்று சொல்ல லாம். மரத்திலுள்ள இலைகள் “ சலசலத்து ”க் கொடிகள் படபடத்தால் காற்று பத்து மைல் வேகத் தில் வீசுகிறது என்று தெரிந்துகொள்ளலாம். சிறிய கிளைகள் அசைந்தாடினல் காற்றின் வேகம் இருபது மைல் இருக்கும். பெரிய கிளைகளை ஆட்டிக் கையி லுள்ள குடையைப் பிடுங்கும் காற்றிற்கு இருபத் தைந்து மைல் வேகம் இருக்கும். மரங்களை முறித் துத் தள்ளும் காற்று முப்பத்தைந்து மைல் வேகத் திற்குக் குறையாமல் வீசும் !

கந்தையா :—அப்படி என்ருல் புயல் காற்றின் வேகம் ?

பழனி :—காற்றின் வேகம் மணிக்கு எழுபத்தைந்து மைலுக்குமேல் போய்விட்டால் அதனைப் புயல் என்று சொல்லுகிருேம் !

கந்தையா :—ஏன், தம்பி ! இந்தக் காற்று இருந்த இடத்திலேயே இருக்காமல் ஏன் இப்படி வீசித் தொலைக்கிறது ?

பழனி :—அப்படிக் கேளுங்கள் தாத்தா ! எல்லாம் வானத்திலே எரிந்து கொண்டிருக்கிற இந்தச் சூரியனலேதான் !

கந்தையா :—என்ன தம்பி ! புயல் வருவதற்கு ஒரு வரையும் குறை சொல்லக்கூடாது என்று சொன் ஞய் ; இப்பொழுது நீயே சூரியன் மேல் பழியைப் போடுகிருயே !

பழனி :—என்ன தாத்தா செய்வது ! எதிலும் நல்லதும் கெட்டதும் கலந்துதானே இருக்கிறது !

கந்தையா :—சூரியனுக்கும் புயலுக்கும் அப்படி என்ன தொடர்பு இருக்கிறது ?

பழனி :—சூரியனது வெப்பம்தான் காற்றை ஒரு இடத்திலிருந்து மற்ருெருஇடத்திற்கு நகரும்படிச் செய்கிறது.

கந்தையா :—அது எப்படி ? கொஞ்சம் விளங்கும்படிச் சொல்லு தம்பி !

பழனி :—சூரியன் நம் பூமிக்கு வெப்பம் தருகிறது. ஆனால், பூமியின் எல்லாப் பகுதிகளும் ஒரே அளவில் வெப்பத்தை அடைவதில்லை ! சூரியனின் கதிர்கள் நேராகப் படியும் பூமியின் நடுப்பகுதி அதிக வெப்பத்தை அடைகிறது. வடகோடியும், தென் கோடியும் அவ்வளவு வெப்பத்தை அடைவதில்லை.

கந்தையா :—அதனால் ?

பழனி :—பூமியின் நடுப்பாகத்திலுள்ள காற்று வெப்பம் அடைவதால் இலேசாக மாறி மேலே எழுகிறது. அதனால் அந்தப் பகுதியில் காலி இடம் ஏற்படுகிறது ; அதே சமயத்தில் அந்தக் காலி இடத்தை நிரப்புவதற்காக, பூமியின் வடகோடி தென் கோடியிலிருந்து கனமான குளிர்ந்த காற்று அங்கு விரைந்து வருகிறது ; அப்பொழுது அந்தக் காற்றுக்களில் சுழற்சி ஏற்படுகிறது ; அதனால் புயலாக மாறி பூமியின் பரப்பின் மீது வேகமாக வீசுகிறது.

கந்தையா :—ஓகோ ! அதனால்தான் புயல் காற்றைச் சுழல் காற்று என்று சொல்கிருர்களோ ?

பழனி :—ஆம் தாத்தா ! சில மணிக் காலத்துக்குள் வீசிவிட்டு மறையும் சிறிய காற்றைச் சுழல் காற்று என்று சொல்லுவார்கள் ; இரண்டு மூன்று நாள் காலம் தொடர்ந்து வீசும் பெரும் காற்றைப் புயல் காற்று என்றும், சூருவளி என்றும் சொல்லுவார்கள்.

கந்தையா :—தம்பி, பழனி, காற்று நேராகத்தானே வீச வேண்டும் ? நேராக வருகின்ற காற்று எப்படிச் சுழலத் தொடங்குகிறது ?

பழனி :—ஓ ! அதுவா ? நாம் வாழ்கின்ற இந்தப் பூமி உருண்டை ஒரு பம்பரம் போலச் சுழன்று கொண்டே இருக்கின்றது என்பதைக் கேட்டிருக்கிறீர்களா தாத்தா?

கந்தையா :—ஆமாம் ! கேட்டிருக்கிறேன் ; அதனால் தான் இரவும் பகலும் மாறி மாறி வருகின்றன என்று சொல்லுகிருர்கள்,

பழனி :—அதுவே தான் தாத்தா ! பூமி சுழன்று கொண்டே இருப்பதால், பூமியின் மீது நகரும் காற்றுக்களும் நேராக வீசாமல் திசை மாறித் திரும்பியே வீசுகின்றன.

கந்தையா :—அதனால்தான் புயல் காற்றும் வட்டமாகச் சுழன்று வீசுகிறதோ ?

பழனி :—ஆம், தாத்தா ! குயவனது திருகைச் சக்கரம் போல சுழன்று கொண்டு வருகிறது !



புயல் கடலில் உருவாகிறது....

கந்தையா :—இந்தப் புயல் காற்று முதல் முதல் எங்கே தோன்றும் ? கடலில்தான் தோன்றுமா ? இல்லை, நிலத்தில் உண்டாகுமா ?

பழனி:—சிறிய சுழல் காற்றுக்கள் நிலப்பரப்பிலே தோன்றும். ஆனல் புயல் காற்று எப்பொழுதும் பரந்து கிடக்கும் பெரிய கடல் பரப்பில் தான் உண்டாகும். பூமியின் நடுப்பாகத்தில் உள்ள அமைதியான கடல் நீர் நாள்தோறும் சூரியனால் வெப்பம் அடைந்து மேலே உயர்கிறது ; பூமியின் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் அவ்விடம் நோக்கிக் குளிர்ந்த காற்று பாய்ந்து சுழன்று புயலை உண்டாக்குகிறது. கடலில் தான் புயல்காற்று முழு வேகத்துடன் வீசும் ; நிலத்திலே புகும்போது மலைகள், மரங்கள் போன்ற தடை இருப்பதால் அதன் வேகம் குறைந்து விடுகிறது.

கந்தையா :—தம்பி ! எனக்கு ஒன்று கேட்கவேண்டும் என்று தோன்றுகிறது ! இந்தப் புயல் ஒரே இடத்தில் சுழன்று கொண்டிருக்காமல் ஏன் நகர்ந்து சென்று நாட்டிலே பல இடங்களையும் அழிக்கின்றது ?

பழனி :—இது நல்ல கேள்வி தாத்தா ! ஆட்டி விட்ட பம்பரம் ஒரே இடத்திலா சுற்றிக்கொண்டு நிற்கிறது ? சுழன்று கொண்டே ஒரு இடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்கு வளைந்த ஒரு பாதையில் ஓடுகிறதல்லவா ? புயல் காற்றும் அப்படித்தான் வேகமாகச் சுழன்ற

படி, இடம் பெயர்ந்து செல்கிறது ! நிலப் பகுதியில் புகுந்ததும் புயல் காற்றின் வேகம் அடங்குகிறது ; ஆனால் அதற்குள் அதிகமான அழிவைச் செய்து விட்டுத்தான் ஓய்கிறது !



புயல் நாட்டில் நுழைதல்....

கந்தையா :—எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது.

பழனி :—என்ன தாத்தா ?

கந்தையா :—பத்து வருசத்திற்கு முன்பு ஒரு புயல் வந்தது. காற்று ஒரு நாள் முழுவதும் அடித்துப் பின்பு ஓய்ந்துவிட்டது ! நாங்கள் எல்லாம் “ அப்பாடா, சனி தொலைந்தது ” என்று இருந்தோம் ! ஆனால் என்ன ஏமாற்றம் ? மறுநாள் மறுபடியும் காற்று அடிக்க ஆரம்பித்துவிட்டது ! மறுபடியும் மரம் மட்டையெல்லாம் முறிந்து அழிந்தன. ஏன் தம்பி ! ஒரே காலத்தில் இப்படி இரண்டு புயல் கூட வருமா ?

பழனி :—ஆ ! ஆ!! அப்படி வந்தது இரண்டு புயல் இல்லை தாத்தா ! ஒரே புயல்தான் அது ! முதலில் வந்தது புயல் வட்டத்தின் முன் பக்கம் ; இரண்டாவது வந்தது புயல் வட்டத்தின் பின் பக்கம் ; நீங்கள் ஓய்ந்துவிட்டது என்று எண்ணி ஏமாந்தது புயல் வட்டத்தின் அமைதியான நடுவிடம் !

கந்தையா :—என்ன தம்பி ! புயலுக்கு நடுவில் அமைதியா ? கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லு.

பழனி :—காற்று ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடம் நோக்கிப் பக்க வாட்டத்திலே வீசும் போதுதான் அதன் விசையை நாம் அறிகிறோம். ஆனால், காற்று கீழிருந்து மேலேறிச் சென்று கொண்டிருந்தால், அங்கு காற்றே வீசாமல் அமைதியாக இருப்பது போல் தான் தோன்றும். புயல் சுழலும்போது நடுவில் உள்ள காற்று மேலே உயர்ந்து சென்றபடி இருக்கிறது என்பதைப் பார்த்தோமல்லவா ?

கந்தையா :—ஆம் ! புயல் வட்டத்தின் நடுவில் வெப்பம் அடைந்த காற்று மேலே ஏறிக் கொண்டிருக்கிறது என்று சொன்னாய்.

பழனி :—அதனால்தான் அந்த இடத்திலே காற்றே வீசாததுபோல அமைதியாக இருக்கிறது.

கந்தையா :—ஓ ! அப்படியா ?

பழனி :—புயல் வட்டம் சுழன்று கொண்டு நகர்ந்து வரும் போது சக்கரம் போன்ற அதன் முன் பாகம் நாட்டில் நுழைந்து அழிவை உண்டாக்குகிறது, பின்னர் புயல் வட்டத்தின் நடுப்பாகம் வரும் போது அந்த இடத்தில் அமைதி ஏற்படுகிறது, பின்னர் புயல் வட்டத்தின் பின் பாகம் வரும் போது மீண்டும் அழிவு வேலை தொடங்குகிறது !

கந்தையா :—ஆ ! இப்பொழுது நன்றாகத் தெரிந்து கொண்டேன் ! ஏன் தம்பி ! இந்தப் புயல் வட்டம் எவ்வளவு பெரிதாக இருக்கும் ?

பழனி :—புயல் வட்டத்தின் குறுக்களவு ஐநூறு மைலுக்கும் அதிகமாகப் பரவிக் கிடக்கும் ! புயல் வட்டத்தின் மையம் மணிக்குப் பன்னிரண்டு மைல் வேகத்தில் நகர்ந்து செல்லும் !

கந்தையா :—சுழன்று வீசும் காற்றின் வேகம் ?

பழனி :—மணிக்கு இருநூற்று ஐம்பது மைலுக்கும் அதிகமாக வீசி வீடு வாசல்களைத் தரைமட்டமாக்கும்.

கந்தையா :—ஏ ! அப்பா ! ! நினைக்கவே அச்சமாக இருக்கிறதே !

பழனி :—ஆம், தாத்தா ! புயல் நாட்டிலே புகுந்து செய்யும் கொடுமை அப்படி மக்களை நடுக்க வைக்கிறது!

கந்தையா :—இந்தப் புயல் வரும் போது மழையும் ஏன் கூடச் சேர்நது கொள்கிறது ?

பழனி :—சுழன்று வீசுகிற காற்று கடலில் உள்ள ஈரத்தை உறிஞ்சி மழையைக் கொண்டு வருகிறது. இதனால் புயல் செய்யும் கொடுமை போதாதென்று பெரு மழையும் சேர்ந்து கொண்டு நாடு முழுவதையும் வெள்ளக் காடாக ஆக்குகிறது.

கந்தையா :—என்ன கொடுமை !

பழனி :—இன்னும் கேளுங்கள் தாத்தா ! புயல் காற்றின் வேகத்தால் கடல் அலைகள் மலைபோல் எழும்புகின்றன. கடல் பொங்கி உள்நாட்டில் நுழைந்து விடுகிறது ! புயலும் மழையும் செய்த கொடுமை போதாதென்று கடலும் தனது கை வரிசையைக் காட்டி விடுகிறது ! நம் தமிழ் நாட்டிலே வேதாரணியம் கோடிக்கரைப் பகுதிகளில் இந்தக் கொடுமை அடிக்கடி நடக்கிறது !

கந்தையா :—ஆம் தம்பி ! நான் கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன், நாலு வருசத்திற்கு முன்பு வீசிய புயலின போது கடல் நீர் புகுந்ததால், ஆயிரக் கணக்கான ஏக்கர் உள்ள நஞ்சைப பயிர்களெல்லாம் கருகிப் பாழ் பட்டு விட்டனவாம் !

பழனி :—தாத்தா ! இன்னும் சில நாடுகளில் புயல் வரும்போது பூமியும் நடுங்க ஆரம்பித்து விடுகிறது. சப்பானில் இப்படிப் புயலும் பூமி நடுக்கமும் வருவது சாதாரண நிகழ்ச்சி ! புயலுக்கும் வெள்ளத் திற்கும் தப்பிப் பிழைத்த வீடுகளெல்லாம் பூமி நடுங்கும்போது "பொல பொல" என விழுந்து தரை மட்டமாகி விடும் !

கந்தையா :—ஐயோ ! சொல்லாதே தம்பி ! கேட்கவே பயமாக இருக்கிறது. இந்தப் புயலில் இருந்து தப்ப ஏதாவது வழி இருந்தால் சொல்லு !

பழனி :—நிலப் பகுதியில் ஏற்படும் சுழல் காற்றுக்கள் "திடீர்" என்று தோன்றி அழிவு வேலையைத் தொடங்கும். கண்மூடித் திறப்பதற்குள் பெரிய கட்டடங்களை எல்லாம் முறுக்கி வீழ்த்தி விட்டுப் போய் விடும் ! இருந்தாலும் சுழல் காற்று வட்டம் மிகவும் சிறிதாக இருப்பதால் அதிக அளவில் அழிவு வேலையைச் செய்வதில்லை ! சுழல் காற்று வட்டம் நகரும் பாதைக்கு அரை மைல் விலகி இருந்தால் கூடத்தப்பித்துக் கொள்ளலாம் ! நல்ல காலமாக நம் நாட்டில் இவை தோன்றுவதில்லை. ஆனால் பெரிய புயல் காற்று உண்டாவதை முன் கூட்டியே இப் பொழுது அறிந்து கொள்ள வழி இருக்கின்றது.

கந்தையா :—என்ன வழி தம்பி ?

பழனி :—இப்பொழுது வெப்பம், காற்று, மழை ஆகிய வற்றை ஆராயும் ஆராய்ச்சி வளர்ந்திருக்கிறது. புயல் தோன்றுவதற்கு முன்னால் காற்றின் அழுத் தம் "திடீர்" என்று குறையும் இதனை அளக்கக் கருவிகள் உண்டு. அதனால் புயல் வருவதை முன் கூட்டியே அறிந்து கொள்கின்றனர். உடனே தந்தி, வானொலி மூலம் நாடு முழுவதும் எச்சரிக்கை செய்து விடுகிறார்கள்.

கந்தையா :—கடலில் மிதக்கும் கப்பலில் இருப்பவர்கள் புயல் வந்தால் என்ன செய்வார்கள் ?

பழனி :—புயல்வட்டம் அருகில் வருவதற்கு முன்பாகவே கடலில் அலைகள் பெரிது பெரிதாக எழுந்து வரத் தொடங்கும் ; அந்த அலைகளைக் கொண்டு புயல் நகரும் திசையை அறிந்து கொள்ள முடியும். உடனே கப்பல் தலைவர்கள் புயல் வட்டம் நகரும் பாதையில் நிற்காமல் கப்பலை அப்பால் நகர்த்திக் கொண்டு போய் தப்பித்துக் கொள்கின்றனர்.

கந்தையா :—சரி, இப்பொழுது புயல் வந்து கொண்டிருக் கிறதே ! நம்மால் செய்யக் கூடியது என்ன இருக் கிறது ?

பழனி :—வீடுகளுக்கருகில் இருக்கும் உயர்ந்த மரங்களின் இலை தழைகளைக் கழித்து விடலாம் ; இதனால், அந்த மரங்கள் காற்றால் முறிந்து விழுந்து உயிர்ச் சேதம் உண்டாக்குவதில்லை. இரயில் வண்டி மோட் டார் வண்டிகளின் போக்கு வரத்தை நிறுத்தி வைக்கலாம். இதனால், பெரிய அளவில் விபத்துக் களும் உயிர்ச் சேதமும் ஏற்படுவதைத் தடுத்து விட லாம். ஏரி, குளங்களின் வடிகால்களைச் சீராகத் திறந்து வைத்து அவற்றின் கரைகளில் உடைப்பு எடுத்து வெள்ளம் பெருகாமல் பார்த்துக் கொள்ளலாம்.

கந்தையா :—என் தம்பி ! எதிலும் நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கிறது என்று சொன்னாயே ? இந்தப் புயல் காற்றினால் யாருக்காவது நன்மை ஏற்படு கிறதா ?

பழனி :—நன்றாகக் கேட்டீர்கள் தாத்தா ! பருவக் காற்றுதான் நமக்கு மழையைக் கொண்டு வருகிறது. ஆனால், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பருவக் காற்றால் நல்ல மழை பெய்து விடுவதில்லை ! நம் நாட்டில் இராமநாதபுரம் போன்ற வறண்ட பகுதி களில் பருவ காலத்தில் கூட மழை பெய்வதில்லை ! ஆனால், புயல் ஏற்படும் போதெல்லாம் அங்கு நல்ல மழை பெய்து பஞ்சம் ஏற்படாமல் செய்கிறது !

கந்தையா :—அப்படியா ?

பழனி :—இன்னும் வேடிக்கையைக் கேளுங்கள் தாத்தா ! பூக்காது நின்ற மரங்கள் எல்லாம் புயலால் அசைத்து விடப்பட்ட பின்பு பூத்துக் குலுங்குகின்றன ! புய லுக்குத் தப்பிப் பிழைத்த தென்னை மரங்கள் ஓட் டிக்கு ரெட்டியாகக் காய்த்துத் தள்ளின என்று தஞ்சாவூர்ப் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லு கிறார்கள் !

கந்தையா :—தம்பி, பழனி ! இன்றைக்குப் புயலை பற்றி நிறைய தெரிந்து கொண்டேன். நானும் பல புயல்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இப்பொழுது வருகிற புயல் அவ்வளவு சேதம் விளைக்காது என்று எனக்குப்படுகிறது !

பழனி :—ஆம் தாத்தா ! புயலின் வேகம் கிழக்குக் கடலிலேயே தளர்ந்து விட்டது என்று இப்பொழுது அறிக்கை வந்திருக்கிறது.

கந்தையா :—அப்பா ! மக்கள் பிழைத்தார்கள் !

தொடர்கட்டுரை :

அழகு தவழும் நீலகிரியில் " அளவுள்ள குடும்பம் " காண மக்கள் ஆர்வம் :

வளரும் சமுதாயம்

பஞ்சாயத்துக்களின் புதுமலர்ச்சி

கண்டதும் கேட்டதும்

பொதுஜனத் தொடர்பு அதிகாரி

[" நீலகிரி மாவட்டத்தில் நடைபெறும் ஆக்கப்பணிகள் பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது. மலை சூழ்ந்த இப்பிரதேசத்தில் புதிய பஞ்சாயத்து ஆட்சியில் மக்கள் காட்டும் ஆர்வம் மகிழ்ந்து பாராட்டற்குரியது. அடவிகள் சூழ்ந்த சின்னஞ்சிறு ஊர் "தெங்கு மரஹட." மூர்த்தி தான் சிறிதே தவிர, அதன் கீர்த்தி மிகப் பெரிது — ஆசிரியர்.]

" தமிழ் நாட்டிலேயே மிக உயர்ந்த மலைச் சிகரம் இது தான். 8,642 அடி உயரம் உள்ள இந்த மலை உச்சியிலிருந்து பார்த்தால் இயற்கைத் தேவியின் அழகுக் காட்சியை அப்படியே அள்ளிப் பருக முடியும். வானோங்கி நிற்கும் அந்தமரங்கள்—மலைச்சரிவுகளைத் தக்க முறையில் பண்படுத்தி, விவசாயம் செய்யும் தனிச் சிறப்பு—அதுமட்டுமா? தேயிலை, காப்பித் தோட்டங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள்——" என்று உடனிருந்த நண்பர் வர்ணித்துக் கொண்டேபோனார். கண்ணுக்கினிய கவினெபெருவனப்பில் மெய்மறந்திருந்த என்னை, ஒருபேரொலி நனவுலகத்திற்கு அழைத்து வந்தது. பள்ளிக்கூடத்துச் சிறுவர், சிறுமியர் பலர், தங்கள் ஆசிரியர்களுடன் அந்த இடத்திற்கு வந்தனர். சிறிது நேரம் கழித்து, பல்வேறு வாகனங்களில், மேனாட்டுப் பிரயாணிகள், உள்நாட்டுப் பிரமுகர்கள் அங்கே வந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டவண்ணமிருந்தனர்.

எழில் கொஞ்சும் " தொட்டபெட்டா "

" தொட்டபெட்டா " என்ற பெயரால் அமைந்த மலைச் சிகரம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள எழில் கொஞ்சும் இடமாகும். நீலகிரி மாவட்டத்தில் தொட்டபெட்டாவைப் போன்ற இயற்கை அழகும், தனிச் சிறப்பும் வாய்ந்த உல்லாச இடங்கள் அநேகம் உண்டு. கோடையில் அநேகம் பேர் நீலகிரிக்குச் செல்வார்கள். உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் ஆகிய நான்கு பஞ்சாயத்து யூனியன்கள் இந்த மாவட்டத்தில் உண்டு. இந்த இடங்களில் வாழும் பெரும்பாலான மக்களுக்கு புதிய பஞ்சாயத்து ஆட்சி மூலம் எற்பட்டுள்ள புதிய அனுபவங்களைக் கண்டறியச் சென்றேன். மாவட்டக் கலெக்டர் திரு டயஸ், ஐ.ஏ.எஸ்., அவர்களைச் சந்தித்த பின், அவருடைய அந்தரங்க உதவியாளர் திரு. வேத சுந்தரராஜ் அவர்களுடன், பஞ்சாயத்து யூனியன் வேலை விவரங்களை நேரில் அறிய முயன்றேன்.

ஆக்கப்பணி புரியும் தாய்மார்கள்

கோத்தகிரி பஞ்சாயத்து யூனியன் ஆதரவின்கீழ், மாதர்களுக்கென ஒரு விசேஷ முகாம் எற்பாடு செய்யப்பட்டிருந்தது. தாய்மார்கள் பலர் இந்த முகாமுக்கு வந்திருந்து பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்டங்களை அறிவதில் ஆர்வம் காட்டியதை நான் நேரில் காண முடிந்தது. குறிப்பாக, " குடும்பக் கட்டுப்பாடு" திட்டத்தில் தாய்மார்கள் அதிகக் கவனம் செலுத்துவதாகத் தெரிந்தது. கோத்தகிரியில் உள்ள டாக்டரம்மாள் இந்தப் பயிற்சி முகாமுக்கு வந்திருந்து, பொது சுகாதார விஷயங்களை எடுத்துரைத்தார். பல மாதர்கள், தனிப்பட்ட முறையில் குடும்பக் கட்டுப்பாட்டு விஷயமாக அவர்கள் ஆலோசனையைப் பெறுவதற்கு பஞ்சாயத்து யூனியன் தக்க எற்பாடு செய்துள்ளது. (படம் 2 மூன்ருவது அட்டைப் பக்கம் பார்க்க).

அரவங்காடு மாதர் நிலையத்தின் அருமையான பணிகள்

மாதர்நல வேலைகள் பொதுவாக நீலகிரி மாவட்டத்தில், சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. குன்னூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அரவங்காடு என்ற இடத்திற்கு அருகில் உள்ள மாதர் நிலையம் போற்றத்தக்க வகையில் சேவை செய்து வருகிறது. பெண் குழந்தைகளுக்கான பாட்டும், விளையாட்டும், நாடகமும் இங்கே நன்ருகக் கற்றுத் தரப்படுகின்றன. மாவட்டக் கலெக்டர் அவர்கள் தக்க பரிசளித்து இத்தகைய முயற்சிகளுக்கு மேலும் மேலும் ஊக்கமளித்ததை அறிந்து மகிழ்ந்தேன். பிற்போக்கான நிலையில் உள்ள மக்கள், தொழிலாளர்கள் முதலியோரின் குழந்தைகளுக்கு, பொழுதுபோக்கும், தொழில் பயிற்சியும் அளிக்க மாதர்—பாலர் நிலையங்கள், தொண்டாற்றி வருகின்றன. தையல் வேலை, பின்னல் முதலியன இங்கே கற்றுத்தரப்படுகின்றன. சமூக நல போர்டு உறுப்பினரான திருமதி அக்கம்மா தேவி அவர்கள் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆதரவு காட்டி உற்சாகம் ஊட்டி வருவதை மக்கள் நன்றியுடன் குறிப்பிட்டார்கள்.

தாக்கும் குளிர் தாங்க, கம்பளி உடை தயாரித்தல்

குளிர் மிகுந்த இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குக் கம்பளி உடை மிகவும் அவசியம். எனவே கம்பளி ஆடைகளைத் தயாரிப்பதற்கான முயற்சியில், பல பேருக்கு இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது. கோத்தகிரியில் அமைக்கப்பட்டுள்ள "பெண்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம்", இத் துறையில் வியக்கத்தக்க சேவை செய்துள்ளது. 1957-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட, இந்த ஸ்தாபனம், 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதற்கொண்டு, ஒரு கூட்டுறவுச் சங்கமாகப் பதிவாகி உள்ளது. கடந்த மூன்றுண்டுகளில் சுமார் 90–க்கு மேற்பட்ட பெண்களுக்கு பின்னல், தையல் முதலிய தொழில்கள் மூலம் ஓரளவு ஊதியம் அளிக்கப்பட்டது. சராசரி மாதம் ஒன்றுக்கு, சுமார் 500 ரூபாய் ஊதியம் வினியோகிக்கப்படுகிறது. சராசரி மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் விற்பனை செய்யப்படுகிறது. கம்பளி நூலில் இருந்து புது முறையில் பின்னுவதற்காக, நவீன எந்திரம் மேனுட்டிலிருந்து வரவழைக்க சமீபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. (படம்......26-ம் பக்கம் பார்க்கவும்). இந்தக் கூட்டுறவுச் சங்கத்தைத் திறம்பட நடத்தக் காரணமாய் இருப்பவர்கள் E. W. பிரஸ்டன் (Miss E. W. Preston) டெய்லர் (Miss G. M. Taylor) ஆகிய இரு பெண்மணிகளாவர். சுமார் எழுபது வயதுள்ள இந்த மூதாட்டிகள் இருவரும், கூட்டுறவுத் துறையில் நம்பிக்கை கொண்டு, இங்கே தயாராகும் கம்பளி உடைகளை விற்பனை செய்வதற்கும் உதவி புரிந்து வருகின்றனர். சமீபத்தில் திபெத்திலிருந்து வரும் அகதிகளுக்கு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு வேண்டிய கம்பளி உடைகளை அனுப்ப, பெங்களூரில் உள்ள தியஸாபிகல் நண்பர்களின் மூலம் ஏற்பாடு செய்துள்ளனர். கிராமக் கைத்தொழில் வளர்ச்சியில், அரசாங்கம், தனிப்பட்ட நபர்கள் மேலும் ஒத்துழைத்துப் பணிபுரிந்தால் சிறந்த பலன் ஏற்படும் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாகும். இந்தக் கூட்டுறவுச் சங்கத்தார் தயாரிக்கும் பொருள்களை விற்பனை செய்ய, கோத்தகிரியில் ஒரு விற்பனை நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திரு. T.K. பழனியப்பன், I.A.S., திரு. இஸார் I. C. S., முதலிய பல பிரமுகர்கள் இங்கே விஜயம் செய்து, இந்தப் பணியினைப் பாராட்டியுள்ளனர். அண்மையில் "Phool Kari" என்ற ஒரு வகையான வண்ணப் பின்னல் கலையைப் பிரபலப் படுத்துவதற்காக அகில இந்தியக் கைவினைப் பொருள் போர்டார் ஏற்பாடு செய்துள்ளனர். பஞ்சாப் பிரதேசத்தில் தோன்றி வளர்ந்துள்ள இந்த எழிற் கலை, பாரத நாட்டு மாதர்கள் அனைவரும் அறிந்து போற்றக் கூடியதாகும். "பூல் காரி" என்ற பிறமொழிச் சொல்லுக்கு, "பூ வேலை" அல்லது "மலர் வனம்" என்பது பொருள். கண்ணைக் கவரும் பல்வேறு நிறங்களில் அமைந்த பூவேலைப்பாடுகளை, பல்வேறு ரகமான துணிகளில் பொறிக்க, இந்தக் கலை துணை புரிகிறது. திருமதி சகுந்தலா ராய் என்ற அம்மையார், டெல்லியில் உள்ள தமது தலைமை அலுவலகத்திலிருந்து, பல்வேறு ராஜ்யங்களுக்குச் சென்று, இந்தக் கலையை அநேக மாதர் சங்கங்களுக்குக் கற்றுத் தர ஏற்பாடாகி உள்ளது. இந்தத் திட்டத்தை ஒட்டி கோத்தகிரி பஞ்சாயத்து யூனியனில் உள்ள பெண்களுக்கு, இதைக் கற்றுக்கொடுத்ததை நேரில் கண்டேன். தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு வாய்ந்த உருவ அமைப்புகளைச் சேகரித்து, பாரத நாட்டின் மற்ற பகுதிகளில் அவற்றைப் பரப்பவும், இந்த அம்மையார் முயன்று வருவதை அறிந்தேன். இந்திய மக்களின் ஒருமைப்பாட்டுக்கும், பாரதக் கலைகளைப் பரிமாறிக்கொண்டு, ஒற்றுமையுடன் முன்னேறுவதற்கும், இத்தகைய முயற்சிகள் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

பரவி வரும் பல்வேறு தொழில்கள்

கம்பளிஉடைகள் தயாரிப்பதற்கான மூலப் பொருள்களை நீலகிரியில் அதிகமாக உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ரோம உற்பத்திக்குப் பெயர்போன ஒரு வகை ஆடுகளை இங்கே அதிகமாக வளர்க்க ஏற்பாடாகி இருக்கிறது. அரசாங்கம் இதற்கென நவீன விஞ்ஞான முறையில் அமைந்த ஆட்டுப்பண்ணை ஒன்றை, உதகையைச் சார்ந்த பிரதேசத்தில் நடத்துகின்றது. பஞ்சாயத்து யூனியன்களின் சார்பில் நடைபெறுகின்ற விவசாயக் கால்நடை உற்பத்தித் திட்டங்களில் ஆட்டுப் பண்ணை வளர்ச்சிக்கும், மண் வளப் பாதுகாப்பு திட்டங்களுக்கும் விசேஷ முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கு உற்பத்திக்கு ஏற்ற உதவியும், ஆலோசனையும் தர அரசாங்கம் விசேஷக் கவனம் செலுத்துகிறது. தேயிலையைப் பண்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை, கூட்டுறவு முறையில் ஏற்படுத்த, மாவட்டத் தொழில் வளர்ச்சி அதிகாரி முயன்று வெற்றி கண்டுள்ளது, பாராட்டத் தக்க சாதனையாகும். பட்டு உற்பத்தி, தேயிலை அடக்கம் செய்யும் பெட்டிகள் செய்தல் முதலிய பல புதிய தொழில்களும் சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளன.

பண்பாடு மிக்க பழங்குடி மக்கள்

நீலகிரி மலையின் உச்சியிலும் அதைச் சார்ந்துள்ள பல்வேறு பிரதேசங்களிலும் பல்வேறு வகையான மக்கள் வாழ்கின்றனர். தோதுவர், கோத்தர்கள், படகர்கள் முதலிய பல்வேறு பெயர்களால் குறிக்கப்படும் பழங்குடி மக்கள் பெரிதும் முன்னேறி வருகின்றனர். கிராமத் தொழில் வளர்ச்சிக்கான பயிற்சி நிலையங்களை அரசாங்கம் நடத்துகின்றது. கருமார் தொழில், தச்சுவேலை முதலியவற்றை நவீன யந்திரங்களின் உதவியால் திறம்படச் செய்வதற்காக இளைஞர்களுக்குத் தக்க பயிற்சி இங்கே தரப்படுகின்றன. (படம்–2, கடைசி அட்டைப் பக்கம் பார்க்க). அரிஜன மக்களுக்கான குடியிருப்பு வசதிகளை அரசாங்கம் அமைத்துள்ளது. சுகாதாரமுள்ள சூழ்நிலையில், சீரான முறையில் அமைக்கப்பட்டுள்ள புதிய வீடுகள் இவர்களுக்கெனக் கட்டப்பட்டுள்ளன. பழங்காலத்திலேயே, படகர்கள் வாழும் கிராமங்கள் திட்டமிட்ட முறையில் அமைந்துள்ளது ஆச்சரியமளிக்கும் செய்தியாகும். படகர்கள் வாழும் வீடுகளின் முன்புறங்கள் எல்லாம் ஒரே அளவில் அமைந்துள்ளன. சமுதாய வாழ்வுக்கான எல்லாச் சடங்குகளும் பொதுவான முறையில் நடைபெறுவதற்கேற்ற வகையில் வீட்டமைப்பும், தெருக்களின்

அமைப்பும் உள்ளன. பழங்காலம் முதற்கொண்டு ஒன்றுபட்ட சமூக வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்திருந்த ஓர் ஒழுங்கு முறையை இந்தப் பண்பாடு எடுத்துக் காட்டுகின்றது. மேலும், நீலகிரியில் வாழும் மக்களிடையே விளையாட்டுப் போட்டிகளும், கோஷ்டி நடனங்களும் சிறந்த முறையில் ஆக்கம் பெற்று வருகின்றன. கால் பந்து விளையாட்டில் இளைஞர்கள் விசேஷக் கவனம் செலுத்துகின்றனர். பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களிலுள்ள செய்தி நிலையங்களும், கோழிப் பண்ணைகளும், பஞ்சாயத்துகளில் உள்ள நூல் நிலையங்களும், பால் சப்ளை கூட்டுறவு சங்கங்களும் சிறந்து பணியாற்றுகின்றன.

நீலகிரி, அடிவாரத்தில் உள்ள ஒரு கிராமத்திற்குச் செல்லும் வாய்ப்பை நான் ஏற்படுத்திக் கொண்டேன். மூலை முடுக்கில் உள்ள பட்டி தொட்டிகளைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தில், காடுகளுக்கிடையில் உள்ள ஒரு கிராமத்தை நேரில் காண விரும்பினேன். "**தெங்கு மரஹட**" என்ற பெயர் கொண்ட கிராமத்திற்குப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அழைத்துச் சென்றார். கோத்தகிரி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அந்தக் கிராமம் நீலகிரியின் அடிவாரத்தில் அடர்ந்த காடுகளுக்கிடையில் அமைந்துள்ளது. யானைகளின் கூட்டம் இந்தப் பகுதியில் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இத்தகைய சூழ்நிலையில் வாழும் மக்களிடையே "குடும்பக் கட்டுப்பாடு" திட்டத்திற்கு எத்தகைய வரவேற்பு கிடைத்தது என்பதை பற்றி, பஞ்சாயத்து யூனியன் பொறுப்பாளர்களிடம் விசாரித்தேன். அப்பொழுது நீலகிரி மாவட்ட குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரி, சில மாதங்களுக்கு முன்பு மேற்சொன்ன கிராமத்திற்குச் சென்றபோது தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துச் சொன்னார். "அப்படியானால், அந்தக் கிராமத்திற்கு அவசியம் போய்த்தான் ஆகவேண்டும்", என்று நான் முடிவுசெய்தேன்.

சிந்தையைக் கவர்ந்து நிற்கும் சின்னஞ் சிறு ஊர்

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த இந்த வனாந்தர கிராமத்திற்கு வண்டியில் செல்ல வேண்டுமானால், கோவை மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம், பவானிசாகர் ஆகிய ஊர்களின் வழியாகச் சுற்றி வந்து, ரிசர்வ் காடுகளின் வழியே, சுமார் இருபது மைல் தூரம் செல்ல வேண்டும். "தெங்கு மரஹட" என்ற அந்தக் கிராமத்திற்கு, பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளுடன், காலை சுமார் 10 மணிக்குச் சென்றேன். மலையடிவாரத்தில் உள்ள ரிசர்வ் காட்டில், சுமார் 500 ஏக்கர் நிலத்தைச் சீர்படுத்தி அழகிய மருத நிலமாக, அவ்வூர் கூட்டுறவுச் சங்கத்தார் அமைத்திருக்கிறார்கள். நஞ்செய், புஞ்செய் பயிர்கள் வளமுடன் விளங்குகின்றன. சுமார் 1,500 ஜனத்தொகை கொண்ட அந்தக் கிராமத்தில் கூட்டுறவு இயக்கம் பல வகைகளிலும் ஊடுருவி வளர்ந்துள்ளது. உழவு செய்வது முதல், தானியங்கள் விற்பனை செய்வது, வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்குவது முதலிய எல்லாக் காரியங்களும் கூட்டுறவு முறையில் வெற்றியுடன் நடைபெறுவதை நேரில் கண்டு வியந்தேன். அந்தக் காட்டுப் பகுதியில் வாழும் மக்களிடையே காணப்படும் மனவுறுதியும், உழைப்புத் திறனும், ஒற்றுமைப்பண்பாடும் நேரில் கண்டு களிக்கத்தக்கன. காடுகளில் வாழும் விலங்குகள், பயிர்களை அழிக்காமல் பாதுகாப்பதற்காக அவர்கள் இடைவிடாமல் காவல் காக்கின்றனர். இதற்காக, வாண வெடிகளை அடிக்கடி பயன்படுத்துகின்றனர்.

குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் வேரூன்றிவிட்டது

இத்தகைய மக்களிடையே "குடும்பக் கட்டுப்பாட்டை"ப் பற்றிய செய்திகள் நன்றாகப் பரவியுள்ளன. இந்தக் கிராமத்திலிருந்து சுமார் 10 பேர் "வாசக்டமி" என்ற அறுவைச் சிகிச்சையை செய்து கொண்டுள்ளனர். இரண்டு மாத காலத்திக்கு முன்பு, குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரி இங்கே வந்தபோது, தாமாகவே உற்சாகத்தோடு முன் வந்து இவர்கள் இந்த சிகிச்சையைச் செய்துகொண்டு, இப்பொழுது ஆனந்தமாக வாழ்கின்றனர். இப்போது, அவர்கள் மனத்தில் திருப்தியும், நிம்மதியும் நிரம்பியுள்ளன.

இந்த சிகிச்சை செய்துகொண்ட ஒருவருடைய வீட்டுக்குச் சென்று அவருடைய மனைவி, குழந்தைகள் ஆகியோரைக் கண்டு பேசினேன். சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க அவர் மனைவி, நான்கு குழந்தைகள், ஆகியோர் சுகமாக வாழ்கின்றனர். (படம்-1, 23-ம் பக்கம் பார்க்கவும்). மூன்று குழந்தைகளுக்கு மேல் உள்ள குடும்பத்தார் மேற்கொண்டு குழந்தைகள் பெறாமல் இருக்கப் பல விதமான நாட்டு மருந்துகளைத் தேடி அலைகின்றனர் என்றும், அதனால் ஒரு சில பெண்களுக்கு கருச் சிதைவு ஏற்பட்டு உயிருக்கே அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அங்கே உள்ள வயது முதிர்ந்த ஓர் அம்மையார், பல உதாரணங்களுடன் சொல்லத் தொடங்கினார். பவானி சாகர், சத்தியமங்கலம் முதலிய பகுதிகளில் இதற்கான அறுவைச் சிகிச்சை செய்ய அரசாங்கம் வசதி செய்துள்ளதையும், பலர் அதைப் பயன்படுத்திக்கொண்டு எந்தவித சிரமமும் இல்லாமல் இருப்பதையும், இந்தக் கிராமத்துப் பெண் மக்கள் அறிந்துள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திலும் இதைப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தான், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பஞ்சாயத்து யூனியன் அலுவலர் மூலம் தக்க பலன் பெற்றுள்ளனர். அதே கிராமத்தில் இன்னும் பலர் இந்தச் சிகிச்சையை செய்து கொள்ளத் தயாராய் இருப்பதை அறிந்தேன். 'அம்மை ஊசி போட்டுக்கொள்வதற்கு ஒரு காலத்தில், கிராம ஜனங்கள் பயந்து ஒளிந்து கொண்டதுண்டு. நாங்கள் சிறு பிள்ளைகளாய் இருந்தபோது, அப்படி ஒளிந்து கொண்டிருக்கிறோம். ஆனால், இப்போது அது சிறந்த ஒரு தடுப்பு முறையாகப் பழக்கத்துக்கு வந்து விட்டது. இன்னும் சில நாட்களில், குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அறுவைச் சிகிச்சை முறையும், இவ்வாறே ஆகிவிடும்" என்று அங்கே உள்ள ஒரு பெரியவர் சொல்லக் கேட்டேன். அதைத் தொடர்ந்து "அப்போதுதான், நாங்களும் அளவுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பற்றிக் கவலைப் படாமல் இருக்க முடியும்," என்று ஓர் அம்மையார் உடனடியாகப் பதில் கூறினார்.

சென்னை மாநகரில் சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த தமிழ்நாடு பஞ்சாயத்து மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வீண் போகவில்லை என்பதையும், வனாந்தரப் பிரதேசத்தில் வாழும் கிராம மக்களிடையேயும் அந்தக் கருத்துக்கள் சென்று பரவி, அவர்களின் இதய கீதமாக எதிரொலிப்பதையும் காண முடிந்தது.

(தொடரும்)

நாற்புறமும் காடுகளால் சூழப்பட்ட கிராமத்தில் குடும்பக் கட்டுப்பாடு

1. நீலகிரி மாவட்டத்தில் காடுகள் சூழ்ந்த "தெங்குமரஹட" என்ற கிராமத்தில் 'குடும்பக்கட்டுப்பாடு' முறையை அனுஷ்டிக்கும் குடும்பம். குடும்பத்தலைவர் மாரிமுத்து அவர் மனைவி முத்தம்மாள் (கைக்குழந்தையோடு இருப்பவர்) குடும்பக்கட்டுப்பாட்டின் அவசியத்தை எடுத்துரைக்கும் மிச்சி அம்மாள் ஆகியோரைப் படத்தில் காணலாம். 2. 'தெங்குமரஹட'க் கிராமத்தின் தோற்றம். 3. வனவிலங்குகளை, முக்கியமாக யானை போன்ற வனவிலங்குகள் பயிர்களுக்குச் சேதம் புரியாமல் தடுக்க இரவில் வாணம் விடுதல். 4. கிராம மக்களின் அன்றாடத் தேவைகளை, அவர்களுக்கு வேண்டிய பண்டங்களை கூட்டுறவுப் பண்டகசாலையிலிருந்தே கிராமமக்கள் பெறுகின்றனர். 5. கூட்டுறவுச் சங்கப் பிரமுகர்கள், இந்தக் கிராமத்திற்குப் போய்வர உள்ள ஒரே வாகன வசதி படத்தில் காணப்படும் 'வான்' ஒன்றுதான். இந்த வசதியை செய்திருப்பதுடன், கடன் கொடுத்தல், பண்டகசாலை வசதி, மற்றும் பாதை அமைத்தல்போன்ற எல்லா வசதிகளையும் கூட்டுறவுச் சங்கமே செய்திருக்கிறது.









பஞ்சாயத்துக்களும் விவசாய உற்பத்தித் திட்டமும்
“கல்யாணகுப்பம்”— ஒரு சிறந்த உதாரணம்.

செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த “கல்யாணகுப்பம்” கிராமம், விவசாய உற்பத்தித் திட்டம் ஒன்றை உருவாக்கி நிறைவேற்றுவதில் முன்னோடியாக விளங்குகிறது. ஒவ்வொரு வீட்டின் முன்புறம் தென்னம்பிள்ளையும், பினபுறம் கம்போஸ்டு உரக் குழிகளும் உள்ளன—ஊர் முழுவதற்கும் பொதுவான சமுதாயக் கம்போஸ்டு உரக்குழியும் உள்ளது—புதிய விவசாயக் கருவிகளைப் பயன்படுத்துதல்—பொறுக்குவிதை தயாரிக்கும் பண்ணையின் எழில்தோற்றம்—பஞ்சாயத்து அங்கத்தினர்களின் கூட்டுமுயற்சி—முதலியவற்றை இப்படங்கள் காட்டுகின்றன—சிறப்பாக அகில இந்திய ரேடியோ நிலையத்தினர் இங்கேவந்து, அரிஜனக் காலனியில் ஒரு பெண்மணியின் அனுபவ உரையை ஒலிப்பதிவு செய்வதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

(மற்ற விவரங்கள், “கண்டதும் கேட்டதும்” என்ற கட்டுரைத் தொடரில், ஏப்ரல் இதழில் வெளியான கட்டுரையில் காண்க.)





மலைஜாதி மக்களின் வாழ்வு வளம்பெற

நீலகிரி மாவட்டத்தில் படகர் என்ற மலை ஜாதியினர் கைத்தொழில் வளர்ச்சியில் மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளனர். குளிர்ப்பிரதேச மான இந்த இடத்தில் கம்பளி உடைகள் பின்னும் தொழில் கற்பிக்கப்பட்டு வருகிறது.

2. புதுமுறையில், கம்பளி உடைகள் தயாரிக்க மேனாட்டிலிருந்து யந்திரம் வரவழைக்கப்பட்டுள்ளது.

3. பஞ்சாப் பிரதேசத்தில் தோன்றி வளர்ந்துள்ள "பூல்காரி" என்ற ஒரு வகையான வண்ணப் பின்னல் கலை, இங்கே மாதரிடையே பரவியுள்ளது.

4. முன்னேற்றம் அடைந்துள்ள படகர் குடும்பங்களில் ஒன்று.

5. கம்பளி உடைகள் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருளான கம்பளி ரோமத்தை அதிக அளவில் அளிக்கும் உயர்ரக ஆடுகள், பஞ்சாயத்து யூனியன்கள்மூலம் நீலகிரி மாவட்ட மெங்கும் விநியோகிக்கப்பட்டு, கண்ணும் கருத்துமாய் வளர்க்கப்படுகின்றன.

கிராம நலம்-
பகுதி-2. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM
PART II
PANCHAYAT GAZETTE

கிராம வேலைகள் மானியம்: நடைபாதைப் பாலங்கள் கட்டுதல்

Works: Village Works Grant—Thanjavur District-Construction of foot—bridges—permitted.

(Memorandum No. 220296 R. D. & L. A., Dated 12th March 1962.)

கிராம நலத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 664, இணைப்பு II, பாரா 35-ல் கூறியுள்ள விளக்கங்களின்படி, கிராமப் பாதைகளில் பாலங்களைக் கட்டும் வேலை, மாநில நெடுஞ் சாலை வரவு செலவுத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப் படும் பாலங்களைக் கட்டும் வேலை, கிராம வேலைகள் திட்டத்தின் கீழ் எடுத்து செய்யப்படக்கூடாது என்பதற்கு, 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதியிட்ட அறிக்கை எண். 114178, பாரா 2-ல் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டுள்ளன.

2. தஞ்சாவூர் மாவட்டத்தில், ஆறுகள், நீர்ப்பாசன, கழி நீர்க் கால்வாய் ஆகியவை மிகுதியாய் இருப்பதன் காரணமாக, பாலங்கள் கட்ட அனுமதிக்காவிட்டால் கிராமங் கள் ஒன்றுடன் ஒன்றை இணைக்கவும், முக்கிய பாதை களுடனும், ரயில் நிலையங்களுடனும் இணைக்கவும் முடி யாமல் போய்விடும் என்று தஞ்சாவூர் கலெக்டர் தம்முடைய 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம்தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் நடை பாதைப் பாலங்கள் கட்ட மட்டும் கிராம வேலைகள் திட்டத் தின் கீழ் அனுமதிக்கப்பட்டால் போதும் என்றும் வண்டிப் போக்குவரத்துக்கான பாலங்களைக் கட்டும் வேலை நெடுஞ்சாலைத் துறை வரவு செலவுத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய வகை செய்யப்படலாம் என்றும் கூறி யுள்ளார்.

3. தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவும் தனிப்பட்ட நிலைமைகளை உத்தேசித்து, தஞ்சாவூர் கலெக்டரின் யோசனையை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுகிறது. அதன் படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும், எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம், மற்ற விதி முறைகளுக்கு உட்பட்டு, கிராம வேலைகள் திட்டத்தின் கீழ் நடை பாதைப் பாலங்கள் கட்டும் வேலையை எடுத்துச் செய்யலாம் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 12—3—62 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 220296)

நாட்டாண்மை நிதித் தணிக்கைத் துறையில் தமிழ் ஆட்சி மொழி அமுல் நடத்துதல்—அலுவலகளை இனம் வாரியாக வரையறுத்தல்—பொதுத் துறையின் 4-12-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2002-டன் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட விளம்பரத்தின் திருத்தம்

(Official Language—Tamil—Introduction in Local Fund Audit Department—Specification of Offices by Categories—Revised Notification issued with G.O. Ms. No.2002, Public (General-M) dated 4th December, 1961—Amendment—Issued)

(G.O. No. 64. Public (General-M.) Department dated 8th January 1962.)

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகா ஆகிய பிரதேசங்களைப் பொறுத்த மட்டில், சம்பந்தப்பட்ட மாவட்ட நாட்டாண்மை நிதிக் கணக்கு கள் மேற்பார்வையாளர் அலுவலகங்களிலிருந்து, பொது மக்களுக்குச் செய்தியை அறிவிக்க வெளியிடப்படும் அறிக் கைகள் ஆட்சி மொழியில், அதாவது தமிழில் வெளியிடப் படுவதுடன், மலையாள மொழியிலும் வெளியிடப்பட வேண்டும்.

இணைப்பு

விளம்பரம்

1956-ம் வருடத்திய தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டம், 4-வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செலுத்தும் வகையில், தமிழ்நாடு கவர்னர், பொதுத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் தேதி யிட்ட விளம்பரம் II-1 எண் 5643-ல், கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்து இதன் மூலம் அறிவிக்கிறார்:—

இந்தத் திருத்தம், 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம்தேதியில் அமுலுக்கு வரும்.

திருத்தம்

மேற்குறித்த விளம்பரத்தில், "4. நாட்டாண்மை நிதித் தணிக்கைத் துறை;" என்ற வகைக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக இனங்களின் கடைசியில், கீழ்க்காணும் தொடர் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்:—

"நாட்டாண்மை நிதிக் கணக்கு எல்லா மாவட்ட மேற் பார்வையாளர் அலுவலகங்கள்".

—:o:—

போக்கு வரவு—மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம்—பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துப் பாதைகள் (முன்னுள் மாவட்டக் கழகப் பாதைகள்)—திட்டத்தில் வகை செய்துள்ளபடி பழைய வேலைகளுக்கும், புதிய வேலைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதியைப் பயன்படுத்துதல் பற்றிய விளக்கம்

Communications—Third-Five Year Plan-Panchayat and Panchayat Union Roads (Former District Board Roads)—Plan Provision—Allocation for committed and new works—Utilisation of—Instructions issued)

(G.O. Ms No, 3428, R.D. &L.A., dated 29th December, 1961.)

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு, இந்த மாநிலத்திற்கு, பாதை வேலைகளுக்கென்று 11 கோடி ரூபாய் மூலதனம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் மாவட்டக் கழகப் பாதைகளுக்கு என்று 3.60 கோடி ரூபாய் வரையில் வகை செய்யப்பட்டுள்ளது.

2. 1958-ம் வருடத்திய பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ், மாநில முழுதும் (சில விதி விலக்குகளுடன்) 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் பஞ்சாயத்து யூனியன்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன; எல்லா மாவட்டக் கழகங்களும் கலைக்கப்பட்டு விட்டன. அந்தந்தப் பகுதியில் உள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன் பாதை களையும் பராமரிக்கின்ற சட்டபூர்வமான பொறுப்பு, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களை வந்து சேர்கின்றது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்து யூனியன் ஜனத் தொகையில் தலைக்கு 40 ந.பை என்ற வீதத்தில் பிரதேச பாதைகள் மானியம் வழங்குவதன் மூலம் அதன் சட்டபூர்வமான பொறுப்பை நிறைவேற்றுகிறது.

3. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 664, 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை எண். 211 ஆகியவற்றில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், சம்பந்தப்பட்ட வட்டாரத்திற் கான குறிப்பிடத்தக்க அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் உள்ளடக்கிய ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப் பட்ட வரவு செலவுத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், மூன்ருவது திட்ட காலத்துக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் "கிராம வேலைகள் மானியம்" என்ற ஒரு சட்டபூர்வமல்லாத மானியம் வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. அந்த மானியத் தொகை, பஞ்சாயத்து யூனியனும், அதன் பஞ்சாயத்துக்களும் கிராமக் குடிநீர் வழங்குதல், இணைப்புப் பாதை போடுதல், இராப் பள்ளிக் கட்டடம் கட்டுதல் ஆகிய வேலைகளைச் செய்யப் பயன் படுத்தப்படும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், இந்த மானியம் எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் வழங்கப்படும் என்பதும் அந்த ஆணைகளில் குறிப்பிடப் பட்டுள்ளன. மாநிலம் முழுவதற்குமாக, மூன்ருவது திட்ட காலத்தின், ஸ்தல அபிவிருத்தி வேலைகள் திட்ட வருவாய்களையும், மாநிலத் திட்டத்தில் சமுதாய அபி விருத்தி வட்டார திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத் தில் "கிராம நீர் வழங்குதல், துப்புரவு, தொடர்புகள்" என்பதன் கீழ் பெறத்தக்க தொகைகளையும், மாநில அரசாங்கம், இராம நீர் வழங்கு ஒருங்கிணைப்பு வேலைகள், இரண்டாவது திட்ட வேலைகளின் முடிவு வேலைகள் கிராம பாதை அபிவிருத்திக் கூட்டுறவுத் திட்டங்கள் உட்பட கிராம நீர் வழங்கு திட்டத்திற்கு அளிக்கும் நன் கொடைத் தொகைகளையும் ஒன்று சேர்த்து கிராம வேலைகள் மானியத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.

4. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை

எண். 664-ல் கிராம வேலைகள் மானியத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகள் இணைப்புப் பாதைகள் போடுதல்; பாலங்களைக் கட்டுதல், சீர்திருத்துதல்; ஆகிய வேலைகளுக்குப் பயன்படுத்தலாம் என்றும், பஞ்சாயத்து யூனியன் பாதைகளைச் சீர்திருத்தும் வேலைக்கு மாநில நெடுஞ்சாலை வரவு செலவுத் திட்டத்தில் தனியாக நிதி வசதி செய்யப்படும் என்றும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

5. தலைமை என்ஜினியர் (நெடுஞ்சாலைகள், கிராம வேலைகள்) தம்முடைய 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ம் தேதிய கடிதத்தில், கிராம பாதைகளைப் போடும் வேலைகள் இனிமேல் கிராம வேலைகள் மானியத்தின் கீழ் பஞ்சாயத்து யூனியனில் எடுத்து நடத்தப்பட இருப்பதால், மாவட்டக் கழகங்களுக்கென்று, மூன்றுவது திட்ட காலத்தில் பாதை வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 3.6 கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயை தனியே ஒதுக்கலாம் என்றும் மாநிலம் முழுவதற்குமாக அந்தத் தொகையை கிராம வேலைகள் மானியத்தில் வரவு வைத்துக்கொள்ளலாம் என்றும், மீதித் தொகையான 1.6 கோடி ரூபாய் இரண்டாவது திட்ட காலத்தில் மாவட்டக் கழகங்கள் பங்கில் எடுக்கப்பட்டு முடிக்கப்படாமல் இருக்கும் வேலைகளை முடிக்கப் பயன்படுத்தலாம் என்றும் யோசனை கூறியுள்ளார்.

6. அரசாங்கம் தலைமை என்ஜினியர் (நெடுஞ்சாலைகள், கிராம வேலைகள்) கூறியுள்ள யோசனைகளை ஒப்புக்கொள்கிறது. அதன்படி, மூன்றுவது திட்டத்தில் மாவட்டக் கழகங்களின் பங்காக பாதை வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 3.60 கோடி ரூபாயில் 1.60 கோடி ரூபாயை இரண்டாவது திட்ட காலத்தின் முடிக்கப்படாத வேலைகளுக்குப் பயன்படுத்தலாம் என்றும், மீதி 2 கோடி ரூபாயை கிராம வேலைகள் மானியத்திற்குத் தனியே பிரித்து, மாநிலம் முழுவதற்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அந்தந்தப் பகுதியில் புதிய கிராமப் பாதைகள் வேலைகளுக்கென்று பயன்படுத்தலாம் என்றும் ஆணை பிறப்பிக்கிறது.

7. தலைமை என்ஜினியர் (நெடுஞ்சாலைகள், கிராம வேலைகள்), இரண்டாவது திட்ட காலத்தில் எடுக்கப்பட்ட வேலைகளைப் பொறுத்தமட்டில் 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியில் உண்மையாக வேலை நடந்து வருகிற 90 லட்ச ரூபாய் மதிப்புள்ள வேலைகள் மட்டுமே "தொடங்கப்பட்ட வேலைகள்" என்று கருதப்படலாம் என்றும், 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன் நிர்வாக முறையில் மட்டும் அங்கீகரிக்கப்பட்டு, வேலை எடுத்து செய்யப்படாத வேலைகளை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனின் முடிவுக்கு விட்டு விடலாம் என்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

8. அரசாங்கம், நன்கு பரிசீலனை செய்த பின்னர், தொடங்கப்பட்ட வேலைகளின் இரண்டு வகைகளும், அதாவது, 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியில் நடந்துகொண்டிருந்த 90 லட்ச ரூபாய் மதிப்புள்ள வேலைகளும், அந்தத் தேதியில் வேலை நடைபெறாத 70 இலட்ச ரூபாய் மதிப்புள்ள வேலைகளும் அரசாங்க வேலைகளைப் போன்றே எடுத்து செய்து முடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் படவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது. இந்த இரண்டு வகையான வேலைகளுக்கும் நிர்வாக அங்கீகாரம் 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்னதாக வாங்கப்பட்டிருக்க வேண்டும். கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1710-ல் 1961–62-ம் வருடத்தில் இரண்டாவது திட்டத்தில் துவக்கப்பட்ட மாவட்டக் கழக வேலைகளை முடிக்க என்று 32 இலட்ச ரூபாய் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகள் முடிப்பதற்கென்று ஒரு மாதிரித் திட்டத்தை வகுத்துக் கொண்டு, மூன்றுவது திட்ட கால முழுதுக்கும் 1.60 கோடி ரூபாய் வரையறைக்குள் செலவு செய்ய மேலும் நிதி வசதிகள் வேண்டுமானால் அரசாங்கத்திடம் கேட்டுப் பெறவேண்டும் என்று தலைமை என்சினியர் (நெடுஞ்சாலைகள், கிராம வேலைகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 664, 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211 ஆகியவற்றில் கிராம வேலைகள் மானியத்தின் கீழ் புதிய கிராமப் பாதைகளைப் பஞ்சாயத்து யூனியன்கள் போடும்பொழுது, பாலம் கட்டுதல், பஞ்சாயத்து யூனியன் பாதைகளைச் செப்பனிடுதல் ஆகிய வேலைகளுக்கு, மாநில நெடுஞ்சாலைத் துறை வரவு செலவுத் திட்டத்தில் தனியாக வகை செய்யப்படும். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்கள், கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2103-ல் கூறியுள்ள விளக்கங்களின் அடிப்படையில் தமக்கென வேலை முறைகளை வகுத்துக்கொண்டு நிறைவேற்றவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள், புதிய கிராமப் பாதை அமைப்பு வேலைகளை மேற்கொள்ளும்பொழுது, மாநில முழுதும் கிராமப் போக்கு வரவுத் தொடர்புகளை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. புதிய கிராமப் பாதைகளின் அமைப்பு, இத்தகைய பாதைகளின் அகில இந்திய பொதுத் தரத்துடன் ஒத்து இருக்கவேண்டும். மேலும் இந்தப் பாதை வேலைகள், கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664-ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி தேவையான சதவீதம் பொது நன்கொடை வசூலிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்தே செய்யப்படவேண்டும்.

10. தலைமை எஞ்சினியர் (நெடுஞ்சாலைகள், கிராம வேலைகள், தம்முடைய 1961-ம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதிய கடிதத்தில், மூன்றுவது திட்ட கால முடிவில், கூடியவரை வேலைகள் முடிவதற்கு, இரண்டாவது திட்ட காலத்தில் எற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்டு அங்கீகாரம் பெறுமலோ, வேலை நடை பெறுமலோ இருக்கும்

வேலைகளுடன், மூன்றுவது திட்ட காலத்தில் புதிய வேலைகளை, மாநில நெடுஞ்சாலைகள் வரவு செலவுத் திட்டத்திலிருந்து, நிறைவேற்றத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறியுள்ளார். மேலும் அவர் இரண்டாவது திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத வேலைகள், மூன்றுவது திட்டகாலத்துக்கு மாநில முழுதுக்கும், ஏற்கெனவே, செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகள் ஆகியவற்றின் பட்டியலையும், ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும், மூன்றுவது திட்டத்தில் இரண்டாவது அகில இந்திய பாதை அபிவிருத்தித் திட்டத்தைச் சார்ந்து வகுக்கப்படத்தக்க வேலைகளின் மதிப்பையும் அறிவித்துள்ளார்.

11. இரண்டாவது திட்டத்தின் அங்கீகரிக்கப்படாத வேலைகள், மூன்றுவது திட்ட காலத்தில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகள் ஆகியவற்றின் பட்டியலையும், ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்துக்கும் மூன்றுவது திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பையும், சம்பந்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட அரசாங்கம், ஆணையிடுகிறது. மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள், வரையறுக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு அதிகமாகப் போகாத வகையில் அந்தப் பட்டியலில் திருத்தத்தையும், மாற்றத்தையும் செய்யலாம். மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் ஆலோசனையின் மேல் திருத்தப்பட்ட வேலைகளின் பட்டியலில், நிறைவேற்றப்பட, அரசாங்கத்தின் கிராம நல தல நிர்வாகத் துறையினுல் அங்கீகரிக்கப்படும்.

12. மூன்றுவது திட்ட காலத்தில் வருடந்தோறும், செயல்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் வேலைகள் விஷயத்திலும் மேலே குறிப்பிட்ட முறையே கடைப்பிடிக்க அரசாங்கம் ஆணையிடுகிறது. ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திலும், ஒவ்வோராண்டும் எடுத்து செய்யப்படவேண்டிய புதிய வேலைகளின் மதிப்பை தலைமை எஞ்சினியர் (நெடுஞ்சாலைகள், கிராம வேலைகள்) முடிவு செய்து, அதை சம்பந்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி அபிவிருத்தி மன்றத்துக்கு அறிவிப்பார். மாவட்ட அபிவிருத்தி மன்றத்தால், மூன்றுவது திட்ட காலத்துக்கென்று மொத்தமாக அங்கீகரிக்கப்பட்ட வேலைகளின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுப்பது சம்பந்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் முடிவுக்கே விடப்படும். அவ்வாறு வகுக்கப்பட்ட பட்டியல் அரசாங்கத்தின் கிராம நல, தல நிர்வாகத்துறையினுல் அங்கீகரிக்கப்படும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 29—12—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 3428.)

தமிழ்நாடு நகர மன்றங்கள், ஸ்தல ஸ்தாபனங்களின் இன்ஸ்பெக்டர் அவர்களின் சுற்றறிக்கை

எண். 18033/62. தேதி : 25—3—1962

பொருள்.—பஞ்சாயத்துக்கள் வானொலிப் பெட்டி வாங்கவும், பராமரிப்பிற்காகவும் கொடுக்கப்பட்ட தொகைகளைத் திரும்பிப் பெற சில குறிப்புகள்.

அரசாங்க ஒலிபரப்பு இலாகாவிடம் செலுத்தப்பட்டுள்ள வானொலிப் பெட்டியின் விலை, பராமரிப்புச் செலவுகள், வானொலிப் பெட்டியை மாற்றியமைக்க ஆகும் செலவுகள் முதலியவைகளைப் பஞ்சாயத்துக்கள் திரும்பப் பெற வேண்டுமானால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் தகுந்த தகவல்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு மேற் குறிப்பிட்ட தொகைகளைத் திரும்பிப் பெற விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

மின் பொறியாளர், (பொது)
[Electrical Engineer - (Gl.)]
மராமத்து இலாகா,
சேப்பாக்கம்,
சென்னை-5.

மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் பொதுக் குழுக் கூட்டங்கள் பற்றிய விளக்கம்

(Madras District Development Councils Act, 1958—General Committee of District Development Council Meetings - Instructions Issued.)

(Memorandum No. 10509, R.D. & L.A., dated 28th February, 1962.)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961 மீ டிசம்பர்மீ 27-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 3389 ல், மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சுயமேலாண்மையும், திட்டம் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பொதுத் தன்மையுள்ள வேலைகளைக் கவனிக்கவென்று ஒரு பொதுக் குழு அமைக்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இப்பொழுது மதுரை கலெக்டர், பொதுக் குழுக் கூட்டங்களின் இடைக் கால அளவு எவ்வளவு இருக்கலாம் என்று அறிவிக்கக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-மீ டிசம்பர்மீ 27 ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 3389-ன் 6-வது பாராவில் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்துக்குக் குறிக்கப்பட்ட நாளுக்கு முன் நாளில் பொதுக் குழுக் கூட்டம் கூட்டப்படலாம் என்று பொது விதியாக

கூறப்பட்டுள்ளது. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961 ம௵ ஜூன்மீ 16 ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1694-ன் 4-வது பாராவில், மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டம் ஒவ்வோராண்டும் பிப்ரவரியில் தொடங்கி ஒரு மாதம் விட்டு ஒரு மாதம் கூடுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மதுரை கலெக்டர், மேலே கூறப்பட்டுள்ள விளக்கங்களின்படி, பொதுக் குழுக் கூட்டங்கள் சாதாரணமாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடலாம் என்று அறிவிக்கப்படுகிறார்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 28-2-62 தேதியிட்ட அறிக்கை எண் 1050.)

பஞ்சாயத்து அபிவிருத்தி — குழுக்கள் — பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு அமைத்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன

[Panchayat Development—Committees—Panchayat Development Consultative Committee Establishment of—orders passed.)

(G.O.Ms. No. 797, R.D. & L.A., dated 31-3-62.)

1957-ம௵ நவம்பர்மீ 29-ந் தேதியிட்ட, பொதுத் (கிராம அபுவிருத்தி வேலைகள்) துறையின் அரசாங்க ஆணை எண் 3336-ல், சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்தைச் செயல்படுததி வைப்பது சம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் கூறுவதற்காக வேண்டி, அரசாங்கம் ஒரு மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழு ஒன்றினை அமைத்து உத்தரவு பிறப்பித்தது. அந்தக் குழுவில் குழுவின் தலைவராக முதல் அமைச்சரும், மாநில சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிலரும், இந்திய அரசாங்கத்தின் சமுதாய அபிவிருத்தித்துறையின் சமுதாய அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும், மாநில அளவில் சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டம் பற்றிய வேலைகளைக் கவனிக்கிற அரசாங்க அதிகாரிகளும் அங்கம் வகித்து வந்தார்கள். 3—3—1961 தேதியிட்ட, கிராம நல தல விவாகததுறையின் அரசாங்க ஆணை எண் 621-ல் மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 31—3—1962 வரை நீடித்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அதிகப்படியான உறுபபினர்களும் அவ்வப்போது கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எல்லா உறுப்பினர்களின் பதவிக் காலமும் 31—3—1962 தேதியோடு தீர்ந்து போய் விடவேண்டும்.

2. கடந்த இரண்டாண்டுகளில், இந்த மாநிலத்தில் சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டமானது முக்கியமான மாறுதல்கள் அடைந்திருக்கிறது. 1958-ம் ஆண்டு, தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள எல்லா கிராமப் பகுதிகள் அனைத்திலும், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், அமைக்கப்பட்டு சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்தை செயல்படுத்தி வைக்கின்ற வேலை இந்த நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதே மாதிரி வேலைத் திட்டங்களுக்கு திட்டத்தில் கிடைக்கக்கூடிய வசதிகளை, ஒன்றுக இணைப்பதின் மூலம் சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டமானது இன்னும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டமானது திருத்தப்பட்ட அடிப்படையில் செயல்படுத்தப்படுவது என்பது பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டமேயாகும். 1958-ம் ஆண்டு சென்னை மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சட்டத்தின் கீழ், இந்த மாநிலமானது 21 அபிவிருத்தி மாவட்டங்கலாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட அபிவிருத்தி மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சி மன்றங்களின் வேலைகள் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் கூறுகிற பொறுப்பும். மாவட்டத்தின் பொருளாதார வசதிகளைப் பெருக்குவது சம்பந்தமான எல்லா விஷயங்களிலும், ஆலோசனை கூறுகிற பொறுப்பும், மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. குறிப்பாக, மாவட்டத்தில் உள்ள பிரதேச நிறுவனங்களாலும், மற்றும் உணவு-விவசாயம், தொழில் தொழிலாளர், கூட்டுறவு, பொதுப் பணிகள், சுகாதாரம், கல்வி, தலநிர்வாகம் ஆகிய துறைகளின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் இயங்குகிற, மாவட்டத்தில் உள்ள எல்லா ஏஜென்சிகளாலும் ஏற்று செயலாற்றப்படுகிற எல்லா அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாகவும், அவைகளால் பராமரிக்கப்படுகிற எல்லா வகையான பணிகள் சம்பந்தமாக எல்லா விஷயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவது மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் பொறுப்பாகும். மாவட்டத்தில் மேறசொன்ன திட்டத்தின் கீழ் உள்ள பணிகளை அந்தந்தத் துறையினர் நடத்தி வருதல் பற்றியும், அரசாங்கம் ஏற்று நடத்துகிற வேலைகள் சம்பந்தமான முன்னேற்றத்தையும் கவனித்து வரவேண்டிய நிறுவனங்களாகவும் இந்த மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் உள்ளன.

3. சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டம் சம்பந்தமான வேலைகள் பற்றிய பரிசீலனை அறிக்கைகள் இதுவரை, வட்டாரங்களிலிருந்து மாவட்டத்திற்கும், மாவட்டத்திலிருந்து மாநில தலைமை இடத்திற்கும் அனுப்பப்பட்டு

வந்தன. சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பலவேறுபட்ட துறைகளில் கண்டுள்ள முன்னேற்றங்களை புள்ளி விவரவாரியாக அறிக்கை அனுப்புவதின் மூலம் இந்தப் பரிசீலனை செய்யப்பட்டது. 8—12—1960 தேதியிட்ட, கிராம நல-தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 1041-ல் பல வேறுபட்ட துறைகள் சம்பந்தமான இந்த முன்னேற்ற அறிக்கைகள் மாவட்ட அதிகாரிகளுக்கு வட்டார அபிவிருத்தி அதிகாரியினால் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும அதை அவர்கள் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் முன் அதன் பரிசீலனைக்காக, வைக்க வேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டது.

4. 1961-ஆம் ஜூன்மீ 16-ந் தேதியிட்ட கிராம நல-தல நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண் 1694-ல் இந்தக் குழுக்களின் ஆலோசனைகளின் பேரில் எடுக்கப்படுகின்ற முடிவுகளிலிருந்து அதிகப்பட்சமான பயனை அடைவதற்காக வேண்டி, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் பிப்ரவரி, ஏப்ரல், ஜூன், ஆகஸ்ட், அக்டோபர், டிசம்பர் மாதங்களில்-இரண்டு மாதத்திற்கொருதடவை கூடவேண்டும் என்றும், அந்த மன்றமானது இப்படிப்பட்ட கூட்டங்களில் இரண்டு கூட்டங்களை (ஒவ்வொரு ஆண்டிலும் ஆறு கூட்டங்களில் ஒரு கூட்டம் என்ற அளவில்) குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி விரிவாகப் பரிசீலனை செய்து ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒதுக்கப்படவேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இப்படி, மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் ஆறு கூட்டங்கள் கீழ்க்கண்ட அரசாங்கம் வரையறுத்துள்ள விஷயங்களைப்பற்றி கூட வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது :—

பிப்ரவரி கூட்டம்.—உற்பத்தி வேலைத் திட்ட அரையாண்டு பரிசீலனை.

ஏப்ரல் கூட்டம்.—நலப் பணிகள் வேலைத் திட்ட அரையாண்டுப் பரிசீலனை.

ஜூன் கூட்டம்.—அபிவிருத்திநீர்பாசனம்பற்றிய அரையாண்டுப் பரிசீலனை.

ஆகஸ்ட் கூட்டம்.—உற்பத்தித் வேலைத் திட்ட அரையாண்டுப் பரிசீலனை.

அக்டோபர் கூட்டம்.—நலப் பணிகள் வேலைத் திட்ட அரையாண்டுப் பரிசீலனை.

டிசம்பர் கூட்டம்.—அபிவிருத்தி நிர்வாகம் பற்றிய அரையாண்டுப் பரிசீலனை.

அதே ஆணையில் , உணவு-விவசாயம், தொழில்-தொழிலாளர், பொதுப் பணிகள், கல்வி, சுகாதாரம்-க்ஷேமநலம்—(மதுவிலக்கையும் சேர்த்து) ஆகிய இந்த ஐந்து விஷயங்களுக்காக ஐந்து நிலைக்குழுக்களை மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் அமைக்க வேண்டுமென்றும் அரசாங்கம் விரும்பியது. இந்தக் கமிட்டிகள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளையும் அரசாங்கம், அதே ஆணையில் தெரிவித்திருந்தது. 27—12—1961-தேதியிட்ட கிராம-நல தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண். 3389-ல், ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றமும் மேற்கண்ட ஐந்து நிலைக் கமிட்டிகளோடு, பொதுக் கமிட்டி என்று அழைக்கப்படுகிற தனியானதொரு நிலைக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்றும் அந்தக் கமிட்டியில் கலெக்டர் (மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் தலைவர்), மேற்சொன்ன ஐந்து நிலைக் கமிட்டிகளின் தலைவர்கள் சேர்ந்து அங்கம் வகிக்க வேண்டுமென்றும் அரசாங்கம் விருப்பம் தெரிவித்தது. திட்டம், பிரசாரம், சிறு சேமிப்பு போன்ற அபிவிருத்தி சம்பந்தமான எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியுள்ள பொதுவான தன்மையுள்ள வேலை அம்சங்களைப்பற்றி இந்தப் பொதுக் கமிட்டி கவனிக்க வேண்டும்.

5. ஆகவே, ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றத்திற்கும் மொத்தம் ஆறு நிலைக் கமிட்டிகள் இருக்கும் என்றும் அவைகளுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட கடமைகள் இருக்கும் என்றும் ஆகிறது. ஆகவே, பல்வேறுபட்ட அபிவிருத்தி மாவட்டங்களினுள் பஞ்சாயத்து நிர்வாகம் செய்துள்ள 'வேலைகள் பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் (Progress Reports) மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் பரிசீலனைக்கு அதன் முன்னால் வைப்பதற்கு முன்னாலேயே, அவை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் நிலைக் கமிட்டிகளின் முன்னால் வைக்கப்பட வேண்டும். அப்படிப் பரிசீலனை செய்து முடிந்த பிறகு, மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் தலைவர், மாவட்ட அபிவிருத்தி மன்றம் மேற்கொண்ட அரையாண்டுப் பரிசீலனை பற்றிய அறிக்கையின் நகல் ஒன்றினை சமர்ப்பிப்பார்.

6. மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் அறிக்கையில் கண்டுள்ளபடி, பஞ்சாயத்து நிர்வாகத்தினால் அபிவிருத்தி சம்பந்தமான பல்வேறுபட்ட துறைகளில் செய்யப்பட்டுள்ள வேலைகளின் முன்னேற்றங்களைப் பற்றி மாநில அளவில் பரிசீலனை செய்ய தகுதியான ஏஜென்சி எதாக இருக்க வேண்டுமென்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வந்தது. மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் நிலைக்குழுக்களின் தலைவர்களாக இருப்பவர்கள்தான், இந்த முன்னேற்றங்களை சரியான முறையில் கணக்கெடுத்துப் பார்த்து நிர்ணயிக்கக் கூடியவர்களாகவும், வேலைத் திட்டத்தை செயல்படுத்தி வைக்கும்பொழுது பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு உண்டாகின்ற நடைமுறை பிரச்னைகளை கவனத்திற்கு கொண்டுவரக்கூடியவர்களாகவும் இந்த வேலைத் திட்டங்களை அவை சம்பந்தப்பட்ட விஷயங்களையும் செயல்படுத்தி வைக்கின்ற நிலையில் என்னென்ன சீர் திருத்தங்கள், செய்யப்படவேண்டியுள்ளது என்பது பற்றி அரசாங்கம் எடுத்துக்கூறி ஆலோசனை சொல்லக்கூடியவர்களாகவும், இருக்க முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, அரசாங்கம், இப்பொழுது உள்ள சமுதாய அபிவிருத்தி சம்பந்தமான மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுக்குப் பதிலாக, பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தமான பல்வேறுபட்ட விஷயங்கள் பற்றி கவனிக்க, பஞ்சாயத்து அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் குழுக்கள் (Consultative committees of Panchayat Development) ஏற்படுத்தப்படவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

7. இந்த ஆலோசனைக் குழுக்களின் கடமைகளை நிர்ணயம் செய்வதற்காக வேண்டி, மாநில அளவில் பரிசீலனை செய்யப்படவேண்டிய பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களும் கீழ் கண்ட மூன்று விரிவான வகையில் பிரிக்கப்படலாம் :—

(1) பஞ்சாயத்து நிர்வாகமும் கட்டு வேலைகள் திட்டமும்.

(2) விவசாய, தொழில் உற்பத்திக்கான பஞ்சாயத்து வேலைத் திட்டம்.

(3) கல்வி, சுகாதாரம், மற்ற க்ஷேம நலப் பணிகள் பற்றி பஞ்சாயத்து வேலைத் திட்டம்.

மேற் குறிப்பிட்ட மூன்று விஷயங்களைப் பற்றி தனித்தனியாகக் கவனிக்க மூன்று பஞ்சாயத்து அபிவிருத்தி, ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. இந்தக் கமிட்டிகள் கீழ்க் கண்ட பெயர்களால் அழைக்கப்படும் :—

(1) நிர்வாகம், கட்டு வேலைகள் சம்பந்தமான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

(2) உற்பத்தி வேலைத் திட்டங்கள் சம்பந்தமான, பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

(3) க்ஷேம நல வேலைத் திட்டங்கள் சம்பந்தமான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

இப்படி ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளின் தன்மையை ஒட்டி இந்த மூன்று கமிட்டிகளும் அமைக்கப்படவேண்டும். அதையொட்டி, இந்த ஆணையின் இணைப்பில் கண்டுள்ள அமைப்பு முறை, கடமைகள் ஒட்டி இந்த மூன்று கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

8. இந்த மூன்று கமிட்டிகள் ஒவ்வொன்றும் ஆறு மாத இடைவெளிக்கு ஒரு முறை கூட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. இந்தக் கமிட்டிகள் ஒவ்வொன்றும் எந்தெந்த மாதங்களில் கூடவேண்டும் என்பது பற்றியும் இணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

9. பிரயாணம், மற்ற படிகள் சம்பந்தமான விஷயங்களில் இந்தக் கமிட்டிகள் முதல்தரக் கமிட்டிகளாகக் கருதப்படும். இந்தக் கமிட்டிகளின் உறுப்பினர்—செயலாளராக இருக்கின்ற கிராம அபிவிருத்திக் கமிஷனர் சம்மதிக்கும் வகையில் கையெழுத்துப்போடுகிற (Counter—signing authority) அதிகாரியாக இருப்பார்.

10. அதிகாரிகள சம்பந்தமாக அளிக்கப்படும் பிரயாணப் படிக்காக ஆகும் செலவுத் தொகையானது அவர்களுடைய சம்பளமும், படிகளும் எந்தக் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படுகிறதோ, அதே கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்படவேண்டும். உத்தியோகஸ்தராயில்லாதவர்களுக்கு பிரயாணப்படி அளிப்பது சம்பந்தமாக ஏற்படும் செலவுத் தொகையானது, “47. ஏ. சமுதாய அபிவிருத்தி வேலைகள், தேசிய அபிவிருத்திப் பணிகள்-பிரதேச அபிவிருத்தி வேலைகள்—ஏ. சாமான்யமானவை (i) சமுதாய அபிவிருத்தி வேலைகள்—(ii) வேலைகள் வட்டாரத் தலைமையிடங்கள்—3. படிகள்—பிரயாணப்படிகள் போன்றவை” என்ற தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

இணைப்பு

பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களின் அமைப்பு முறையும் கடமைகளும்

I. நிர்வாகம், கட்டுவேலைகள் சம்பந்தமான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

Panchayat Development Consultative Committee on Administration and Works.

உறுப்பினர்கள் :

(1) முதல் அமைச்சர் (தலைவர்).—

(2) மற்ற எல்லா அமைச்சர்களும்.

(3) 12 கிராமிய மாவட்டங்களின் கலெக்டர்கள்—மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் பொதுக் கமிட்டிகளின் தலைவர் என்ற ஹோதாவில்.

(4) மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் 21 பொதுப் பணிகள் நிலைக் குழுக்களின் தலைவர்கள்.

(5) பிரதமச் செயலாளர், அபிவிருத்திக் கமிஷனர், நில வருவாய் கமிஷனர், வருவாய்த்துறைச் செயலாளர், பொதுப் பணித்துறைச் செயலாளர், பிரதம எஞ்சினியர் (நெடுஞ்சாலைகள்—கிராம வேலைகள்).

(6) கிராம அபிவிருத்திக் கமிஷனர்—உறுப்பினர்—செயலாளர்—(மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 49).

கடமைகள்.—மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் பொதுக் கமிட்டிக்கும், பொதுப் பணிகள் கமிட்டிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள் பற்றி இக் கமிட்டி கவனிக்கும். அவையாவன :—

(i) பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் அமைப்புமுறை, வரவு—செலவுத் திட்டம், வரி விதித்தலும் நிதியும், ஐந்தாண்டுத் திட்டங்களும் பிரசாரமும் என்ற இவை உட்பட பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தமான விஷயங்கள்.

(ii) பெரிய நீர்ப்பாசன வேலைகள், கட்டிட வேலைகள், கிராம வேலைகள் மானியம், ரோடுகள், குடி தண்ணீர் வசதி, மற்றும் சம்பந்தப்பட்ட விஷயங்கள் உட்பட பொதுப் பணிகள் (Public Works) சம்பந்தமானவி ஷயங்கள்.

கூட்டம் கூடவேண்டிய மாதங்கள் :

ஒவ்வொரு ஆண்டிலும் மே, நவம்பர் மாதங்களில்.

II. உற்பத்தி வேலைத் திட்டங்கள் சம்பந்தமான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு :

Panchayat Development Consultative Committee on Production Programmes

உறுப்பினர்கள்

(1) முதல் அமைச்சர் (தலைவர்).

(2) நிதி அமைச்சர், தொழில் அமைச்சர், விவசாய அமைச்சர், கூட்டுறவு அமைச்சர், செய்தித் துறை அமைச்சர்.

(3) மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் (i) உணவு-விவசாயம் (ii) தொழில்—தொழிலாளர் நலன் சம்பந்தமான நிலைக்குழுக்களின் தலைவர்கள்.

(4) பிரதமச் செயலாளர், அபிவிருத்திக் கமிஷனர், தொழில்-தொழிலாளர் நலன்—கூட்டுறவுத் துறைச் செயலாளர், உணவு-விவசாயத் துறைச் செயலாளர், உணவு உற்பத்திக் கமிஷனர், விவசாயத் துறை இயக்குநர், கால்நடைத்துறை இயக்குநர், கூட்டுறவு நிறுவனங்களின் பதிவாளர், மீனளத்துறை இயக்குநர், காட்டிலாகா பிரதமக் காப்பாளர், கதர் கிராமக் கைத் தொழில் போர்டு பிரதிநிதி, மின்சார போர்டு பிரதிநிதி.

(5) கிராம அபிவிருத்திக் கமிஷனர்—உறுப்பினர்—செயலாளர்.

(மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை—61.)

கடமைகள் :

மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் (i) உணவு-விவசாயம் (ii) தொழில்-தொழிலாளர் நலன் பற்றிய நிலைக் கமிட்டிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள எல்லா விஷயங்கள் பற்றியும் இக் கமிட்டி கவனிக்கும். அவையாவன:—

(i) உணவு-விவசாயம் —விவசாயம், உணவு உற்பத்தி, சிறிய நீர்ப்பாசனம், கடன்கள், கூட்டுறவு, கால்நடை அபிவிருத்தி, மீனளம், காடுகள், உணவு விவசாயம் சம்பந்தப்பட்ட மற்ற விஷயங்கள்.

(ii) தொழில்-தொழிலாளர் நலன் —கதர், கிராமக் கைத் தொழில்—தொழில்கள், மின்சாரம், வேலை வசதி, வீட்டு வசதி, மற்ற சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய மாதங்கள் :

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை, ஜனவரி மாதங்களில்.

III. க்ஷேம நலப் பணிகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

Panchayat Development Consultative Committee on Welfare Services Programme.

உறுப்பினர்கள்

(1) முதல் அமைச்சர் (தலைவர்).

(2) நிதி அமைச்சர், விவசாய அமைச்சர், ஹரிஜன நலம், மது விலக்கு விஷயங்கள் பொறுப்பில் இருப்பவர், சுகாதார அமைச்சர், செய்தித்துறை அமைச்சர்.

(3) மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் (1) கல்வி, (2) சுகாதாரம்—க்ஷேம நலம் பற்றிய நிலைக் குழுக்களின் தலைவர்கள்.

(4) பிரதமச் செயலாளர், அபிவிருத்திக் கமிஷனர், கல்வி—சுகாதாரத்துறைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், பொதுநலக் கல்வித்துறை இயக்குநர், மருத்துவத்துறை இயக்குநர், பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர், ஹரிஜன நலத்துறை இயக்குநர், மாநில சமூக நலப் போர்டு தலைவர், மாதர் நலத்துறை இயக்குநர்.

(5) கிராம அபிவிருத்திக் கமிஷனர்—(உறுப்பினர்-செயலாளர்).

(உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை—58).

கடமைகள்.—மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் (1) கல்வி, (2) சுகாதாரம்—க்ஷேம நலம் சம்பந்தமான நிலைக் கமிட்டிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள எல்லா விஷயங்கள் பற்றியும் இந்தக் கமிட்டி கவனிக்கும். அவை யாவன :—

(i) கல்வி.—பல்கலைக் கழக படிப்பு தவிர மற்ற எல்லாக் கல்வி சம்பந்தமான எல்லா விஷயங்கள்.

(ii) சுகாதாரம்—க்ஷேம நலம்.—வைத்திய வசதி-பொதுச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு, சமூகநலம், ஹரிஜன நலம், மதுவிலக்கு, மற்ற சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

கூட்டங்கள் கூட்டப்படவேண்டிய மாதங்கள்:

ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர், மார்ச் மாதங்களில்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு 31-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 797)

—o—

ஜமாபந்தி: பஞ்சாயத்து வருவாய் சம்பந்தப்பட்ட கணக்குகளைப் பரிசோதித்தல்—பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அறிவித்தல்—ஆய்வறிக்கை சமர்ப்பித்தல் பற்றிய விளக்கம்.

(Jamabandi: Accounts in respect of Panchayat revenues—Checking Instructions to be sent to Panchayat Presidents—Review to be submitted—Instructions Issued.)

(Memorandum No. 206144. R.D. L.A., dated 26-3-62)

ஜமாபந்திக் காலத்தில் ஜமாபந்தி அதிகாரிகள், பஞ்சாயத்து வருவாய் வசூல் கணக்குகளைப் பரிசோதிக்கவும், கிராம அதிகாரிகளின் பஞ்சாயத்து வருவாய் வசூல் வேலை முன்னேற்றத்தைப்பற்றி ஆய்வுரைக்கவும், வரையறுக்கப்பட்டுள்ள ஜமாபந்திப் பரிசோதனை அறிக்கை பற்றிய மேலும் கூறப்பட்டுள்ள பிரச்சினைகளைப் பற்றிக்கூறியுள்ள ரெவினியூ போர்டாரின் 1962-ம் ஆண்டு மார்ச்சு 19-ந் தேதிய குறிப்பு 10206—கலெக்டர்கள், மாவட்ட ரெவினியூ

அதிகாரிகள், ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள், தாசில்தார்கள், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப் படுகிறது.

2. கிராம நல—தல நிர்வாகத்துறை கணக்குப் பிரிவின் 1961-ம் ஆண்டு அக்டோபர் மீ 23-ந் தேதியிட்ட அறிக்கை 206144/61-1-ல், பஞ்சாயத்து வருவாய்க் கணக்குவைப்பு, வசூல் சம்பந்தமாகப் பின்பற்றவேண்டிய நடைமுறை பற்றிய விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

3. ஜமாபந்தியின்போது, ஜமாபந்தி அதிகாரிக்குப் வசூல் வேலையின் முன்னேற்றம், வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைத் தீவிரப்படுத்தல் ஆகியவற்றைத் தெரிவிக்க வென்று, பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் வந்திருக்கவேண்டியது அவசியமாகும். கிராம நல-தல நிர்வாகத்துறை கணக்குப் பிரிவின் 1961–ம் ஆண்டு அக்டோபர் மீ 10-ந்தேதியிட்ட அறிக்கை 206144/61-1-ல் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறை, இந்தப் பசலியில் மட்டும் பின்பற்றப்பட என்பதும், இந்த ஜமாபந்தியில் ஏற்படும் அனுபவத்தின் அடிப்படையில் ஆணைகள் முடிவு செய்யப்படும் என்பது நினைவுபடுத்தப்படுகிறது.

4. யூனியனில் உள்ள கிராமங்களின் ஜமாபந்தி தேதிகளைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும், அவர்கள் மூலம் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளுக்கும் தாசில்,தார் அறிவிக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளும் ஜமாபந்தியில் கலந்துகொண்டு பஞ்சாயத்து வரிவசூல் முன்னேற்ற ஆய்விலும், வரி வசூலுக்கு வரையறுக்கப்பட்ட நடைமுறைகளிலும் ஜமாபந்தி அதிகாரிக்கு உதவிசெய்ய வேண்டும். ஜமாபந்தி அதிகாரி முன் ஆண்டுகளின் வசூல் வேலை முன்னேற்ற வீதத்தையும், இவ்வாண்டு வசூல் வேலை முன்னேற்ற வீதத்தையும் வரிவிதிப்பில் ஒப்பு நோக்க முயல வேண்டும். நடைமுறைகளைப் பின்பற்றுவதில் இருக்கும் செயல் வகைக் கஷ்டங்களை முடியுமானால் அந்த இடத்திலேயே தீர்க்க வேண்டும்; பெரிய பிரச்சினைகள் ஏதாவது எழுமானால், சமர்ப்பிக்கப்படப் போகும் ஆய்வறிக்கைத் தொகுப்பில் சேர்த்துக்கொள்ளக் குறிப்பு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

5. ஜமாபந்தியின் முடிவில், ஜமாபந்தி அதிகாரி, வரையறுக்கப்பட்ட நடைமுறை செயல்படும்போது கண்ட குறிப்பிடத்தக்க சிறப்பான அம்சங்களையும், வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறையின் மொத்த மதிப்பீட்டையும் விளக்கி ஒரு ஆய்வறிக்கை தயாரிக்க வேண்டும். இந்த ஆய்வறிக்கையுடன், இணைப்பில் கூறப்பட்ட நமூனவில் "கேட்பு-வசூல்-நிலுவை "(D. C. B.) விவரங்களை பஞ்சாயத்து யூனியன் வாரியாகத் தயாரித்து இணைக்க வேண்டும். இந்த ஆய்வறிக்கையின் பிரதி, கிராம நல-தல நிர்வாகத் துறையின் பஞ்சாயத்து நிதி இயக்குநருக்கும் (Director of Panchayat Finance, R. D. & L. A. Department) ரெவின்யூ போர்டு செயலாளருக்கும் அனுப்பப்படவேண்டும். மேலும் இதன் பிரதிகள், கலெக்டர், மாவட்ட டிவிஷனல் அதிகாரி, சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பப்பட வேண்டும். மாவட்டக் கலெக்டர்கள், அவர்களுடைய மாவட்டங்களில் பல்வேறு தாலூக்காக்களின் ஜமாபந்தித் தேதிகளை, பஞ்சாயத்து நிதி இயக்குநரை உடனடியாக அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. அடுத்தபடி, ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திலும் அவ்வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் கலந்து கொள்ளும் மாநாடு கூட்டி, ஜமாபந்தி அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையைப்பற்றி பஞ்சாயத்துத் தலைவர்களுடன் கலந்து பேச வேண்டும். இதற்காக, ஜமாபந்தி அதிகாரியின் ஆய்வறிக்கையைப் பஞ்சாயத்துத் தலைவர்களிடையே முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும். தாசில்தார், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி, ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் பஞ்சாயத்துத் தலைவர்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொண்டு ரெவினியூ டிவிஷனல் அதிகாரி, கிராம அதிகாரிகள் மூலம் பஞ்சாயத்து வருவாய் வசூல் வேலை விஷயத்தில் வரையறுக்கப்பட்ட நடைமுறை எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றிப் பஞ்சாயத்து யூனியன் வாரியாக ஓர் அறிக்கை தயாரிக்க வேண்டும். மாவட்டக் கலெக்டர், இந்த அறிக்கைகளின் அடிப்படையில் நடைமுறை செயல் படும் விதத்தைப்பற்றி மதிப்பிட்டு, கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1961 வருஷம் அக்டோபர் மாதம் 23-ம் தேதி தேதியிட்ட அறிக்கை 206144/61-1ன் பாரா 2-ல் முன்னறிவித்துள்ளபடி, ரெவினியூ போர்டுக்கும், கிராம நல–தல நிர்வாகத்துறைக்கும் அறிவிப்பார்.

7. ஜமாபந்தி முடிந்ததும், ஜமாபந்தி அதிகாரியின் அறிக்கையும், "கேட்பு-வசூல்-நிலுவை" (D.C.B.) அறிக்கையும், அனுப்பப்பட வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்களுடன் கலந்து பேசும் மாநாடுகள், ஜூலை 15-ம் தேதி அளவில் முடிந்துவிடவேண்டும். கலெக்டர்களின் மதிப்பீடு ஆகஸ்ட் 15-ம் தேதி அளவில் அரசாங்கத்துக்கும், ரெவினியூ போர்டுக்கும் வந்து சேரவேண்டும்.

இணைப்பு

மாவட்டம்........................ரெவினியூகோட்டம்........................பஞ்சாயத்துயூனியன்..................

		வீட்டு வரி					வாகன வரி.					தொழில் வரி.					விவசாய நிலத்தின் மேல்குறித்த வரி.			மொத்தம்.		
வரிசை எண்.	பஞ்சாயத்தின் பெயர்.	பாக்கி கேட்பு.	நடப்பு கேட்பு	மொத்தம்.	வசூல்.	நிலுவை.	பாக்கி கேட்பு.	நடப்பு கேட்பு.	மொத்தம்.	வசூல்.	நிலுவை,	பாக்கி கேட்பு.	நடப்பு கேட்பு.	மொத்தம்.	வசூல்.	நிலுவை.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	எல்லா வரிகளின் கேட்பு	எல்லாவரிகளின் வசூல்.	நிலுவை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 26—3—1962 தேதியிட்ட அறிக்கை எண் 206144)

— (0) —

பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்: பஞ்சாயத்துக்களில் அமைக்கத்தக்க அரசாங்கம் அங்கீகரித்துள்ள வானொலிப் பெட்டிகளின் 'வகைகள்' மாதிரிகளின் பட்டியல்—வானொலிப் பெட்டிகள் அமைக்கப் பஞ்சாயத்துக்களுக்கு அனுமதிக்கத்தக்க உதவித் தொகை விளக்கம்.

[Panchayat Radio Maintenance Organisation-Installation of Radio Sets in the Panchayats—List of approved types and models of radio sets that can be installed in the Panchayats—The amount of subsidy to be sanctioned to the Pan hayats for installation of radio sets—Instru.tions—Issued)

(G. O. Ms. No. 725, R. D. and L. A., Dated 26—3—62)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம்ஆண்டு ஜனவரிமீ 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1-ல் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தும் 1962, டிசம்பர் முடிவுக்குள் ஒரு வானொலிப் பெட்டி அளிக்கப்பட வேண்டும் என்றும், இந்த வகையில் சுமார் 8,000 புது வானொலிப் பெட்டிகள் பஞ்சாயத்துக் களில் அமைக்கப்பட வேண்டும் என்றும் விளக்கம் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணையின் இணைப்பில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒவ்வொரு வானொலிப் பெட்டி அளிக்கப்படுவதற்கான நடைமுறை போடப்பட்டிருக்கிறது. அந்த விளக்கங்களின்படி, பஞ்சாயத்துக்களில் அமைக்கத் தகுந்தவகை மாதிரி வானொலிப் பெட்டிகளை வாங்க விற்பனையாளர்களிடமிருந்து விலை விவரம் தருவிக்கப்பட்டு, இதற்கெனத் தனியாக அரசாங்கத்தார் அமைக்கப்பட்ட ஒரு குழுவினரால் அவை ஆராயப்படும். அந்தக் குழு விலை விவரத்தை ஆராய்ந்து, வானொலிப் பெட்டிகள் வேலை செய்யும் முறை முதலானவற்றைப் பரிசோதித்துப் பார்த்த பின்னர், பொருத்தமான வகைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் விலையை அங்கீகரிக்கும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளின் வகைகள் மாதிரிகளின் பட்டியல், அங்கீகரித்த விலை விவரத்துடன் எல்லாக் கலெக்டர்களுக்கும், எல்லா

ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கும், சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் அனுப்பிவைக்கப்படும்.

2. மேற்படி ஆணைகளை நிறைவேற்றுகின்ற வகையில் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962ஆம் பிப்ரவரி 15-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 365-ல் அரசாங்கம் ஒரு குழுவை அமைத்து ஆணை பிறப்பித்துள்ளது. இது விஷயத்தில் அந்தக் குழு அரசாங்கத்துக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. பல்வேறு விற்பனை நிறுவனங்களிடமிருந்து வந்த விலை விவரங்களை ஆய்ந்தும், வானொலிப் பெட்டிகளை பரிசோதித்தும், இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்ட பட்டியலில் கண்ட வானொலிப் பெட்டிகளை அங்கே குறித்த விலைப்படி வாங்கி பஞ்சாயத்துக்களில் அமைக்கலாம் என்று சிபாரிசு செய்துள்ளது. அரசாங்கம் குழுவின் மேற்படி சிபாரிசைக் கவனத்துடன் பரிசீலனை செய்து இணைப்பில் கூறப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளை அவற்றின் எதிரில் குறிக்கப்பட்ட விலைகளுக்கு வாங்கிப் பஞ்சாயத்துக்களில் அமைக்கலாம் என்று அங்கீகரித்துள்ளது.

3. வானொலிப் பெட்டிகள் அமைக்கப்படும்பொழுது, 100 அடி நீளத்தில் ஒலி அலை வாங்குக் கம்பிச் சுருள் ஒன்று, பீங்கான் அல்லது கண்ணாடி மின்காப்புகள் (Insulators) மூன்று, மின்தடை மின்காப்பு ஒன்று, ஒரு சாதாரண மின்னல் தாங்கி, 23/36 (அ) 14/36 அளவுள்ள வளையத்தக்க இரட்டை பிளாஸ்டிக் கம்பி 25 கஜம், ஆகிய ஒலி அலை வாங்கிப்பொருள்கள் தேவைப்படும் என்று குழு சிபாரிசு செய்துள்ளது. ஒலி அலை வாங்கிப் பெட்டியின் (Aerial Kit) விலை 10 ரூபாய்க்கு மேற்படாது என்றும், அவைகளை உள்ளூர் விற்பனையாளர்களிடம், பஞ்சாயத்துக்கள் வாங்கிக்கொள்ளலாம் என்றும் குழு சிபார்சு செய்துள்ளது. அரசாங்கம், குழுவின் மேற்படி சிபார்சினை ஒப்புக்கொண்டு, பஞ்சாயத்துக்கள் குழு சிபார்சு செய்துள்ள ஒலி அலை வாங்கிப் பெட்டியை உள்ளூர் விற்பனையாளரிடம் வாங்கிக்கொள்ள ஆணையிடுகிறது.

4. பஞ்சாயத்துக்களில் அமைக்கப்படும் வானொலிப் பெட்டிகள்—வெளிப்புறத்தில் சமுதாய மக்கள் கேட்கவென்று அமைக்கப்படுவதால் அவை, வெளிப்புற உபயோகத்துக்கென்று ஒலிபெருக்கிக் குழல் (Reflex Horn) ஒரு யூனிட் வகை ஒலி பெருக்கியுடன் வழங்கப்படும். குழு பல்வேறு வாணிப நிறுவனங்களிடமிருந்து ஒலி பெருக்கி விலை விவரங்களைத் தருவித்து, ஆராய்ந்த பின்னர், அந்த விலைகள் தரவு, நிறைவுத் தலைமை இயக்குநர் (Director-General of Supplies and Disposals) ஒப்புக்கொண்டுள்ள விலை வீதத்துக்கு மிகுதியாகப் போவதால், வாணிப நிறுவனங்களின் விலைகளை அரசாங்கம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதில்லை என்று சிபார்சு செய்துள்ளது. புற ஒலி பெருக்கிகள் வழங்கத் தனியாக ஏற்பாடு செய்யலாம் என்றும் அந்தக் குழு கூறியுள்ளது. அரசாங்கம் குழுவின் மேற்படி சிபாரிசை ஒப்புக்கொண்டு, பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படும் வானொலிப் பெட்டிகளுடன் ஒரு புற ஒலி பெருக்கிகளையும் வழங்க ஒப்புக் கொள்கிறது. அவற்றை வழங்குவதற்கான விளக்கம் தனியே வெளியிடப்படும்.

5. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962ஆம் ஜனவரி 1-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1-ல், பஞ்சாயத்துக்கள் ,அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள வானொலிப் பெட்டிகளின் குறைந்த விலைப் பெட்டியின் விலையில் ஒரு பாதியை, பஞ்சாயத்து வாங்கிய வகையை நோக்காமல், அசராங்கம் உதவித் தொகையாக அளிக்கும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று குழு குறித்திருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில், குறைந்த விலையுள்ள வானொலிப் பெட்டியின் விலை ரூ. 305-66 ந.பை. ஆக இருக்கிறது. பஞ்சாயத்துக்களில் அமைக்கப்படத் தக்க வானொலிப் பெட்டிகளுக்கு ஒலி அலை வாங்கியும், புற ஒலி பெருக்கியும் இன்றியமையாதனவாகும். ஆகவே, அவற்றின் விலையையும் பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையுடன் சேர்த்துக் கணக்கிடவேண்டும். என்றும் குழு சிபார்சு செய்துள்ளது. ஒலி அலை வாங்கிப் பெட்டியின் (Aerial Kit) விலை 10 ரூபாய்க்கு மேற்படாது என்றும் ஒரு யூனிட் புற ஒலி பெருக்கியின் விலை சுமார் 45 ரூபாய் ஆகலாம் என்றும் குழு தெரிவித்துள்ளது. இவற்றையும் சேர்த்து, அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள குறைந்த விலை வானொலிப் பெட்டியை பஞ்சாயத்தில் அமைக்க, சுமார் 360 ரூபாய் ஆகிறது. பஞ்சாயத்துக்கு புதிய வானொலி அமைப்புக்கென்று 180 ரூபாய் உதவித் தொகையாக அளிக்கலாம் என்று குழு சிபாரிசு செய்துள்ளது. அரசாங்கம் குழுவினுடைய சிபாரிசை ஒப்புக்கொண்டு, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து ஒரு புதிய வானொலிப் பெட்டி அமைக்க 180 ரூபாய் (நூற்றி எண்பது ரூபாய் மட்டும்) உதவித் தொகை கொடுக்க அரசாங்கம் ஆணையிடுகிறது.

6. பஞ்சாயத்துக்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத வானொலிப் பெட்டியை வாங்கினால், அவை **உதவித் தொகை பெறுவதற்குத் தகுதியற்றவை** என்று கலெக்டர்களும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் அறிவிக்கப்படுகிறார்கள்.

இந்த ஆணையின் இணைப்பில் கூறப்படாத வானொலிப் பெட்டியை வாங்க, பஞ்சாயத்து விரும்பினால், அந்த விருப்பத்தைத் தலைமை வானொலி அதிகாரிக்கு (Chief Radio Officer) வாங்க உத்தேசித்த வானொலிப் பெட்டியின் முழு விவரங்களுடனும்[அதாவது, விலை, செயலகம் (Make) மாதிரி, உறுதிச் சான்று விதிகள் முதலிய விவரங்கள்] சமர்ப்பிக்கவேண்டும். அவர் அந்த விவரங்களை ஆராய்ந்து, அத்துடன் தன் சிபாரிசுகளையும் சேர்த்து அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள குழுவுக்கு அனுப்புவார். தலைமை வானொலி அதிகாரியின் சிபார்சுகளைப் பரிசீலனை செய்த பின்னர் அந்தக் குழு, அந்த வானொலிப் பெட்டி பஞ்சாயத்தில்

அமைக்கத் தக்கதென்று கண்டால், அரசாங்கத்துக்கு அதை வாங்குவதற்கு சிபாரிசு செய்யும். அரசாங்கம் அந்தக் குழுவின் சிபாரிசின் பேரில் முடிவெடுக்கும். அதன்படி வானொலிப் பெட்டி அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டால், 180 ரூபாய் உதவித் தொகை அல்லது பஞ்சாயத்தால் வாங்கப்பட்ட வானொலிப் பெட்டியின் புற ஒலி பெருக்கி, ஒலி அலை வாங்கி உட்பட, விலையில் 50 சத வீத விலை—**இவற்றில் எது குறைவோ** அந்தத் தொகையைப் பெற பஞ்சாயத்து தகுதி உடையதாகும்.

7. விற்பனையாளர்களிடமிருந்து வானொலிப் பெட்டி வாங்குவதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைபற்றியும், பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து **வேலை நிறைவேற்றத்தின் பின் அளிக்கப்படும் உதவிஅடிப்படையில்** அரசாங்கத்தின் உதவித்தொகையை நோக்கி செய்யப்படும் செலவுகளை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் பிரித்துக் கணக்கிடவும் விளக்கங்கள் தனியாக வெளியிடப்படும்.

இணைப்பு

உற்பத்தியாளர்/விற்பனையாளர் பெயர்.	வானொலிப்பெட்டியின் வகையும், மாதிரியும்.	விற்பனை விலை.
1. ஜெனரல் ரேடியோ அண்டு அப்ளையன்சஸ் லிமிடெட், மவுண்டு ரோடு, சென்னை-2.	i. நேஷனல் எக்கோ, மாதிரி A-730 230 V. A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 535.
(மாநிலத்தில் உள்ள அவர்களின் விற்பனையாளர்கள் யாரிடத்திலும் இந்த விலைகள் செல்லும்.)	ii. நேஷனல் எக்கோ. மாதிரி A 744. 230 V. A.C இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 395-90
	iii. நேஷனல் எக்கோ B. 751. உலர்கடி மாதிரி.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 395-90.
2. வயர்லெஸ் சேல்ஸ் அண்டு சர்வீஸ், மவுண்டு ரோடு, சென்னை-2.	i. G.E.C.— மாதிரி BC. 5350—230 V. A-C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 427-67.
(இந்த விலைகள் சென்னை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் செல்லும்,)	ii. G.E.C. மாதிரி B.C. 5151W—230V. A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 348-44.
	iii. G.E.C. மாதிரி B.C. 5746—230V—A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 662-50.
3. மகமது இப்ராஹிம் & கம்பெனி, மவுண்டு ரோடு, சென்னை-2.	i. மர்பி T.A.O.-724 230 V. A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 515-68.
(இந்த விலைகள் மாநிலத்திலுள்ள அவர்களுடைய எந்த ஒரு விற்பனையாளர்களிடமும் செல்லும்.)	ii. மர்பி T.A.O.—374 280 V. A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 443-10.
	iii. மர்பி T.A.O.—322 230 V. A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 351-00.
4. ரேசா கம்பெனி, மவுண்டு ரோடு, சென்னை-2.	i. A.W. 6 D.B. ரேசா 90 V. 1·5 V. D.B. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 320-45.
(இந்த விலைகள் மாநிலத்தில் உள்ள அவர்களுடைய எந்த விற்பனையாளரிடமும் செல்லும்.)	ii. A.W. 6 ரேசா 230 V. A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 305-66
	iii. ரேசா B.S. 5. 230 V. A.C. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 364-82.
	iv. ரேசா A. W. 6/T.R.—டிரான்ஸிஸ்டர் பெட்டி—9 V. D. B. இயக்கத்துக்கு.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 364-82.
5. ஜி. ஜான்லி அண்டு கம்பெனி, மவுண்டு ரோடு, சென்னை-2. (விலைகள் சென்னை தொழிற்சாலை வரை செல்லும்.)	i. கிரிஸ்டல்டோன் மாதிரி. W. 678.	எல்லா வரிகளும் உட்பட நிகர விலை ரூ. 520.

[கிராம நல—தல நிர்வாகத்துறையின் 26—3—1962 தேதியிட்ட அரசாங்க ஆணை 725].

1961-ம் ஆண்டு தமிழ் நாடு ஸ்தல ஸ்தாபனங்கள் நிதிச் சட்டம் அமுலுக்கு வரும் தேதி அறிவிப்பு

[Act—Madras Local Authorities Finance Act, 1961—Date of Coming into force—Notified] (Appendix to the G. O. Ms. No. 640., R. D. & L. A., dated 17—3—1962)

இணைப்பு

விளம்பரம்

1961-ம் ஆண்டு தமிழ் நாடு ஸ்தல ஸ்தாபனங்கள் நிதிச் சட்டம், பிரிவு 1, துணைப் பிரிவு (2)-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, தமிழ் நாடு கவர்னர் அவர்கள் 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியை மேற்படி சட்டம் அமுலுக்கு வரும் தேதியாக குறிக்பிட்டு அறிவிக்கிறார்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 17—3—62 தேதியிட்ட அரசாங்க ஆணை 640-ன் இணைப்பு.)

பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்: பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகளை அமைப்பதில் கடைப் பிடிக்க வேண்டிய நடை முறை

(Panchayat Radio Maintenance Organisation-Installation of radio sets in the Panchayats Procedure to be followed Instructions-Issued]

(G. O. Ms. No., 800, R. D. & L. A., dated 31—3—62)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962 மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 725-ல் பஞ்சாயத்துக்களில் அமைக்கப்படக்கூடிய வானொலிப் பெட்டிகளின் வகைகளையும், மாதிரிகளையும் அங்கீகரித்து ஆணைகள் பிறப்பக்கப்புட்டுள்ளன. மேற்படி ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள ஏதாவதொரு வானொலிப் பெட்டி ஒரு புற ஒலிபெருக்கி, ஒரு ஒலியலை வாங்கிப் பெட்டியுடன் அமைக்கப்படு வதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் 180 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படும் என்று மேற்படி ஆணையில் கூறப்பட்டுள்ளது. மேலும், உதவிப்பணம் அளிக்கவும், விற்பனையாளர்களிடம் வானொலிப் பெட்டிகளை வாங்கவும் பின்பற்றப் பட வேண்டிய நடைமுறை பற்றிய விளக்கங்கள் தனியாக வெளியிடப்படும் என்றும் அந்த ஆணையில் கூறப்பட்டுள்ளது. மேற்படி விஷயத்தை கருத்தில்கொண்டு வானொலிப்பெட்டி வாங்குவதிலும், உதவித்தொகை வழங்குவதிலும், கீழே 2-வது பாராவில் முறையே கூறப்பட்டுள்ள நடைமுறையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது.

2. (i) பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டுள்ள வானொலிப்பெட்டிகள் ஒரு முழு மதிப்பீடு உடனே செய்யவேண்டுமென்று, தம் கீழ் உள்ள பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அறிவிக்குமாறு கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த மதிப்பீடு, ஒவ்வொரு பஞ்சாயத்தும் 1962, அக்டோபர் 2 தேதிக்குள் ஒரு வானொலிப்பெட்டியைப் பெற வேண்டும் என்ற பாவனையில் நடத்தப்படவேண்டும். ஏற்கனவே ஒரு வானொலிப் பெட்டியுள்ள பஞ்சாயத்துக்கள் இந்த மதிப்பீட்டில் சேர்க்கபடாமல் விடப்படவேண்டும். ஒரு பஞ்சாயத்து ஒரு வானொலிப் பெட்டியாகிலும் வைத்திலலை என்றால் அந்தப் பஞ்சாயத்து, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962 ஜனவரி 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1-ன் படி, ஒரு வானொலிப் பெட்டி அளிக்கப்பட வேண்டும்.

(ii) அரசாங்கம் அங்கீகரித்த வானொலிப் பெட்டி வகைகளிலிருந்து எந்த வகையை வாங்க உத்தேசித்திருக்கிறது என்றும், உதவித்தொகையான 180 ரூபாய் நீங்கலாக வானொலிப் பெட்டி ஒலிஅலை வாங்கிப் பெட்டி (Aerial kit) புற ஒலிபெருக்கி ஆகியவையின் விலையை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொள்கிறதா என்றும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், வானொலிப் பெட்டி இல்லாத ஒவ்வொரு பஞ்சாயத்திடமிருந்தும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

(iii) பஞ்சாயத்து, அது வேண்டும் வானொலிப்பெட்டி (ஒலியலை வாங்கிப் பெட்டி, புற ஒலிபெருக்கி உட்பட) யின் விலையில் உதவித்தொகை கழிய மீதித்தொகை யைச் செலவழிக்கத் தயாராய் இருக்கும்பட்சத்தில் பஞ்சாய்த்து யூனியன் கமிஷனருக்கு பஞ்சாயத்தின் சார்பில் வானொலிப்பெட்டி (ஒலியலை வாங்கிப் பெட்டி, புற ஒலிபெருக்கி உட்பட) வாங்கவும் அதற்குச் செலுத்த வேண்டிய பஞ்சாயத்தின் பாக்கித் தொகையை பஞ்சாயத்து யூனியன் அலுவலக்ங்களில் அதன் கடனைப் பெறவும் அதிகாரம் அளித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஒரு பிரதியைப் பஞ்சாயத்து யூனியனுக்கு அனுப்பி வைக்கும்படி பஞ்சாயத்து கேட்டுக்கொள்ளப்படுகிறது. அத்துடன் வானொலிப் பெட்டி, ஒலிபெருக்கி வாங்கின விலையில் தன்னுடைய பங்குத்தொகையைப் பஞ்சாயத்து யூனியன் நிதியின் நிதியில் பற்றுவைக்கவேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் இதற்கென்று பஞ்சாயத்து கமிஷனர் பெயரில் ஒரு பணம் செலுத்தாணையைத்(Pay Order) தயாரித்தனுப்பவேண்டும்.

(iv) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் தம்முடைய பகுதியில் எல்லாப் பஞ்சாயத்துக்களின் தேவைகளைத் தொகுத்து, அரசாங்கம் அங்கீகரித்துள்ள ஒவ்வொரு வகையிலும் மாதிரியிலும் எத்தனை வானொலிப் பெட்டிகள் வாங்கப்படவேண்டும் என்று காண வேண்டும்.

(v) பிறகு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட வானொலி பெட்டிகளை விற்கும் அருகில் உள்ள விற்பனையாளர்களுக்கு மொத்தமாக ஒரு தேவைக் கோரிக்கையை (Indent) அனுப்பவேண்டும். வானொலிப் பெட்டிகளுக்குத் தேவையான ஒலி அலை வாங்கிகளுக்கு உள்ளூர் விற்பனையாளர்களுக்கும் தேவைக் கோரிக்கை அனுப்பவேண்டும்.

(vi) விற்பனையாளர்களிடமிருந்து வானொலிப் பெட்டிகளையும், ஒலி அலை வாங்கிகளையும் பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட வானொலி மேற்பார்வையாளர்களால் (Radio Supervisors) அவை ஏதாவது குறையுடையனவா என்றும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கபட்டவை தானா, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால் கோரப்பட்டவை தானா என்றும் பரிசோதனை செய்து பார்க்கப்படவேண்டும். அவ்வாறு பார்த்த பின்னர் அவை நல்ல நிலையில் சரியாக இருந்து, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் தேவைக் கோரிக்கைகளுடன் பொருந்தியிருந்தால், அதற்கு மேற்பார்வையாளர்கள் ஒரு சான்றிதழ் வழங்குவதுடன், விற்பனையாளர்கள் அனுப்பியுள்ள விற்பனைச் சீட்டுகளில் சம்மதிக்கும் வகையில் கையொப்பம் (Counter sign) இடவேண்டும்.

(vii) வானொலிப் பெட்டிகள், ஒலி அலை வாங்கிக் கருவிகள் முதலியன வந்து சேர்ந்தவுடனே வானொலி மேற்பார்வையாளர்கள் அந்தந்தப் பஞ்சாயத்துக்களில் அவற்றை அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(viii) மேலே துணைப்பாரா vi-ல் கூறியபடி மேற்பார்வையாளரின் சான்றிதழையும், எதிர்க்கையொப்பத்தையும் பெற்ற பின்னர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், வானொலிப் பெட்டிகள், ஒலி அலை வாங்கிப் பெட்டிகள் ஆகியவற்றின் மொத்த விலையை விற்பனையாளர்களுக்கு முதல் நிலையாக பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து செலுத்த ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான புற ஒலி பெருக்கிகளை வாங்குவதற்கான விளக்கங்கள் தனியாக வெளியிடப்படும். அவற்றின் விலையும் ஆரம்ப நிலையில் பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்தேஈடு செய்யப்படும்.

(ix) வானொலிப் பெட்டிகள் முதலிலானவற்றின் விலை விற்பனையாளர்களுக்குச் செலுத்திவிட்டு, பஞ்சாயத்துக்களிடமிருந்து அதற்குறிய பங்குத் தொகை பெற்ற பின்னரே பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து செய்யப்பட்ட செலவுகள் உதவித் தாகை அளிப்பதன் மூலம் அரசாங்கத்தால் ஈடு செய்யப்படும். கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண்1, 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 300 ஆகியவற்றில் பஞ்சாயத்து யூனியன்கள், சமூகக் கல்வித் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்துக்களுக்கு வானொலிக் பெட்டி அமைப்புக்கு உதவித் தொகை கொடுப்பதற்கென்று 2,500 ரூபாய்க்கு மேற்படாமல் ஒதுக்கி வைக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 725 -ல் ஒரு வானொலிப் பெட்டிக்கு ரூ. 180 என்று உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒலி அலை வாங்கி (Aerial kit), புற ஒலி பெருக்கி ஆகியவைகளையும் சேர்த்து வானொலிப் பெட்டிகள் அமைக்கப்படாத பஞ்சாயத்துக்களின் தொகை மிகுதியாகவுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் சமூகக் கல்வித் திட்டத்தின் கீழ் இதற்கென ஒதுக்கப்படும் தொகை போதாமல் இருக்கும். கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 300-ல் கூறியுள்ள வேலை முறை ஒரு மாதிரி வேலை முறையேயாகும். ஆகவே இரு பஞ்சாயத்துக்கு ஒரு வானொலிப் பெட்டி வீதம் வழங்கத் தேவையான உதவித் தொகை அளிக்க எவ்வளவு பணம் தேவையென்று வகைசெய்துகொள்வது பஞ்சாயத்து யூனியன்களின் முடிவுக்கு விடப்பட்டிருக்கிறது. 1961-62 ஆண்டில் இது சம்பந்தமாக செலவெதுவும் செய்யப்படவில்லை. ஆகவே பஞ்சாயத்து யூனியன்களும், கமிஷனர்களும் உதவித் தொகைகளுக்கென்று ஒரு வட்

டாரத்துக்கு 2,500 ரூபாய்க்கு அதிகமாகவும் தேவையான நிதியை ஒதுக்கக்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இருந்தபோதிலும் ஒதுக்கப்படும் நிதி தலைக்கு ஓராண்டுக்கு 10 ந.பை என்ற வீதத்தில் ஒதுக்கப்படவேண்டிய மொத்தத் தொகைக்கு மேலே போகக்கூடாது. இந்த உயர் வரம்புக்கும், சமூகக் கல்வித் திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் பிற வகைகளின் தேவைகளுக்கும் பட்டு பஞ்சாயத்து யூனியன்கள் தேவையான முழுத் தொகையை இதற்கு ஒதுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படலாம்.

(x) சமூகக் கல்வித் திட்டத்தில், உதவித் தொகைக்கென்று செய்யப்படும் செலவுகள் பின்னர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால், "47-எ சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணியும் தல அபிவிருத்தி வேலைகளும்—பி. அபிவிருத்தித் திட்டங்கள்—மூன்றாவது ஐந்தாண்டு திட்ட வேலைகள்—சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்—vi. சமூகக் கல்வி" என்ற தலைப்பின்கீழ் தொடங்கப்பட்ட "பஞ்சாயத்து யூனியனுக்கு உதவி மானியம்" என்ற கணக்குத் தலைப்பின்கீழ் மானியமாக கேட்டுப் பெறவேண்டும். இது கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 300-ல் கூறிய விளக்கங்களின்படி, சமூகக் கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெறும் பிற வேலைகளைப்போல், "திட்ட நிறைவேற்றத்தின் பிறகு வாங்கப்படும்" அடிப்படையில் மானியம் பெறப்படும்.

3. உதவித் தொகையைக் கொண்டு வானொலிப் பெட்டி அமைக்கும் இந்தத் திட்டம், ஏற்கெனவே வானொலிப் பெட்டி இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் பொருந்துமே தவிர தானே முன் வந்து பணியாற்றும் நிறுவனங்கள், நிலையங்கள் முதலியவற்றுக்குப் பொருந்தாது என்பதை அரசாங்கம் மறுபடியும் வலியுறுத்திக் கூறுகிறது. மேலும் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு வானொலிப் பெட்டி பெறுமாறு செய்யும் இந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்கப்படவேண்டும் என்றும், அதாவது இந்தக் குறிக்கோள் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள் அடைந்துவிடவேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்துகிறது. கலெக்டர்கள், ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனப் பணியாளர், வட்டாரப் பணியாளர்கள், குறிப்பாக, பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி, கல்வி வளர்ச்சி அதிகாரி கிராம சேவகர் முதலானோர், இந்தத் திட்டத்தை விரைவில் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கத் தனி ஆர்வம் காட்டி முயல வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 31—3—62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 800)

பஞ்சாயத்துத் தலைவர்களின் பயணப் படிப் பட்டியல்களில் டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள் சம்மதிக்கும் வகையில் கையொப்பம் இடுதல்—திருத்தப்பட்டவிளக்கம்.

Allowance-Travelling-Presidents of Panchayats – Counter-signature of travelling allowance bills by Divisional Panchayat Officers-Revised instructions issued.]

(G. O. No. 319., R. D.and L. A., dated 9—2—62)

பஞ்சாயத்துத் தலைவர்கள் பயணப்படிப் பட்டியல்கள் (Bills), நகர மன்றங்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் மேற்பார்வையாளரின் (Inspector of Municipal Councils and Local Boards) 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதி சுற்றறிக்கை எண் 79923/60-ல் கூறியுள்ளபடி, சம்மதிக்கும் வகையில் கையொப்பத்துக்காக (Counter-signature), டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிக்கு அனுப்பப்படுவதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. பஞ்சாயத்துக்களின் துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், நிர்வாக அதிகாரி, பஞ்சாயத்துப் பணியாளர் ஆகியோரின் பயணப்படிப் பட்டியல்களில் எதிர்க் கையொப்பம் பெறும் விஷயத்தில், இப்பொழுது அமுலில் இருந்துவரும் நடைமுறை எந்த மாற்றமும் இன்றித் தொடர்ந்து அமுலில் இருக்கும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 9—2—62 தேதியிட்ட அரசாங்க ஆணை 319)

ஆட்சி மொழி—தமிழ்—தமிழ சுருக்கெழுத்துத் தகுதி வாய்ந்தவர்களுக்கு விசேஷ ஊதியம் அளித்தல்

[Official Language—Tamil—Grant of Special pay for qualification in Tamil Short-hand—Ordered.]

[G. O. No. 2155, Public Department, dated 30th December, 1961.]

1956-ம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டத்தினை நிறைவேற்றிவைத்தலை ஒட்டி, அரசாங்க பணி மனைகளில் பணிபுரியும் தட்டெழுத்துக்காரர்களுக்கும், சுருக்கெழுத்தாளர்களுக்கும் போதிய ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில், ஆட்சி மொழிக் குழுத்தலைவர் மாதம் ரூபாய் 15-ம், ரூபாய் 40-ம் முறையே விசேஷ ஊதியமாக தமிழ் சுருக்கெழுத்து லோயர் கிரேட், ஹையர் கிரேட் தகுதி பெற்றுள்ள சுருக்கெழுத்து-தட்டெழுத்தாளர்களுக்கு அளிக்க வேண்டும் என்று யோசனையைச் சொல்லியுள்ளார். ஆங்கிலச் சுருக்கெழுத்து, தமிழ் சுருக்கெழுத்து இரண்டிலும் தகுதிபெற்று, தமிழ்ச் சுருக்கெழுத்து வேலை செய்து வருபவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்து ஆகிய இரண்டிலும் அவர்கள் பெற்றுள்ள தகுதிகளில் உயர்ந்த பட்சமாக எது அதிகமாக அலவன்ஸ் பெற முடியுமோ, அந்த அலவன்ஸ் தொகை அவர்கள் பெற அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்றும் ஆட்சி மொழிக்குழு ஆலோசனை சொல்லியுள்ளது. போதிய பரிசீலனைக்குப் பிறகு, அரசாங்கம் மேற்கண்ட ஆலோசனையை ஒத்துக்கொண்டு, தமிழில் சுருக்கெழுத்து-தட்டெழுத்துக்காரர்களாகப் பணி புரியும் எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் தமிழில் சுருக்கெழுத்தில் லோயர் கிரேட், ஹையர் கிரேட் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு முறையே மாதம் ரூபாய் 15-ம், 40-ம் முறையே விசேஷ ஊதியமாக (Special pay) அளிக்கப்பட வேண்டும் என்றும், ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் சுருக்கெழுத்துத் தகுதி பெற்று, தமிழ்ச் சுருக்கெழுத்து-தட்டெழுத்தாளர்களாகப் பணி புரியும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு, ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்துத் தகுதிகளுக்காக அளிக்கப்படும் இரு வகை அலவன்ஸ் தொகையில் அதிகப்படியாக உள்ள தொகை அளிக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது.

(பொதுத் துறையின் 30-12-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2155.)

பணியாளர்—பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—மருத்துவம், பொது சுகாதாரத் துறை பணியாளர் சம்பள விதங்கள்

[Establishment—Panchayat Union Councils—Medical and Public Health Staff—Scales of pay—Orders passed.]

[G. O. No. 427, R. D. & L. A., dated 22nd February 1932.]

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் பிரிவு 57 (3)-வது பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் பணித்துறைகளில் உள்ள வைத்திய-பொது சுகாதாரச் சிப்பந்திகளுக்கு கீழ்க்கண்ட சம்பள விகிதங்களை அரசாங்கம் நிர்ணயித்து உத்தரவு பிறப்பிக்கிறது. இந்த சம்பள விகிதங்கள் 1960-ம வருஷம் ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வரும்.—

(i) வைத்திய அதிகாரி (நாட்டு வைத்திய முறை).	ரூ. 150—5—175—10—225—15—300.
(ii) மருந்து கலக்குபவர்	ரூ. 70—2—100 (நாட்டு மருந்து).
	ரூ. 90—4—110—3—140 (நவீன மருந்து).
(iii) மகப்பேறு உதவியாளர்	ரூ. 80—3—110—2—120.
(iv) செவிலித்தாய் ..	ரூ. 50—1—60.
(v) சுகாதார உதவியாளர்	ரூ. 90—3—105—4—125.
(vi) ஆயா	ரூ. 50—1—60.

2. முன்பு பஞ்சாயத்துக்கள், மாவட்டக் கழகங்களின் பணித்துறையில் இருந்து இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் பணிபுரிகிற வைத்திய-சுகாதாரச் சிப்பந்திகளுக்கு அளிக்கப்பட வேண்டிய சம்பளம் பாக்கித்தொகையினை-சம்பள விகிதம் மாற்றியமைக்கப்பட்டதினாலோ, மற்ற காரணங்களினாலோ ஏற்பட்டுள்ளதை அந்த விஷயங்களில் கீழ்க்கண்ட முறைக் கையாளப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது. முன்பு மாவட்டக் கழகங்களுக்குச் சொந்தமாக இருந்த பணியாளர்களைப் பொறுத்த வரையில், பாக்கி கொடுக்க வேண்டியதால் ஏற்படும் செலவினங்களை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் மாவட்டக் கழகத்திலிருந்து பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கு சட்டப்படி மாற்றப்பட்டுள்ள பொறுப்புக்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. முன்பு பஞ்சாயத்துக்களைச் சேர்ந்திருந்த பணியாளர்கள் சம்பந்தப்பட்டமட்டில பஞ்சாயத்து யூனியன் மன்றம் முதலில் தன்னுடைய நிதியிலிருந்து இந்த சம்பளம் பாக்கித் தொகையை விநியோகம் செய்து விட்டு பின்பு, வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களிலிருந்து அதனால் உண்டான செலவுத் தொகையை திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(கிராமநல-தல நிர்வாகத் துறையின் 22—2—62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 427.)

சமூகக் கல்வித் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் ஒப்படைத்தல்—சமூகக் கல்விக்கான மாதிரித் திட்டம்

(Panchayat Unions-Social Education Programme-Entrustment to the Panchayat Union Councils—Model Programme for Social Education-Instructions issued).

(G O. Ms. No. 300, R. D. and L. A., dated 6-2-1962)

கிராம நலத்துறையின் 21-6-1960 தேதியிட்ட அரசாங்க ஆணை 483-ன் இணைப்பில் பகுதி I-ல், சமுதாய நலத் திட்டத்தின் வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் "சமூகக் கல்வி" என்ற தலைப்பின் கீழ் செய்யத்தக்க செலவினங்களைப் பற்றி விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. டவுன் ஷிப்புகள், நகராட்சிகள் கன்டோன்மென்டுகளாக இருக்கும் அல்லது அமைக்கப்பட இருக்கும் பகுதிகள் நீங்கலாக எல்லா அபிவிருத்தி வட்டாரங்களிலும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்பட்டு விட்டன. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின் கீழ் அரசாங்கம், சமூகக் கல்வித் திட்ட நிர்வாகம் உட்பட சமுதாய நலத் திட்டத்தின் தேசீய வளர்ச்சிப் பணித் திட்டத்தை, பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த ஒப்படைப்பு அரசாங்கம் அவ்வப்போது குறிப்பிடும் விதிமுறைகளுக்குட்பட்டதாகும். இதுவரை அமைக்கப்பட்ட எல்லா பஞ்சாயத்துக்களிடமும் சமுதாய நலத்திட்ட ஒப்படைப்பு சம்பந்தமான ஆணைகளை அரசாங்கம் பிறப்பித்துள்ளது.

2. கிராம நல தல நிர்வாகத்துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க. ஆணை 664-ல், மூன்றுவது திட்டக் காலத்தில் ஐந்தாண்டுகளுக்கான ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் வகுத்துக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 21- ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், பஞ்சாயத்துக்கும் கிடைக்கத்தக்க பொருளாதார உதவிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆணையில் வகுத்துள்ளபடி பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஓர் ஆண்டுக்கு தலைக்கு 10 ந.பை.யும் 5 ஆண்டுகளுக்கு தலைக்கு 50 ந.பை.யும் ஈட்டு மானியமல்லாத மானியமாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் சமூகக் கல்வித் திட்ட நிறைவேற்றத்திற்கென்று கொடுக்க வகை செய்கிறது. பஞ்சாயத்து யூனியனுக்கு சமூகக் கல்வி மானியமாக ஆண்டுதோறும் கிடைக்கக்கூடிய தொகை அதனுடைய ஜனத்தொகையை ஒட்டி 7,000 ரூபாயிலிருந்து 8,000 ரூபாய் வரை இருக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

3. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்கீழ் சமுதாய நலத் திட்டத்தின் தேசீய வளர்ச்சிப் பணித் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் ஒப்படைத்ததன் விளைவாகவும், மாதர் நலத்துறை திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாகவும் கிராமத் நலத் துறையில் 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 483-ன் இணைப்பில் பகுதி II-ல் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்ககளில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதன்படி 'சமூகக் கல்வி'க்காக ஒரு திருத்தப்பட்ட மாதிரித் திட்டம் வகுக்கப்பட்டு பஞ்சாயத்து யூனியன்களின் வசதிக்காக இந்த ஆணையின் இணைப்பில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. சமுதாய நலத் திட்டத்தை பஞ்சாயத்து யூனியன்களிடமும், பஞ்சாயத்துக்களிடமும் ஒப்படைப்பதன் அடிப்படை நோக்கமே அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அரசாங்க மானியங்களை அந்தந்த பிரதேசத்திலே திட்டமிட்டு பயன்படுத்தத்தக்க நிலை வேண்டுமென்பதுதான் என்பதை பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்த விரும்புகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன்கள் இணைப்பில் குறிக்கப்பட்டுள்ள செலவினங்களை நிர்வாக முறைப்படி அங்கீகரித்து ஒவ்வொரு வட்டாரத்தின் பிரதேச நிலைமைகளுக்கேற்ப வேலை முறையை வரை எடுத்துக்கொள்ளலாம். சமூகக் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவேண்டிய திட்டங்களை வகுக்கும்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் தலைக்கு 10 ந.பை. என்ற வருடாந்தர அரசாங்க மானியத்துக்கு மட்டுமே வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். இருந்தபோதிலும் அவைகளில் சொந்தவருவாய்களிலிருந்து மேலும் அதிகத் தொகையை செலவு செய்வது அவைகளின் விருப்பத்தையும், வருமானத்தையும் பொருத்ததாகும். மேலும், இது சம்பந்தமாக செலவுகளைச் செய்வதற்கு கலெக்டர் அல்லது அரசாங்கத்தில் முறையான அனுமதி ஒன்றும் தேவையில்லை. கீழ்க்கண்ட விதிமுறைகளுக்கு ஒத்து வருமானால் குறிப்பிடப்பட்ட இனங்கள் சம்பந்தமாக அவைகளால் நிர்ணயிக்கப்பட்டவைகளை மாற்றிக்கொள்ள அவைகளுக்கு உரிமை உண்டு.

(i) இந்த ஆணையின் இணைப்பிலே கூறப்பட்டுள்ள பல்வேறு வேலைகளுக்கு செய்யப்படும் செலவுக்காக கொடுக்கப்படும் அரசாங்க மானியத்தின் மொத்தத் தொகை பஞ்சர்யத்து யூனியன் பகுதி ஜனத் தொகைக்குத் தலைக்கு 10 ந.பை. என்ற அளவுக்குமேல் போகாது.

(ii) கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1-ன் இணைப்பில் 4-வது வகையின் கீழ் (iii) துணைப் பாராவில் குறிப்பிட்டுள்ள திட்டத்தின்படி ஒவவொரு பஞ்சாயத்திலும் வானொலிப் பெட்டிகள் (Radio sets) அமைக்க ரூபாய் 2,500 க்கு மேற்படாமல் செலவு செய்ய வகை செய்யப்படவேண்டும்.

4. இணைப்பில் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்கள், சம்பந்தமாகக் கைக்கொள்ளவேண்டிய கணக்கு வைப்பு முறையை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாத முடிவிலும், மானில அரசாங்கத்திடமிருந்து மானியங்கள் பெறவேண்டிய சமூகக் கல்விக்கான மாதிரித் திட்டத்தின் பல்வேறு வேலைகளுக்கான செலவுக் கணக்கை பிரதிகள் எடுத்து சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளுக்கு பஞ்சாயத்து யூனியன் சமர்ப்பிக்க வேண்டும். ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், "47. A. சமுதாய நலத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப்பணி, தல அபிவிருத்தி வேலைகள் அபிவிருத்தித் திட்டங்கள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள், — சமுதாய நலத் திட்டங்கள்— VI. சமூகக் கல்வி" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் "பஞ்சாயத்து யூனியனுக்கு உதவி மானியம்" என்ற புதிய துணைத் தலைப்பைத் தொடங்கி இந்தச் செலவைப் பற்று வைப்பதன் மூலம் மானியங்களை அங்கீகரிக்க வேண்டும். வேண்டிய நிதிகளை, மானியத் தொகைகளுள், சேமிப்பிலிருந்தே திருப்பி குறிப்பிட்ட வேலைக்கென்று ஒதுக்கவேண்டும். அவ்வாறு ஈடு செய்யப்பட்ட செலவுகளை மார்ச் மாதம் 20 தேதிவரையில் செய்யப்பட்ட செலவுகளின் அடிப்படையில், கேட்டு பெறவேண்டும். ஈடு செய்யப்பட்ட செலவுகளின் மீதத் தொகை ஏப்ரலில் மறுபடியும் கேட்டுப் பெறவேண்டும். மூன்று மாதக் கணக்குத் தணிக்கையின்போது, ஈடு செய்யப்பட்ட செலவுகள், கேட்டுப் பெற்ற மானியத் தொகை ஆகியவற்றின் பெறத்தக்க அளவு முதலியன பரிசீலனை செய்யப்படும்.

இணைப்பு

சமூகக் கல்விக்கான மாதிரித் திட்டம்

1. 'விவசாய இளைஞர் சங்கங்கள்' அமைத்தல் : பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், விவசாய இளைஞர் சங்கம் அமைக்கப்படலாம். இந்தச் சங்கத்தின் மூலமாகவே கிராமப் பகுதிகளில் இளைஞர் சம்பந்தப்பட்ட வேலைகள் எல்லாம் செயல்படுத்தப்படும். இந்தச் சங்கம் ஓராண்டு காலம் தொடர்ந்து திருப்திகரமாக நடைபெற்று, அங்கத்தினர்கள் குறைந்த அளவு ரூ. 100 நன்கொடையாக கொடுக்கும் பட்சத்தில், பஞ்சாயத்து யூனியன் மன்றம் தோட்ட வேலைக் கருவிகள், மருந்து தூவும் கருவிகள் முதலான விவசாயக் கருவிகளை வாங்குவதற்கென்று ரூ. 100-க்கு மேற்படாத அளவில் தொடர்ந்து ஏற்படாத செலவு மானியமாக (Non-Recurring grant) வழங்கலாம்.

2. மாதர் சங்கங்களை அமைத்தல் : மாதர்-குழந்தைகள் நலத் திட்டத்தை நிறைவேற்றும் பல்வேறு ஸ்தாபனங்களை ஒன்றாக இணைத்துத் திருத்தி அமைக்கும் விஷயத்தை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து, கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1433-ல், மாநில சமூக நல போர்டைத் திருத்தி அமைத்து, மாதர்-குழந்தைகள் நலத் திட்ட சம்பந்தப்பட்ட வேலைகளுக்கெல்லாம் போர்டைப் பொறுப்பாக்கி விளக்கமான ஆணைகளை வெளியிட்டுள்ளது.

மாதர்-குழந்தைகள் நலத்திட்டத்திற்காக ஒரு தனி மானியமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்தச் சூழலில், மாதர் சங்கங்களின் அமைப்புக்காக, சமூகக் கல்வித் திட்டத்தின்கீழ் தனியாக வசதிகள் செய்யத் தேவையில்லை.

3. விவசாயிகள் மன்ற (Farmers' Forum) அமைப்பு: கிராமங்களில், விவசாயம்—அதுபோன்ற பிற விஷயங்கள் சம்பந்தப்பட்ட செய்திகளைப் பரப்புவதற்கு வயது வந்தவர்களுக்கென்று விவசாயிகள் மன்றத்தை அமைக்கலாம். விவசாயிகள் மன்றம் தனக்குத் தானே ஆதரவாக விளங்குமேயன்றி, சமூகக் கல்வி நிதிகளிலிருந்து மானியம் எதுவும் அளிக்கப்பட மாட்டாது.

4. சமுதாயப் பொழுதுபோக்கு : (i) "சமூகக் கல்வி" என்ற தலைப்பில் உள்ள நிதிகள், பஞ்சாயத்து யூனியன் சமூகக் கல்விக்காக செய்யும் செலவுக்கு உதவி மானியமாக அளிப்பதற்குப் பயன்படுத்தப்பட இருப்பதால், இப்போதைக்கு சமுதாயப் பொழுது போக்கு நிலையங்களைக் கட்டுவதற்கு நிதி வசதி ஒன்றும் செய்வதற்கில்லை. பொது வேலைக்காக மக்கள் பெருமளவில் கூடுவதற்கு, கிராமங்களில் சாவடிகள் முதலான, எல்லோருக்கும் தெரிந்த பொது இடங்கள் உள்ளன. இந்தப் பொது இடங்கள் சமுதாயப் பொழுதுபோக்கு நிலையங்களாக அபிவிருத்தி செய்துகொள்ளப்படவேண்டும். மேலும், கிராமப் பள்ளி சமுதாயப் பொது வேலைகளுக்குப் பயன்படும் வகையில் அபிவிருத்தி செய்துகொள்ளப்படலாம்.

(ii) 1958-ம் வருடத்திய, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 64 (g), (h), (i) பிரிவின்கீழ், சமூகக் கல்வி அளிப்பதற்காக, படிப்பகங்களைத் திறந்து நடத்தவும், வானொலிப் பெட்டிகள் வைத்துப் பராமரித்துவரவும், விளையாட்டு வெளிகள், பூங்காக்கள், விளையாட்டுச் சங்கங்கள், உடற்பயிற்சி நிலையங்கள் இலக்கியக் கழகங்கள் ஆகியவற்றை வைத்து நடத்தல் முதலானவைகளைச் செய்ய, பஞ்சாயத்துக்கள் உரிமை அளிக்கப்பட்டுள்ளன. மேற்படி

வேலைகளை கூடுமானவரையில் தங்கள் நிதியிலிருந்தே செய்ய பஞ்சாயதுக்கள் எடுத்துச் செய்ய தூண்டப்பட வேண்டும்.

(iii) பல பஞ்சாயத்துக்கள் இப்பொழுது படிப் பகங்களையும், வானொலிப் பெட்டிகளையும் வைத்து நடத்திவருகின்றன. அவை, வானொலிப் பெட்டிகளுக் காக 50 சத வீத உதவி நிதியை, இந்திய அரசாங்கத்திடம் பெற்றவைகளாகும். வட்டாரப் பகுதிகளில் உள்ள சில பஞ்சாயத்துக்களுக்கு, வானொலிப் பெட்டிகள் வாங்க, வட்டார நிதிகளிலிருந்து மானியம் அளிக்கப் பட்டுள்ளன. மூன்ருவது திட்டக் கால முடிவுக்குள், நிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வானொலிப் பெட்டி வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் மன்றம், "சமூகக் கல்வி" என்ற தலைப்பின்கீழ், பஞ்சா த்துக் களுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்குவதற்கு, உதவி நிதி அளிப்பதற்கென்று 2,500 ரூபாய் ஒதுக்கி வைத்துவிடும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

வானொலிப் பெட்டி வாங்குகின்ற முறைபற்றியும், உதவி நிதி வழங்குகின்ற முறைபற்றியும், அரசாங்கம் தனிப்பட்ட ஆணைகளைப் பிறப்பிக்கும். பஞ்சாயத்துக்கள், வானொலிப்பெட்டி அமைத்தல், அவ்வப்பொழுது ஏற்படும் செலவுகளான பழுது பார்த்தல், சில உபகரணஙகள், பாட்டரிகள் மாற்றுதல் முதலான செலவுகளைத் தங்கள் நிதியிலிருந்தே ஈடு செய்துகொள்ளவேண்டும்.

5. கிராம சகாயகர் பயிற்சி முகாம்கள்.—கிராம சகாயகர் பயிற்சி முகாம்களை நடத்தும் முறைகளைத், திருத்தி அமைக்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதால், இது சம்பந்தமான விவரங்கள் அரசாங்கத்தால் பின்னர் வெளியிடப்படும். ஆகவே இந்தத் திட்டத்தின்கீழ், அதற் கென எந்த நிதி வசதியும் செய்யப்படவில்லை.

6. அறிவு வளர்ச்சிக்கான இடங்களுக்குக் கிராம மக்கள் சுற்றுப்பயணம் செய்தல்.—விவசாயப் பண்ணை கள், கேந்திரக் கிராம நிலையங்கள் (Key Village Centres), மாதிரிக் கிராமங்கள், கிராமத் தொழில் நிலையங்கள், கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையங்கள் முதலான அறிவு வளர்ச்சிக்கு உதவும் இடங்களுக்கு, பஞ்சாயத்து யூனியனில் விவசாயம், இதர அபிவிருத்தி வேலைகளில் ஆழ்ந்த பங்குகொள்ளும் விவசாயிகளை, அழைத்துச் சென்று காட்டிவர, ஒரு பஞ்சாயத்து யூனிய னுக்கு, ஓராண்டுக்கு உயர்ந்த அளவு 500 ரூபாய் வரை செலவு செய்யலாம். என்று கிராம அபிவிருத்தித் திட்ட 1958ஆம் டிசம்பர்மீ 23உ தேதியிட்ட அறிக்கை எண். 93431, 1959ஆம் ஜனவரிமீ 27உ தேதியிட்ட அறிக்கை எண். 108376 ஆகியவற்றில் யோசனை கூறப்பட் டுள்ளது. அந்த அறிக்கையின்படி, சுற்றுப்பயணச் செலவில், 50 சதவீதத் தொகை விவசாயிகள் ஒற்றுக்கொள்ளவேண்டு மென்றும், ஒரு யூனியனுக்கு ஓராண்டுக்கு, "சமூகக் கல்வி" என்ற தலைப்பில் இதற்கென்று உயர்ந்த அளவு 500 ரூபாய் செலவு செய்யலாம் என்றும் வரையறுக்கப் பட்டுள்ளது.

7. முதியோர் கல்விப் பள்ளிகள்.—சமூகக் கல்வி மானியத்தின்கீழ் புதிய முதியோர் கல்வி நிலையங்கள் எதுவும் தொடங்கப்படமாட்டா. முதியோர் கல்வி நிலை யங்கள் புதியதாகத் தொடங்குவதற்கு, கல்வித்துறையில் மாநில அரசாங்கத்தின் மூன்ருவது திட்டத்தில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறையின் மூலம், இத்திட்டத் திட்டத்தை அரசாங்கம் செயல் படுத்தும். சமுதாயநலத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள முதியோர் கல்வி நிலையங்கள் சம்பந்தப்பட்டமட்டில், அவை நன்ருக நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து நடைபெறலாம் என்று யூனியன் கருதினுல், சமூகக் கல்வி மானியத்தின்கீழ், பஞ்சாயத்து யூனியனுல் வட்டாரத்தின் முதல் நிலைக்காக மட்டும் 10,000 ரூபாய் வரையில் செலவு செய்யலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

8. சமுதாயப் பொழுது போக்கு.—(i) கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1960ஆம் ஜூன்மீ 21உ தேதியிட்ட அரசாங்க ஆணை 483-ல் மக்கள் 50 சத வீதச் செலவுத் தொகையை ஏற்கும் பட்சத்தில், நாடக மேடைக் கருவிகள் வாங்குவதற்கென்று உயர்ந்த அளவு 1,000 ரூபாய் வரை செலவுசெய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ் வொரு பஞ்சாயத்துயூனியனும் நாடக மேடைக் கருவிகள், பொது மக்களின் நன்கொடையை வலியுறுத்தாமல், 1,000-க்கு மேற்படாத செலவில் வாங்கி, அதன் பாது காப்பில் வைத்திருக்கலாம் என்று இப்பொழுது கருதப் படுகிறது. வாடகைக்குப் பெறத்தக்க விலையுயர்ந்த திரைகள் முதலானவைகளை வாங்கக்கூடாது. இசைக் கருவிகள், பஜனைக் கருவிகள் முதலிய கருவிகளோ வாங்கப்படவேண்டும். இந்தக் கருவிகளை பஞ்சாயத்து யூனியன் மன்றம் வகுக்கும் விதி முறைகளுக்குட்பட்டு, கிராம மக்களுக்கு, கல்விக் கலாசார நிகழ்ச்சிகளை நடத்த வென்று வாடகைக்குக் கொடுக்கலாம். சமுதாய நலத் திட்டத்தின்கீழ் வட்டார நிதியிலிருந்து ஏற்கெனவே நாடக மேடைக் கருவிகள் வாங்கப்பட்டிருந்தால் புதிய தாக பஞ்சாயத்து யூனியன் புதிய கருவிகள் வாங்கத் தேவையில்லை.

(ii) சமுதாய நலத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே இரண்டு தொகுதி (Two Sets) இசைக் கருவிகள் வாங்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டா ரங்கள் அவற்றிடம் அதிகமாக இருக்கும். ஒரு தொகுதி இசைக் கருவிகளை, ஒரு தொகுதியும் இல்லாத பஞ்சா யத்து அபிவிருத்தி வட்டாரத்துக்குக் கொடுத்து விடவேண்டும். அவ்வாறு அதிகமாக இருக்கும் வட்டா ரங்களிடமிருந்து நாடகமேடை, இசை கருவிகளை, இல் லாத வட்டாரங்களுக்கு, மேலே குறிப்பிட்டபடி வழங்கு வதற்கு மாவட்டக் கலெக்டர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(iii) எப்போதாவது ஏற்படும் செலவுகளான, சமு தாயத்தின் கலாச்சாரத்தை எடுத்துக் காட்டும் நாடகங்களை நடத்துவதற்கு அல்லது சமூக, கல்வி, அல்லது

கலாச்சார வளர்ச்சிக்கான வேறு எந்த வேலைக்கும்—கலாச்சார நிறுவனங்களுக்கு, ஆண்டொன்றுக்கு, மொத்தமாக 100 ரூபாய்க்கு மேற்படாத அளவில் சிறுமா மானியங்கள் வழங்கலாம்.

9. **சமூகக் கல்வி நிலையங்கள்.**—கிராமங்களில் வயது வந்தோருக்காக, சமூகக் கல்வி நிலையங்கள் அமைக்கப் படலாம். வாரத்துக்கு நான்கு முறை என்ற அளவில் அடிக்கடி வயது வந்தோர் கூட்டம் நடைபெறத் தூண்ட லாம். இந்த நிலையங்களில் படிப்பறிவற்ற கிராம மக்க ளுக்குச் செய்தித்தாள்கள், கருத்திதழ்களைப் படித்துக் காட்டுதல், அன்றுடப் பிரச்னைகளைப்பற்றி அவர்கள் விவா திக்கத் தூண்டுதல் முதலானவை செய்து, இத்தகைய கூட்டங்களை கூட்டுவோராக, பிரதேசத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்கள், அல்லது வேறு படித்தவர்களை அமர்த்த லாம். கிராம மக்கள் சுதந்தரமாக விவாதங்கள் நடத்த சந்தர்ப்பம் அளிக்கப்படலாம். நிலையத்தை நடத்து பவருக்கு, மானியத்திலிருந்து படித்தொகை (allowance) எதுவும் கொடுக்கப்படமாட்டாது. செய்தித் தாள்கள், கருத்திதழ்கள், எழுதுபொருள் முதலானவற்றுக்கென்று ஒவ்வொரு நிலையத்துக்கும் ஓராண்டுக்கு 100 ரூபாய்க்கு மேற்படாமல் ஒரு மானியம் வழங்கலாம்.

10. **கிராம நூல் நிலையங்கள் நிறுவுதல்.**—பஞ்சாயத்துக் களால் நடத்தப்படும் கிராம நூல் நிலையங்களுக்கு உயர்ந்த அளவு 200 ரூபாய் அல்லது புத்தகங்கள் வாங்கும் செலவில் 50 சத வீதம் எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகையை மானியமாக வழங்கலாம். கிராம நூல் நிலையக் கட்டடம் கட்ட மானியம் ஒன்றும் கொடுக்கப்படமாட்டாது. ஒரு கிராம நூல் நிலையத்துக்கு, புத்தகங்கள் வாங்க மானியம் ஒரு முறைமட்டுமே கொடுக்கப்படும்.

11. **சமுதாயச் சுவரொட்டிகள், செய்தியறிவிப்பு அட்டவணைகள், செய்திச் சுவரொட்டிகள் முதலியன.**—ஒவ்வொரு கிராமமும், விவசாயம், கால்நடைப் பாது காப்பு, பொது சுகாதாரம் முதலான பல்வேறு வேலைகளில், அந்த கிராமத்தின் சாதனைகள் சம்பந்தப்பட்ட அடிப்படையான செய்திகளை விளக்கும் ஒரு செய்தியறிவிப்பு அட்டவணை பெற்றிருக்கவேண்டும் சமூகக் கல்வி மானியத்திலிருந்து இதற்கென்று செலவுத் தொகை ஒதுக்கப்படமாட்டாது.

12. **குழந்தைகள் பூங்கா.**—ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தைகள் பூங்காவை அமைத்து அதற்குத் தேவை யான கருவிகள் முதலான வசதிகளைச் செய்து வைக்கும்படி பஞ்சாயத்துக்கள் தூண்டப்படவேண்டும். சமூகக் கல்வி மானியத்திலிருந்து குழந்தைகள் பூங்காக் களுக்கு மானியம் அளிக்கப்படமாட்டாது.

13. **விளைச்சல் போட்டி, பொருட்காட்சி, கால்நடைக் காட்சி, விழாக்கள் முதலியன.**—பஞ்சாயத்து யூனியனில் பயிர் விளைச்சல் போட்டி, பொருட்காட்சி, கால்நடைக் காட்சி முதலானவற்றை நடத்துவது விரும்பத்தக்க தாகும். இந்த வேலைகளுக்காக, ஓராண்டுக்கு, ஒரு யூனியனுக்கு உயர்ந்த அளவு 500 ரூபாய் வரையில் செலவு செய்யலாம். எந்தெந்த வகைக்கு, எவ்வளவு செலவு செய்யலாம் என்பது பஞ்சாயத்து யூனியன் மன் றத்தின் முடிவுக்கே விடப்படுகிறது.

14. **விளையாட்டுக்கள், விளையாட்டுப் போட்டிகள் முதலியன நடத்தல்.**—கிராம மக்களிடையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், பஞ்சாயத்து யூனியன் மன்றங் கள், போட்டிகள் நடத்தவும் ஓராண்டுக்கு, ஒரு யூனியன் உயர்ந்த அளவு 300 ரூபாய் வரை செலவு செய்யலாம்.

15. **பள்ளி நிகழ்ச்சிகள்.**—காய்கறித் தோட்டம் போடு தல், சிறுநீர்க் கழிக்குமிடங்களைச் சீர்திருத்துதல், கழி வறைகள் கட்டுதல், மதிய உணவுத் தயாரிப்புக்குப் புகை யில்லா சுலா (Chulas) தயாரித்தல், ஈரக் குழிகள் அல்லது சிறுநீர்க் கால்வாய்கள் கட்டுதல் முதலிய வேலைகளுக்கு ஒரு பள்ளிக்கு உயர்ந்த அளவு 30 ரூபாய் வரையில் கொடுக்கலாம். பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர் களைப் பொறுத்து அதிகமாகவோ அல்லது ஒரு முறை கொடுக்கப்பட்ட பள்ளிக்கு மறு முறையோ கொடுக்கப்பட மாட்டாது. ஒரு பள்ளி, ஒரு முறை—30 ரூபாய் வரையில் மட்டுமே இதற்கென்று பெற முடியும்.

16. **செய்தி நிலையம்.**—வட்டாரத் தலைநகரில், ஒரு செய்தி நிலையத்தை நடத்துவதற்கு, "சமூகக் கல்வி" என்ற தலைப்பின் கீழ், ஆண்டொன்றுக்கு 400 ரூபாய் செலவு செய்யப்படலாம்.

17. **'ஒலி—காட்சி' கருவி.**—(i) படக் காட்சி வண்டிகள், படப் பிடிப்புக் கருவி (Hand Camera) ஒலி பெருக்கிக் கருவிகள் ஆகியன சில வட்டாரங்களில் உள்ளன. ஒவ் வொரு மாவட்டத்திலும் உள்ள, படக் காட்சிக் கருவி கள், மற்ற ஒலி—காட்சி—கருவிகள் மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டாரங்களுக்கும் முறையே பயன்படுத்தப்பட வேண்டும்.

(ii) படக் காட்சிக் கருவிப் பராமரிப்பு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் வசம் ஒப்படைக்கப்படவில்லை. அர சாங்கத்தால் பராமரித்துவரப்படுகிறது. இது சம்பந்த மாக, கிராம நலத் துறையின் (கணக்குப் பிரிவு) 21–6–'61 தேதியிட்ட அறிக்கை 93832–ல் கூறப்பட்டுள்ள விளக்கங் கள் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. அதன்படி, வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் என்ற முறையில், படக் காட்சிக் கருவிப் பராமரிப்புச் செலவுகளைப் பெற்று, வழங்குகின்ற அதிகாரி களாகவும், கீழைக் கஜானுவிலிருந்து நேரடியாகப் பட்டியல் களைப் பெற்று, செலவுகளை மாநிலக் கணக்குகளின் பொருத்தமான தலைப்புக்களில் பற்று வைக்கின்ற அதி காரிகளாகவும், தொடர்ந்து பணியாற்றுவார்கள். படக் கருவியை இயக்குபவருக்கு சம்பளமும், படிச் செலவுகளும் கொடுப்பதனுல், ஆகும் செலவுகள் ஒலி—காட்சிக் கருவிப் பராமரிப்புச் செலவுகளின் பகுதியாகவே கருதப் பட்டு அதே கணக்குத் தலைப்பின் இடமளிக்கப்படும். ஆகை யால் படக் காட்சிப் பராமரிப்புச் செலவு, கருவியை

இயக்குபவரின் சம்பளம்—படிச் செலவு ஆகியவை பற்று வைக்கத் தக்க மாநிலக் கணக்குத் தலைப்பு, " 47–எ. சமுதாய நலத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி—தல அபிவிருத்தி வேலைகள்—பி. அபிவிருத்தித் திட்டங்கள்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள திட்டங்கள்—சமுதாய நலத் திட்டங்கள்—VI. சமூகக் கல்வி 2. இதர செலவுகள்." என்பதாகும்.

(iii) பொதுத் துறையின் (கிராம அபிவிருத்தித் திட்டங்கள்) 17-7-1958 தேதியிட்ட அரசாங்கஆணை 1992-ல் படச் சுருள், படத் துண்டுகள் (Slides) ஒலிப் பதிவுச் சுருள் முதலியன வாங்க வழங்கப்பட்டிருந்த அனுமதி 2-3-1961 தேதியிட்ட அறிக்கை 122750-ல் பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின் மூலம் ரத்து செய்யப்பட்டது.

18. **கிராம சேவகிகளுக்கு செய்முறை காட்சிக் கருவி.**— பொதுத் துறையின் கிராம அபிவிருத்தித் திட்டங்கள் 16-1-1958 தேதியிட்ட அரசாங்க ஆணை 109-ல், கிராம சேவிகைகளுக்குச் செய்முறைக் காட்சிக் கருவி வாங்க— வழங்கப்பட்டிருந்த அனுமதி ரத்து செய்யப்பட்டது. கிராம சேவிகைகள் மாதர்நலத் துறையின்கீழ் பணியாற்றத் தொடங்குவர்.

19. **விழாக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றின் செலவு முதலியன.**— கூட்டுறவுச் சங்கங்களின், உறுப்பினர் வார விழா, சர்வோதய இலக்கிய வார விழா முதலின விழாக்களை நடத்துவதனால், " சமூகக் கல்வி " என்ற தலைப்பின் கீழ் வரும் செலவினங்களைப் பற்றியும், மற்றத் தலைப்புக்களின் கீழ் வகை செய்யப்படாத பல வகைச் செலவுகளைப் பற்றியும் அரசாங்கம் அவ்வப்போது ஆணைகளை வெளியிடும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், மேலே குறிப்பிட்ட இனங்களுக்கு ஆகும் செலவுகளை —அரசாங்கம் அவ்வப்போதுவெளியிடும் விளக்கங்களின் படிச் சரிக்கட்டுவதுடன், அரசாங்க ஆணையில் குறிப்பிடப் பட்டுள்ள உயர்ந்த அளவு வறையறைக்குட்பட்டு செலவுகளைச் செய்ய வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் வருடம் பிப்ரவரி மாதம் 6 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 300.)

———o———

ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்த அதிகாரி அல்லது பணியாளரை வேறு எந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது பஞ்சாயத்துக்கு மாற்றுதல்—1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 60 (1) பிரிவின்கீழ் கலெக்டர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுதல்

[Act–Madras Panchayats Act, 1958—Section 60 (1)—Transfer of an officer or a Servant of a Panchayat to the service of any other Panchayat Union Council or Panchayat—Powers Under Section 60 (1) —Delegated to Collectors.]

[Proceedings of the Additional Development Commissioner–No. 15082, dated 14-2-1962]

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 30-8-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2377-ல், 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பிரிவு 60— துணைப் பிரிவு (1)-ன் கீழ், பொதுவாகப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தமட்டில் கிராம அபிவிருத்திக் கமிஷனர் மேற்பார்வையாளரின் (Inspector) அதிகாரங்களைச் செலுத்த அமர்த்தப்பட்டிருக்கிறார். கிராம நல—தல நிர்வாகத் துறையின் 5-12-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 3202-ல், 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—பிரிவு 157 (2), (3)-ன் கீழ், கிராம அபிவிருத்திக் கமிஷனரும், கலெக்டர்களும் மேற்பார்வையாளரின் அதிகாரங்களைச் செலுத்த அமர்த்தப்பட்டிருக்கின்றனர். ஒரு பஞ்சாயத்தில் பணியாற்றும் ஒரு அதிகாரி அல்லது பணியாளரை (நிர்வாக அதிகாரி உள்பட) மாவட்டத்திற்குள் வேறு ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது பஞ்சாயத்துக்கு மாற்ற—கிராம அபிவிருத்திக் கமிஷனர் இதன் மூலம் கலெக்டர்களுக்கு அதிகாரத்தை ஒப்படைக்கிறார்.

இணைப்பு

விளம்பரம்

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் (1958-ம் ஆண்டின் சென்னைச் சட்டம் XXXV) 157-வது பிரிவு துணைப் பிரிவு (3)-ன் கீழ்—மேற்பார்வையாளர் என்ற முறையில் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைச் செலுத்துகின்ற முறையில், கிராம அபிவிருத்திக் கமிஷனர், மேற்படி சட்டத்தின் பிரிவு 60 துணைப் பிரிவு (1)-ன் கீழ் ஒரு பஞ்சாயத்தின் எந்த அதிகாரி அல்லது பணியாளரை (நிர்வாக அதிகாரி உள்பட) மாவட்டத்திற்குள் வேறு ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது வேறு ஒரு பஞ்சாயத்துக்கு மாற்றுகின்ற அதிகாரத்தைச் செலுத்த—கலெக்டர்களுக்கு அதிகாரமளித்து அறிவிக்கிறார்.

(கிராம அபிவிருத்திக் கமிஷனரின் நடைமுறைகள், 1962 வருடம், பிப்ரவரி மாதம் 14ம் தேதிய குறிப்பு எண். 15082)

விவசாய உற்பத்தித் திட்டத்திற்கு விவசாய மானியத்தின் முன்பணத்தைப் பயன்படுத்துதல்

[Panchayat Development—Agricultural Production—Utilisation of Agricultural grant–Advance Payment—Regarding]

[Memorandum No. 205657, R.D. Accts. Spl., dated 23rd January 1962.]

கிராம நல தல நிர்வாகத் துறையின் 26-9-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2606-ன் படி அரசாங்கம், முதல் இரண்டாவது தொகுதிகளைச் சேர்ந்த ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், விவசாய திட்டம் நிறைவேற்ற ஆகும் செலவுகளுக்கென்று 10,000 ரூபாய் முன்பண மானியமாக ஒதுக்கி வகை செய்துள்ளது. இந்த முன்பணம், மூன்று மாதத்திற்கொரு முறை மாவட்ட விவசாய அதிகாரியிடமிருந்து கமிஷனர்கள் கேட்டுப் பெறுகின்ற உதவி மானியங்கள் கணக்கில் சரிசெய்துக்கொள்ளப்படும் என்றும், அந்தத் தொகைகள் முழுத் தொகையான 10,000 ரூபாயும் செலவு செய்யப்பட்டு. கணக்கு எழுதப்பட்ட பின்னர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால் அனுப்பப்படும் அசெலவு விவரத்தின் அடிப்படையில்தான் மாவட்ட விவசாய அதிகாரியால் செலவு சரிக்கட்டப்படும் என்றும் அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது.

2. செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் தம்முடைய 16-10-1961 தேதிய கடிதத்தில் இந்த 10,000 ரூபாய் தொகை பஞ்சாயத்து யூனியனுக்கு மேலும் மேலும் அளிக்கப்படும் முன்பணமாக இருக்க வேண்டுமென்றும் மூன்று மாதத்தில் எந்த அளவுத் தொகை செலவு செய்யப்பட்டாலும் பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த திட்ட நிறைவேற்றத்திற்கு வேண்டிய நிதிகள், அவற்றின் செலவை சரிக்கட்டும் வகையில் இருக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

3. செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டரின் ஆலோசனையை அரசாங்கம் நன்கு ஆராய்ந்தது. அதன்படி, செலவை சரிக்கட்டுவதற்கான முன்பணம் எதுவும் கொடுக்கத் தேவையில்லையென்றும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அவற்றின் வரிவசூலுக்கு ஏற்ப அளிக்கப்படும் முன் பணங்களே போதுமான நிதிகள் ஆகும் என்றும் ஆகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன்கள் விவசாய மானியத்தை திட்ட நிறைவேற்றத்துக்குப் பின்னர் பெறுகின்ற மானியமாக, **தேவையானல் மாதாந்த அடிப்படையில்** பெற்றுக்கொள்ளலாம். நடைமுறை ஆண்டில் 10,000 ரூபாய் முன்பணத்தில் பயன்படுத்தப்படும் தொகைகள் ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளால், வட்டாரப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் 47–எ என்பதன் கீழ் செலவுகள் சரிக்கட்டப்படும். வட்டாரமல்லாத பகுதிகளைப் பொறுத்த மட்டிலுமே இந்தச் செலவு சரிக்கட்டும் வேலை “40—விவசாயம்” என்பதன்கீழ் மாவட்ட விவசாய அதிகாரிகளால் செய்யப்படும். மேற்குறித்த ஏற்பாடு நடைமுறை ஆண்டுக்கு (1961-62) மட்டிலுமே ஆகும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 23-1-62 தேதியிட்ட அறிக்கை எண் 205657)

பஞ்சாயத்து அரசினர் இதழ்
(PANCHAYAT GAZETTE)
மே, 1962

பொருளடக்கம்

ஆணை (அல்லது) அறிக்கை வெளியிட்ட அரசாங்கத் துறை.	ஆணை (அல்லது) அறிக்கை எண்.	ஆணை (அல்லது) அறிக்கை தேதி.	பக்கட்
கிராமநல—தல நிர்வாகத்துறை	அறிக்கை : 220296	12—3 —62	i
பொதுத்துறை	ஆணை : 64	8—1 —62	i
கிராமநல—தல நிர்வாகத்துறை	ஆணை : 3428	29—12—61	ii
,,	சுற்றறிக்கை : 18033	25—3 —62	iv
,,	அறிக்கை : 10509	28—2 —62	iv
,,	ஆணை : 797	31—4 —62	v
,,	அறிக்கை : 206144	26—3 —62	viii
,,	ஆணை : 725	26—3 —62	x
,,	ஆணை : 640	17—3 —62	xiii
,,	ஆணை : 800	31—3 —62	xiii
,,	ஆணை : 319	9—2 —62	xv
பொதுத்துறை	ஆணை : 2155	30—12—61	xvi
கிராமநல—தல நிர்வாகத்துறை	ஆணை : 427	22—2 —62	xvi
,,	ஆணை : 300	6—2 —62	xvii
,,	நடைமுறை அறிக்கை : 15082	14—2 —62	xxi
,,	அறிக்கை : 205657	23—1 —62	xxii

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



நீலகிரிப் பிரதேசத்தில் மாதர் நலப் பணிகளும்—பொழுது போக்கு வசதிகளும்

1. மாதர் நூல்நூற்றல்.

2. மேஜை அருகே உட்கார்ந்திருக்கும் பெண் டாக்டரிடம் தாய்மார்கள் குடும்பக்கட்டுப்பாடு பற்றிய விவரங்களை அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

3. தையல், பின்னல், ஒயிலாட்டம் முதலியன, மாதர் சங்கங்களின் மூலம் பெண் குழந்தைகளுக்குக் கற்றுத் தரப்படுகின்றன.

4. ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகளை மக்கள் அறியச் செய்வதில் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன.

5. கால் பந்தாட்டம் இந்தப் பிரதேசத்தில் மிகவும் பிரசித்தமானது.

Regd. No. M. 7277

© தமிழ்நாடு அரசாங்கம், 1962.



1. அமெரிக்க ஜனாதிபதியின் அந்தரங்க உதவியாளர் திரு ஆர்தர் ஷ்லேசிங்கரும் (Sri Arthur Schlesinger, Special Assistant to the President of U.S.A.) சமாதானத்திற்கான அமெரிக்க உணவு வேலைத்திட்ட இயக்குநர் திரு ஜார்ஜ் மக்கவர்னும் (Sri George Mc Govern, Director, United States Food for Peace Programme,) சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர். செங்கல்பட்டு மாவட்டத்தில் கிராமங்களைப் பார்வையிட்டார்கள்.

2. நீலகிரி மாவட்டத்தில் இளைஞர்களிடையே தொழில் நுட்பக்கலை பரவுவதற்காக மாவட்டத் தொழிற் கல்வி அதிகாரி ஏற்பாடு செய்துள்ளார்.

3. குடும்பப் பண்பாட்டுக்கேற்ற கலை நிகழ்ச்சிகள் மாதர் சங்கங்கள் மூலம் குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படுகின்றன.